மேகமூட்டம்/மழை
மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழைக்கான சாத்தியங்கள் உண்டு

24

யாழ். - 20/=
வன்னி - 20/=

உதயன்


மரம் நடுவோம்

சுடர்: 29 கதிர்: 345 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 20, வியாழன் 06.11.2014

stay connected with uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

# 3 ஆவது தடவையும் போட்டியிட முடியுமா?

## உயர்நீதிமன்ற விளக்கத்தை நாடினார் மஹிந்த ராஜபக்ஷ





(அ) 18 ஆவது திருத்தத்தின் மூலமாக மாற்றம் செய்யப்பட்ட அரசமைப்பின் உறுப்புரை 31 (அ) (அ) (ஐ) அமைவாக தற்போது ஜனாதிபதியாக இரண்டாவது தவணைக்காலத்தில் பதவி வகிக்கின்ற நான், 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பித்த எனது பதவிக்காலத்தின் நான்கு வருடப் பூர்த்தியை அடுத்து மேலும் ஒரு தவணைக்காலத்துக்காக தேர்தல் ஒன்றின் மூலமாக ஜனாதிபதிப் பதவிக்காக மக்களின் ஆணையைக் கோரும் எனது நோக்கத்தை பிரகடனப்படுத்துவதற்கு ஏதேனும் தடைகள் உள்ளனவா எனவும்

அத்தோடு –

(ஆ) 18 ஆவது திருத்தத்தின் மூலம் மாற்றம் செய்யப்பட்ட அரசமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடப்பு ஜனாதிபதி என்ற வகையில் நான் 18 ஆவது திருத்தத்தை மேற்கொண்ட தினத்தில் ஜனாதிபதிக்கான இரண்டாவது தவணைக்காலத்தை வகித்துக்கொண்டிருந் தமையானது மேலுமொரு தவணைக்காலத்துக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஏதேனும் தடையாக அமையுமா?

கொழும்பு, நவ6

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியுமா? என்பது குறித்து வாதப் பிரதிவாதங்கள் தீவிரமடைந்துள்ளன. இந்தநிலையில், 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைய மேலுமொரு தவணைப் பதவிக் காலத்துக்காகத் தேர்தலில் போட்டியிட தடை உள்ளதா? என்பது தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் நிலைப்பாட்டை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்குமாறு ஜனாதிபதி உயர்நீதிமன்றத்திடம் விளக்கம் கோரியுள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருக்கு உயர்நீதிமன்றப் பதிவாளரால் அனுப் பிவைக்கப்பட்டுள்ள கடிதமொன்றினூடாக இந்த விடயம் உறுதிப்படுத்தியுள்ளது. அரசியல் சாசனத்தின் உறுப்புரை 129 (1) இற்கு அமைவாகவே ஜனாதிபதி உயர்நீதிமன்றத்தை நாடியுள்ளார் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி உயர்நீதிமன்றத்

❖19 ஆம் பக்கம் பார்க்க

## பொய் கூறித் திரிகிறார் வட மாகாண ஆளுநர்

### சி.வி.கே. சிவஞானம் சீற்றம்

யாழ்ப்பாணம், நவ.6

வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்டது என்று கூறப்படும் 3 ஆயிரத்து 955 மில்லியன் ரூபா நிதி, வடக்கு மாகாண சபைக்கு வழங்கப் படவில்லை. அந்த நிதி வடக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்டு விட்டது என்றும், அதனை வடக்கு மாகாண சபை செலவு செய்யாது உள்ளது என்றும் குற்றஞ்சுமத்துகின்றனர். உண்மையில் அந்த நிதிக்கும் வடக்கு மாகாண சபைக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை"– இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

"வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதி, செலவு செய்யப்படவில்லை. அதனால் அந்த நிதி திரும்பிச் செல்கின்றது என்று வடக்கு மாகாண ஆளுநரும், வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித்

❖19 ஆம் பக்கம் பார்க்க

## சிகிச்சை பெறுவதற்கு சென்ற மனைவி இப்போது எங்கே?

### ஆணைக்குழுவிடம் கணவர் கேள்வி

யாழ்ப்பாணம், நவ. 6

செட்டிகுளம் நலன்புரி நிலையத்திலிருந்து சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட எனது மனைவி எங்கே? என்று உபதபால் அதிபரான கணவர் ஆணைக் குழுவினரிடம் நேற்றுக் கேள்வியெழுப்பினார்.

இதே, போன்று மருத்துவ சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட பலர் காணாமற் போயினர் என்று 8 பேர் நான்கு நாள்களிலும் சாட்சியமளித்தனர். முல்லைத்தீவில் இரண்டாவது தடவையாகவும் இடம்பெற்ற காணாமற் போனோர் தொடர்பான அமர்விலேயே, போரிலிருந்து காயங்களுடன்

❖19 ஆம் பக்கம் பார்க்க

## கொத்துக் குண்டுகள் குறித்து விசாரணை!

### ஆனால் எப்போது என்பதை கூறமறுக்கிறது ஆணைக்குழு

யாழ்ப்பாணம், நவ. 6

புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீதான ஷெல் தாக்குதல் மற்றும் போரின் போது கொத்துக் குண்டு பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப் படும் எனத் தெரிவித்த ஆணைக்குழுவின் தலைவர், அந்த விசாரணை எப்போது, எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பது தொடர்பில் கூறுவதற்கு மறுத்துவிட்

❖19 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு - மு.கா. கொழும்பில் சந்திப்பு

### பேச்சைத் தொடரவும் இணக்கம்

கொழும்பு, நவ.6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் நேற்று மாலை கொழும்பில் சந்திப்பு நடைபெற்றுள்ளது. கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள மு.கா. தலைவர் ரவூப், ஹக்கீமின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தன், கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனா

❖22 ஆம் பக்கம் பார்க்க

## விசாரணை பற்றி கேட்க வேண்டாம்

### மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம கூறுகின்றார்

யாழ்ப்பாணம், நவ. 6

போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தினரிடம், அருட்தந்தை பிரான்ஸிஸ் உடன் சரணடைந்து காணாமற் போனவர்கள் தொடர்பிலான விசாரணை முடிவு தொடர்பில் என்னிடம் கேட்க வேண்டாம். நாம் இப்போது தான் விசாரணையின் ஆரம்பக் கட்டத்தில் இருக்கின்றோம் - இவ்வாறு காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர்

❖19 ஆம் பக்கம் பார்க்க



ஆணைக்குழுவிடம் நேற்று கண்ணீருடன் சாட்சியமளிக்கும் முதியவர் ஒருவர்.

## இறப்புச் சான்றிதழ் வழங்க கடிதங்கள்

### முல்லைத்தீவில் ஆணைக்குழு மும்முரம்

யாழ்ப்பாணம், நவ. 6

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழு, பதிவுகளை மேற்கொள்ள வருபவர்களுக்கு இறப்புச்சான்றிதழ் வழங்குவதற்கான கடிதத்தை வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. ஜனாதிபதி ஆணைக்குழு, இதுவரை காலமும் காணாமற் போனவர்கள் தொடர்

❖22 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

"ஒவ்வொரு மரம் நடப்படும் போதும் சமாதானத்துக்கான விதை ஊன்றப்படுகின்றது"

- வங்காரி மாதாய் (அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)

# பிரபாகரனது பாதையிலேயே மு.கா. பயணம் செய்கின்றது

## ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ எச்சரிக்கை

கொழும்பு, நவ.6

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் வழியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பயணிக்கிறது எனக் குற்றஞ்சாட்டிய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ, அம்பாறை மாவட்டத்தில் தனி அலகு கோருவது மிகவும் ஆபத்தானவிடயம். அதற்கு இடமளித்தால் தென்பகுதியிலும் பல மாவட்டங்களில் தனி அலகுக் கோரிக்கைகள் வலுப்பெறும் என்றும் எச்சரித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சட்டம், ஒழுங்கு அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

"அம்பாறை மாவட்டத்தில் கல்முனை கரையோர மாவட்டம் என்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தனி அலகுக் கோரிக்கை மிகவும் பாரதூரமானது. இனவாதம், மதவாதம் ஊடாக இளைஞர்களைத் தூண்டிவிடும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. அமிர்தலிங்கம் செய்ததைத்தான் இன்று மு.கா. செய்கிறது. பிரபாகரன் தனது மக்களுக்காக மட்டும் உரிமை கேட்டதால் தான் போர் வெடித்தது. பிரபாகரன் எல்லா மக்களுக்கும் சேர்த்து உரிமை கேட்டிருந்தால் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது.

பிரபாகரன் கோரியதைத்தான் மு.கா. இன்று முன்வைக்கிறது. பிரபாகரன் வழியில்தான் மு.கா. பயணிக்கிறது. மு.கா. அரசை விமர்சிப்பதாக வெளியில் காட்டிக்கொண்டாலும், அரசுடன் தொடர்ந்து இருக்கவும், அரசிடமிருந்து தமக்குக் கிடைக்கும் சலுகைகளைப் பாதுகாக்கவுமே விரும்புகின்றது. அத்துடன், சிங்கள, முஸ்லிம் மக்களிடையேமுரண்பாடுகளையும்தோற்றுவிக்கிறது."- என்றும் அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார். (ற)

### வடக்கின் வசந்தத்தால் பிரச்சினை தீராது

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

"உயர்ந்த கட்டடங்களை நிர்மாணித்தல், காப்பெட் வீதிகளை அமைத்தல், வடக்கின் வசந்தம் போன்றவை அங்குள்ள மக்களின் பிரச்சினைகளை ஒருபோதும் தீர்த்துவிடாது. வடக்கு மக்களின் இதயங்களைஎம்மால்வெல்லமுடியவில்லை; அவர்களுடன் நட்புப் பாலத்தை அமைக்க முடியவில்லை.

அங்கு பல கைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. குறிப்பாக, காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை மூடப்பட்டு அங்கு இராணுவம் நிலைகொண்டுள்ளது. இந்தத் தொழிற் சாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதன்மூலம் அங்குள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும்."- என்றும் குறிப்பிட்டார்.

### நீதித்துறை

"எமது நாட்டின் பொலிஸ் மற்றும் நீதித்துறை வீழ்ந்துள்ளன. சட்டத்தை உருவாக்கவேண்டும், சட்டத்திற்குட்பட வேண்டும். அதேபோல் ஆட்சி செய்ய வேண்டும். ஆட்சிக்குட்படுத்தப்படுவோரும் சட்டத்திற்குட்படவேண்டும். ஆனால், இங்கு அப்படியான நிலைமை உள்ளதா?

இந்திய மத்திய அரசையே ஆட்டிப்படைத்த தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவை ஊழல் குற்றச்சாட்டில் கைதுசெய்து சிறையில் அடைத்தது அந்நாட்டு நீதித்துறை. அவ்வாறான தொரு நீதித்துறைதான் இங்கும் வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதேபோல் 24பேரை மட்டுமே கொண்ட அமைச்சரவையையும், தகவலறியும் உரிமையையும் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

எனவே, இலங்கை நாடாளுமன்றத்தின் - நீதித்துறையின் - பொலிஸ் துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்கும் வகையிலான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அவசியம்"- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற)

# முல்லைத்தீவில் நடந்த 4 நாள் அமர்வில் 175 பேர் சாட்சியம்

யாழ்ப்பாணம், நவ. 6

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த நான்கு நாள்களாக நடைபெற்ற அமர்வில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே அதிகளவிலான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சாட்சியமளித்த 175 பேரில் 73 பேர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும், 61 பேர் இராணுவத்தினருக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். அத்துடன் 166 பேர் புதிதாக முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு கடந்த 2 ஆம் திகதியில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைபெற்றது.

இதில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்ற முதல் நாள் அமர்வில், 57 பேர் அழைக்கப்பட்டிருந்த நிலையில் 44 பேர் சாட்சியமளித்தனர். அத்துடன் 18 பேர் புதிய பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். அன்றைய தினம் சாட்சியமளித்தவர்களில் 21 பேர் இராணுவத்துக்கு எதிராகவும், 17 பேர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் சாட்சியமளித்தனர்.

இரண்டாம் நாள் அமர்வுக்கும் 57 பேர் அழைக்கப்பட்டிருந்த நிலையில் 38 பேரே சாட்சியமளித்தனர். அத்துடன் 64 பேர் புதிய பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். சாட்சியமளித்தவர்களில் 13 பேர் இராணுவத்துக்கு எதிராகவும், 12 பேர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் சாட்சியமளித்தனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்ற மூன்றாம் நாள் அமர்வில் 67 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 60 பேர் சாட்சியமளித்ததுடன் 50 பேர் புதிய பதிவுகளை மேற்கொண்டனர். சாட்சியமளித்தவர்களில் இராணுவத்திற்கு எதிராக 20 பேரும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக 26 பேரும் சாட்சியமளித்தனர்.

இறுதி நாளான நேற்று 49 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 33 பேர் சாட்சியமளித்தனர். அத்துடன் 34 பேர் புதிய பதிவுகளை மேற்கொண்டனர். சாட்சியமளித்தவர்களில் 18 பேர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும், 7 பேர் இராணுவத்துக்கு எதிராகவும் சாட்சியமளித்தனர்.

இதேவேளை கடந்த நான்கு நாள் அமர்விலும் 14 பேர், தமது உறவுகளை இராணுவத்தினரிடம் நேரடியாக கையளித்தமை தொடர்பில் சாட்சியமளித்திருந்தனர். வட்டுவாகலில் வைத்து சரணடைந்தமை மற்றும் ஓமந்தையில் வைத்து சரணடைந்தமை தொடர்பில் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். (ற-5)



நேற்று நடைபெற்ற ஆணைக்குழு அமர்வில் சாட்சியமளிக்கும் ஒருவர்.

# ஐரோப்பிய மீன் தடையால் வருடாந்தம் 13 பில். இழப்பு

கொழும்பு, நவ.6

இலங்கையில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடை அடுத்த ஆண்டு நடைமுறைக்குவரவுள்ளநிலையில், அதனால் வருடத்துக்கு 13 பில்லியன் ரூபா இழப்பு ஏற்படும் என்பதுடன், 30 ஆயிரம் மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளும் முற்றாகப் பாதிக்கப்படும் என மீனவர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

மீனவர் சங்கப் பிரதிநிதிகளின் கூட்டம் நேற்றுமுன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது. அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடைகளை நீக்க அரசாங்கம் சிரத்தை காட்டவில்லை. 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு எச்சரிக்கை ஒன்றை அனுப்பியது. அதில் இலங்கையில் சட்டவிரோத முறையிலான மீன்பிடி முறைகளை அரசு கட்டுப் படுத்த வேண்டும் எனவும் கூறப்பட்டிருந்தது. ஆனால் இதுவரை அரசு இது தொடர்பில் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை - என்று தேசிய மீன்பிடி ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைவர் ஹேர் மன் குமார அங்கு குற்றஞ்சாட்டியுள்ளார் என்றும் தெரிவிக்கப் படுகின்றது (ற)



# மரக்கன்று கண்காட்சி நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணம், நவ. 06

நல்லூர், சங்கிலியன் பூங்காவில் மரக்கன்றுகளின் கண்காட்சியும் விற்பனையும் நேற்று ஆரம்பமானது. வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் வடக்கிலுள்ள நாற்றுமேடையாளர்களால் இந்த கண்காட்சி நடத்தப்படுகிறது. ஐந்து நாள்களுக்குக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது. பூமரக்கன்றுகளும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கண்காட்சியில் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு செடிகள், மரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஏனையோருக்கு மலிவு விலையில் விற்கப்படுகின்றன. வடமாகாணத்தில் நாற்றுமேடை உற்பத்தியில் ஈடுபடும் 30க்கும் மேற்பட்ட சிறுதொழில் முயற்சியாளர்கள் இந்தக் கண்காட்சியில் தமது உற்பத்திகளைக் காட்சிப்படுத்தியுள்ளனர்.

கண்காட்சியை வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சர் தி.குருகுலராஜா ஆரம்பித்து வைத்தார். அமைச்சர்பொ.ஐங்கரநேசன், மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், உறுப்பினர்கள் விந்தன், கஜதீபன், ஆர்னோல்ட், பரஞ்சோதி ஆகியோரும் நிகழ்வில் பங்கெடுத்தனர்.

கார்த்திகை மாதம் வடக்கின் மரம் நடுகை மாதமாக ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் அதனை ஊக்குவிக்கும் வகையில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

"இதுபோன்ற நடவடிக்கைகள் இனிவரும் காலங்களில் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இறந்தவர்களுக்காகத் தீபம் ஏற்றுவதும் மரம் நடுவதும் எமது பண்பாடு. எனவே கார்த்திகை மாதத்தில் மரம் நடுவதற்கு நாமெல்லோரும் கடமைப்பட்டுள்ளோம்" என்றார் அமைச்சர்.

மரங்கள் நாட்டப்படுவதால் ஏற்படும் பயன், அதன் மூலம் மண் வளம் பெறும் முறைமை குறித்த விளக்கங்களும் கண்காட்சியில் பாடசாலை மாணவர்களுக்கு நேற்று வழங்கப்பட்டன. (ற-21)









# உதயன்

கிளாசிக்

விலை ரூபா 20/-

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 20 வியாழன் (06.11.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 345


# ஐ.நா. விசாரணையாளர்கள் பக்கச்சார்பான அணுகுமுறை

## கண்டிக்கிறது இலங்கை அரசு

கொழும்பு, நவம்பர் 6

**இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்ளும் ஐ.நா. விசாரணையாளர்கள் தாங்கள் அடைய விரும்பும் முடிவுக்கு அவசியமான தகவல்களை மாத்திரம் பெற முயலும் பக்கச்சார்பான அணுகுமுறையைப் பின்பற்றுவதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கண்டனம் வெளியிட்டுள்ளார்.**

விசாரணையின்போது பக்கச் சார்பின்மை மற்றும் நேர்மையுடன் தொடர்புபட்ட சில கொள்கைகளையாவது பின்பற்றப்படவேண்டுமெனவும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

குறிப்பிட்ட சில தரப்பினர் ஐ.நா. விசாரணையைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்குவது என ஏமாற்றுவதையும் அவர்களது துயரங்களைப் பயன்படுத்தித் தகவல்களைச் சேகரித்து ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு போலியான விவரங்களைச் சேகரிப்பதும் தெரியவந்துள்ளது. இவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் நெருங்கிய தொடர்புள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பான விசாரணையை வலியுறுத்தும் முக்கிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் பிரதிநிதிகளை திங்கட்கிழமை சந்தித்த வேளையே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கால எல்லையை வெளிப்படையாக நீடிப்பது வரவேற்கத்தக்கது. அதேவேளை, குறிப்பிட்ட கருத்தை வெளியிடும் குறிப்பிட்ட நபர்களுக்குச் சாதகமாக இரகசியமாக அதனை நீடிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என குறிப்பிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர், இந்தச் சந்திப்பின்போது புனர்வாழ்வு அளிக்கப்படாத முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினரான சின்னத்தம்பி கிருஸ்ணராசா என்பவரின் கைது குறித்தும் தெளிவுபடுத்தியுள்ளார்.

அமைச்சர் மேலும் குறிப்

(22ஆம் பக்கம் பார்க்க)



## இரு உள்ளூராட்சிச் சபைகளின் மோசடி தொடர்பில் விசாரணை

யாழ்ப்பாணம், நவ.6

பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறை சபைகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பில் மாகாண பொதுக் கணக்குகள் குழு விசாரணை மேற்கொண்டுள்ளது. வடக்கு மாகாண சபை நடவடிக்கைக்காக அதற்கு அறிவித்துள்ளது என்று வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித் துறை சபைகளில் மதிப்பீடு இரண்டு விடயங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. பருத்தித்துறை பிரதேச சபையில் 7 லட்சம் ரூபாவும் வல்வெட்டித்துறை நகர சபையில் 10 லட்சம் ரூபாவும் முறைகேடான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனைக் கேள்விச் சபையின் ஆவணங்களான மூலப் பிரதிப் பத்திரம், பிரதிக் கேள்விப் பத்திரம் இரண்டையும் பார்க்கும்போது பிரதிக் கேள்விப் பத்திரம் முத்திரை பதிக்கப்பட்டிருக்கும். எனவே

(22ஆம் பக்கம் பார்க்க)

## மு.காவின் கோரிக்கைய முற்றாக நிராகரித்தது அரசு

கொழும்பு. நவ.6

அம்பாறை கரையோரப் பிரதேசங்களை ஒன்றாக இணைத்துத் தனியான நிர்வாக மாவட்டம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த கோரிக்கையை அரசு முற்றாக நிராகரித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய பிரதமர் டி. எம் ஜயரத்னவே இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளார்.

பிரதமர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையில் வாழும் பெரும்பாலான முஸ்லிம் மக்கள் நாட்டில் ஐக்கியமாகவாழவே விரும்புகின்றனர். அவர்கள் நாட்டைப் பிளவுப்படுத்தி வாழ விரும்பவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கோரிக்கையின்படி அம்பாறை கரையோரப் பிரதேசங்களை ஒன்றாக இணைத்துத் தனியான நிர்வாக மாவட்டம் ஒன்றை ஏற்படுத்தினால் அது நாட்டில் மேலும் ஸ்திரமின்மையை உருவாக்கும். முஸ்லிம்களைக்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுப் பிரஜைகளுக்கான பயணக் கெடுபிடியை நிறுத்துக

### அரசிடம் யாழ். ஆயர் கோரிக்கை

கொழும்பு, நவ.6

வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள பயணக் கெடுபிடிகளை நிறுத்துமாறு அரசிடம் கோரியுள்ளார் யாழ். மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை.

வடக்குக்குப் பயணங்களை மேற் கொள்ளும் வெளிநாட்டுப் பிரஜைகள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை அவசியமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இந்தப் பயணக் கெடுபிடிகளைத் தளர்த்துமாறு யாழ்.ஆயர் அரசிடம் உத்தியோகபூர்வமாகக் கோரியுள்ளார். இவ்வாறான தடைகள் வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் தமிழ் புலம் பெயர் மக்களைப் பெரிதாகப் பாதிக்கும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வடக்கில் வாழ்ந்து வரும் சொந்தங்களை பார்வையிட வரும் புலம்பெயர் தமிழர்களுக்கு தடை ஏற்படுத்தக் கூடாது என அவர் தெரிவித்துள்ளார். பயணக் கெடுபிடிகள் தொடர்பான அரசின் தீர்மானத்தை மீளாய்வு செய்ய வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-சி)

## பதுளை நிலச் சரிவில் பாதிப்புற்ற சிறாருக்கு உதவப் பலர் விருப்பம்

யாழ்ப்பாணம், நவ. 6

பதுளையில் நிலச் சரிவினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பராமரிக்கும் பொறுப்பை வடக்கு மாகாண சபைக்குத் தந்தால் உரிய முறையில் முன்னெடுக்கப்படும். அவர்களில் 50 வீதமானவர்களின் செலவை ஏற்பதாக இதுவரை எம்முடன் தொடர்பு கொண்டவர்கள் பலர் எமக்கு மின்னஞ்சலில் தெரிவித்துள்ளனர் என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

கைதடியிலுள்ள வடமாகாண பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பதுளையில் பாதிக்கப்பட்ட சுமார் 75 சிறார்களையும் பொறுப்பேற்று அவர்களது உயர்கல்வி வரை அனைத்துச் செலவுகளையும் பொறுப்பேற்க வடக்கு மாகாண சபை தயாராகவுள்ளது. அதேவேளை அரசும் தாம் அவர்களைப் பராமரிப்பதாகக் கூறிவருகிறது. இந்து மா மன்றமும் அவர்களைத் தங்களிடம் ஒப்படைக்குமாறும் தாம் பராமரிப்பதாக

(22ஆம் பக்கம் பார்க்க)

## மலையக மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் அரசு அசமந்தம்

### தேசிய சமாதானப் பேரவை சாடல்

கொழும்பு, நவ. 6

பதுளை, மீரியபெத்த தேயிலைத் தோட்டத்தில் இடம்பெற்ற மண்சரிவின் போது முழுக் கிராமமே மண்ணுக்குள் புதையுண்ட சம்பவம் அங்கு வாழும் சிறுபான்மை இன மக்கள் மீதான துக்ககரமான நினைவுகளை ஏற்படுத்தியுள்ளதுடன், அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்குத் தவறி வரும் இந்த நாட்டின் ஜனநாயக அரசியல் முறைமை தொடர்பாகவும் சிந்திக்க வைத்துள்ளது.

இவ்வாறு தேசிய சமாதானப் பேரவை மீரியபெத்த இடர் தொடர்பாக விடுத்துள்ள ஊடக அறிக்கையில் சாடியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த நாடு ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரமடைந்த பின்னர் தோட்டத் தொழிலாளர்களான தமிழ் மக்களின் பிரசாவுரிமை பறிக்கப்பட்டது. தற்போது அவர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

மிகக் கடுமையான கால நிலைக்கு மத்தியில் கடினமான வேலைகளை இவர்கள்

(22ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு மீட்பு

வெல்லாவெளி, நவ.6

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 35ஆம் கிராமத்தில் இருந்து குண்டு ஒன்று நேற்றுப் புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த வாரம் பட்டமளிப்பு விழா 1,372 பேர் பட்டம் பெறுகின்றனர்

யாழ்ப்பாணம், நவ. 6

யாழ்.பல்கலைக்கழக 30 ஆவது பொது பட்டமளிப்பு விழா எதிர்வரும் திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது என்று பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

8 அமர்வுகளாக இடம்பெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவில் ஆயிரத்து 644 பட்டதாரிகளில் ஆயிரத்து 372 பேர் நேரடியாகச் சமுகமளித்துப் பட்டம் பெறவுள்ளனர். யாழ்.பல்

(22ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோர் வாக்காளராக இறுதிச் சந்தர்ப்பம் 7ஆம் திகதி

கொழும்பு. நவ.6

வாக்காளராக இன்று வரை தம்மைப் பதிவு செய்யாத இடம்பெயர்ந்தவர்கள் 2014 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலில் தமது பெயரை இணைத்துக்கொள்ள விண்ணப்பிப்பதற்கு நாளை வெள்ளிக்கிழமை வரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் யூ.அமரதாஸ தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் குடியிருந்து இடம்பெயர்ந்து சென்று தற்போது வெவ்வேறு இடங்களில் வசித்துவருவோர் தம்மை வாக்காளராக பதிவு செய்யாவிட்டால் தாம் ஆரம்பத்தில் குடியிருந்த பகுதியிலேயே வாக்காளராக பதிவுசெய்து கொள்வதற்கு வாய்ப்புள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

தற்போது குடியிருக்கும் பிரதேச கிராம உத்தியோகத்தர்கள் மூலமாக இந்த விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும், இதற்குரிய

(22ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தொடரும் யானைத் தாக்குதல்

அக்கரைப்பற்று. நவ. 6

அக்கரைப்பற்றில் யானையின் தாக்குதலுக்குள்ளாகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தோணிக்கல் இரண்டாத்துக்கப்பு என்னும் இடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த

(22ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை பிரான்பற்று பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், கனடா- மொன்றியலை வதிவிடமாகவும் கொண்டிருந்த

## திருமதி நாகரத்தினம் தங்கநாயகம் அவர்களின்
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



தாயின் மடியில்
28.11.1925

இறைவன் அடியில்
20.10.2013

திதி : பிரதமை
(07.11.2014)

ஆண்டு ஒன்று ஆகியும் எங்களால் ஆறமுடியவில்லை
உங்கள் பிரிவால் வடியும் கண்ணீரும் காயவில்லை
விடியும் ஒவ்வொரு பொழுதும் உங்கள் முகம் தேடுதே
பாசமுடன் எம்மை அழைத்துப் பேசும் மொழி கேட்க
அழுதழுது காதுவழி தேடுதே உங்கள் குரலை........

காலங்கள் உருண்டோடலாம் - ஆனாலும்
நிழலாகும் உங்கள் நினைவுகள் ஒரு போதும்
எம்மை விட்டு அகலாது - நீங்கள்
விட்டுப் போன வெற்றிடத்தில் எதையிட்டு நிரப்புவோம்

பெற்றோர்க்கு நன்மகளாய் இல்லறத்து நல் நாயகியாய்
நீங்கள் பெற்றவர்கள் பெருமை பெற இப் பூமியிலே வழிகாட்டி
உற்றவரும் மற்றவரும் உயர்வாய் மதித்திடவே

யார் பார்வை பட்டதோ எமைவிட்டுப் - பிரிந்தீர்கள்
எமைவிட்டு நீங்கள் பிரிந்தாலும் - உங்கள்
நெஞ்சம் நிறைந்த அன்பும் அறிவுரைகளும்
என்றும் எம்மைவிட்டு நீங்கவே நீங்காது தாயே.

தரணியிலே தலைசிறந்த நன் மக்களாய்
இன்பமுடன் வாழ வழிகாட்டிய - தாயே
எமையெல்லாம் ஆறாத் துயரத்தில்
ஆழ்த்திவிட்டுச் சென்றதெங்கே....?

எங்கள் மழலை மொழிகேட்டு மகிழ்ந்திருந்த தாயே - உங்கள்
மடி மேல் விளையாடி கை கோர்த்து நடை நடந்து
பள்ளி சென்று படித்து வந்தோம்
எங்களை விட்டுச் சென்ற தெங்கே......?

எங்கள் நெஞ்சுக்குள் வாழும் உங்கள் நினைவுகளை எப்போதும் சுமந்தவர்களாய் பூவிலும் மென்மையுறு அழகுத் திருமுகத்தை புகைப்படமாய் வைத்து வணங்குகின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நாளை (07.11.2014) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும் அன்புப்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
N.T.R. தங்கராசா குடும்பத்தினர்.

பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு.

(53167)(5.6.3)

## பௌர்ணமி கலைவிழா

யாழ்ப்பாணம், நவ.6

தீவக வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் பௌர்ணமிக் கலைவிழா இன்று காலை 9 மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலய நடராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரன்ஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள்விளையாட்டுத்துறை அமைச்சின் ஓய்வு நிலை பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரனும், கௌரவவிருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர் வீ.இராசையாவும், சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கல்வி அலுவலகத்தின் ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர் வ.இராதாகிருஸ்ணனும்கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-10)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
திருமதி கலைச்செல்வி பாலமுரளி
அவர்களின் அன்புத் தந்தை
### செல்லப்பா பத்மநாதன்
அவர்கள் 07.10.2014 அமரத்துவமடைந்தார்.
அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம் கூட்டுறவுத் திணைக்கள
உத்தியோகத்தர்கள் நலன்புரி கூட்டுறவுச் சங்கம்.

(53784)
(12.3.6)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
### அமிர்தராணி இராசதுரை



தோற்றம்
10 . 11 . 1950

மறைவு
10 . 11 . 2011

திதி:06.11.2014

அன்பினால் எமை வளர்த்த எம் அன்னையே!
தினமும் ஏங்குகின்றோம்
நாம் உன் அன்பிற்காக
இதயத்தில் ஒரு மூலையில்
வலித்துக் கொண்டே இருக்கின்றது
உம் பிரிவை எண்ணி.

(53772)(4.6.3)

நிற்சாமம்,
சங்கானை.

குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
## ஞானசுந்தரம் சரஸ்வதி



மலர்வு :
14.07.1928

உதிர்வு :
07.10.2014

அந்திப்பொழுதில் கூடுவோம்
மாமர நிழலில்
அகத்தில் இருக்கின்றதே
உங்கள் நினைவுகள்
புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும்
எம் இதயம் துடிக்கும்.

*என்றும் உங்கள் இதயங்கள்*

நிஷா முகுந்தன் (கனடா)
தமிழினி லக்ஸ்மன் (அமெரிக்கா)
கார்த்திகாயினி சதீஸ் (லண்டன்)
பாலறமணன் (கொழும்பு)
தர்சிகா ஜெகனிவாசன் (கனடா)
கஜலக்சன், கிசோ, கஜபானுயன்,
ஷேமப்பிரியா + பிரதீபன், தர்சன், பிரவீன், சர்வின், அனுஜன்,
ரிஷிக்கா, பிரவியா மற்றும் பூட்டப்பிள்ளைகள்.

**மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.**

(53788)(7.6.3)

# ஓய்வுபெற்ற மூத்தோர் பிரஜைகள் அமைப்பு ரீதியாவதில் ஆர்வம்

யாழ்ப்பாணம்.நவ.6

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றோரில் மேலும் 50 பேர் வடமாகாண ஓய்வு பெற்ற முதியோர்களுக்கான பிரஜைகள் அமைப்பில் புதிதாக உறுப்பினர்களாக இணைந்து கொண்டுள்ளனர்.

அந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு கடந்த சனிக்கிழமையுடன் ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு வலி. வடக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் மண்டபத்தில் நடமாடும் வைத்திய சேவை இடம்பெற்றது. இதன்போது 65 பேருக்கு மூக்குக் கண்ணாடி வழங்குவதற்கான மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த அமைப்பில் ஏற்கனவே 270 பேர் அங்கத்தவர்களாக உள்ள நிலையில் மேலும் 50 பேர் புதிதாக இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் ஆளுநரின் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ஸ்ரீதேவி தெரிவிக்கையில்:

"அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் உள ஆரோக்கியத்தை பேணுதல் மற்றும் இளைஞர்களுக்கு ஏற்ற முறையில் அறிவை மேம்படுத்தல் போன்ற நோக்கங்களுக்காக இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பல முதியவர்கள் 5 மாவட்டங்களில் இருந்தும் இந்த அமைப்பில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இனிவருங்காலங்களில் இந்த அமைப்பை பலப்படுத்துவதன் ஊடாக முதியவர்களுக்கு நலன் தரக்கூடிய பல திட்டங்கள் முன்னெடுக் கப்படவுள்ளன"- என்றார். (வ-14-ரி-36)

# ஊழியர் சேமலாப நிதிய மாதம் நவம்பர்

யாழ்ப்பாணம் நவ.6

ஊழியர் சேமலாப நிதிய மாதமாக இந்த மாதத்தை பிரகடனப்படுத்தியுள்ளது இலங்கை தொழிற் திணைக்களம்.

கிராம மற்றும் பிரதேச ரீதியில் ஊழியர் சேமலாப நிதியக் கணக்குகள் இல்லாமல் இருக்கும் தொழிலாளிகளை இனங்கண்டு கொள்ளுதல். அவர்களுக்கு புதிய கணக்குகளை ஆரம்பிப்பதன் மூலம் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல். அங்கத்தவர்களுக்கான வாய்ப்புக்களை அதிகரித்தல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் இச்செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வட மாகாணத்தில் முதற் கட்டமாக யாழ்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் உள்ள நல்லூர், உடுவில், யாழ்ப்பாணம், வவுனியா, புதுக்குடியிருப்பு ஆகிய 5 பிரதேச செயலகங்களில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் விளம்பரப் பலகைகள், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் என்பவற்றின் மூலம் மக்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-ரி)

இடமாற்றம்
டயானா பிளாஸ்ரிக்
108, பலாலி வீதி (இலுப்பையடிச் சந்தி)
* உடைந்த வாகன பிளாஸ்ரிக் ஒட்டுதல்.
* பழைய பிளாஸ்ரிக் வாங்குதல்.
* புதிய பிளாஸ்ரிக் தயாரித்தல்
(C/17542)(7.6.3)
தொடர்பு : 077 592 5088/021 222 8680

J.C.B (பைக்கோ) வாடகைக்கு



குறிப்பு :★போக்குவரத்துக் கூலி அறவிடப்பட மாட்டாது.
★ஒப்பந்தவேலைகளுக்கு விஷேட விலைக்கழிவு வழங்கப்படும்.
தொடர்பு: 021 224 1466/077 489 7865 (யாழ்ப்பாணம்)
077 771 2482 (கல்லாயம்) /077 343 4657(பருத்தித்துறை)
077 593 2007 (பளை)
(53731)(4.6.3)
புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்
207, K.K.S.வீதி, சுன்னாகம்.

மணமகன் தேவை
சுவிஸ் நாட்டு குடியுரிமை பெற்ற 73ஆம் ஆண்டு பிறந்த மணமகளிற்கு இந்துசமய மணமகன் தேவை.
(வெளிநாட்டில் விரும்பத்தக்கது)
(47327)(12.3.6) தொடர்பு:0041 7799 09102

# ஆவணங்களின்றி பாண் விற்றுத் திரிந்தவர் சிக்கினார்

வலி.தென்மேற்கு. நவ.6

மருத்துவச் சான்றிதழ், பிரதேச சபையின் அனுமதி போன்ற ஆவணங்களின்றி நடமாடும் பாண் வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரி ஒருவர் சுகாதாரப் பரிசோதகரிடம் அகப்பட்டார்.

அவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் சுகாதாரப் பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வியாபாரி குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து நீதிவான் அவருக்கு பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் வைத்து நடமாடும் பாண் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்த வியாபாரியொருவரை வழிமறித்து பரிசோதனை செய்த சண்டிலிப்பாய் சுகாதாரப் பரிசோதகர் அவரிடம் மருத்துவச் சான்றிதழ் மற்றும் வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் அனுமதி போன்ற ஆவணங்கள் இல்லாததைக் கண்டு பிடித்தார்.

அத்துடன் பொருள்கள் பொதி செய்வதிலும் குறைபாடுகள் காணப்பட்டன. (வ-115)

## பரிசளிப்பு விழா

வடமராட்சி, நவ.6

மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் பி.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தின் பிரதிப்பணிப்பாளர் ஆர். ரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் வல்லி ரமணி ரவீந்திரன் வழங்கிக் கௌரவிப்பார். (வ-173-108)

## முழுநிலாக் கருத்தாடல்

யாழ்ப்பாணம், நவ.6

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடத்தும் மாதாந்த முழுநிலாக் கருத்தாடல் இன்று முற்பகல் 10 மணிக்கு தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

பட்டிமன்றமும் பயன்பாடும் என்ற தலைப்பில் வரதராஜன், ஐ.கதிர்காம சேகரன், தமிழ் மணி அகளங்கன் ஆகியோர் கருத்தாடவுள்ளனர். (வ-402)

பகுதி நேர வேலைவாய்ப்பு
தப்ரபேன் கடலுணவு பிறைவேற் லிமிடெட் நிறுவனம் ஆண்களுக்கான பகுதிநேர வேலை வாய்ப்பினை அறிவிப்பதில் மகிழ்ச்சியடை கின்றது.
தொழிற்சாலை இடம்: யாழ்ப்பாணம் (பாஷையூர்)
கிளிநொச்சி (முழங்காவில்)
மன்னார் (பேசாலை)
நேரம் : மாலை 6.00 pm -10.00 pm வரை
குறிப்பு: பகுதிநேர வேலைவாய்ப்பினை எதிர்பார்க்கும் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.
தொடர்பு: 078 646 6890 (10.00 am -5.00 pm)
(53909)(5.6.3)

சுயதொழில் முயற்சியாளர்களுக்கான
கிளை விரிவாக்கல் திட்டம் - 3
ஏசியன் கொம்பியூட்டருடன் இணைந்து
சுன்னாகம், சாவகச்சேரி, நெல்லியடி, மன்னார் பகுதிகளில் கொம்பியூட்டர் பயிற்சி மையங்களைத் தொடங்க விரும்புவோர் உடன் விண்ணப்பிக்கலாம்.



உங்கள் கல்வித் தகைமை, கணினித்துறைசார் அனுபவம், செய்யக்கூடிய முதலீடு, முகாமைத்துவ திறன், சந்தைப்படுத்தல் திறன், என்பவற்றை விவரமாக எமக்கு அனுப்பி வைக்கவும்.
Computer Education | Degree Foundation | Multimedia Education | English Skill Training
விபரங்களை மின்னஞ்சல் OR தபால் மூலமாக அனுப்பிவைக்கவும்.
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி 15-11-2014.
ASIAN BUSINESS COLLEGE (PVT) LTD
#60, Kotahena Street, Colombo-13
e-mail : asianedu@dialogsl.net

பாராட்டி வாழ்த்துகின்றோம்
Best Wishes



யா/சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலையில்
2014 - தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்குப் புகழ் சேர்த்த
செல்வி யோ.ஜஸ்மின் மீரா
மற்றும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற
ச.டனிஸ்ரன் - 151 பி.பிரிந்தாயினி - 134
நா.செவ்வேள் - 104 ரா.ஹேஜித் - 100
யோ.யொறின்சன்- 98
ஆகிய மாணவச் செல்வங்களையும் அவர்களை வழிப்படுத்திய அதிபர், வகுப்பாசிரியர் ஏனைய ஆசிரியர்கள், ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் சி.சர்வேஸ்வரன் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
Congratulations
(சி17291)(12.3.6) பாடசாலைச் சமூகம்

மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துக்கள்
உயர்திரு.
செல்லத்துரை சேதுராஜா
(அதிபர், யா/நெல்லியடி மத்திய கல்லூரி)
அவர்கள்
யா/நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் செ.சேதுராஜா அவர்களின் மணிவிழா நன்னாளில் பாராட்டி வாழ்த்துவதுடன், அவரது ஓய்வுக்காலம் சிறப்புற்று நீடூழி காலம் வாழ இதயபூர்வமாக வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
தற்காலிக கல்வி சாரா ஊழியர்கள்
யா/நெல்லியடி மத்திய கல்லூரி, கரவெட்டி.



Best Wishes

மனம்நிறைந்து வாழ்த்துகின்றோம்



பல்கலைக்கழகத்தில் நட்பாகி
ஆறாறு ஆண்டுகளும் பிணைப்பாகி
கல்விப்பயணத்தில் ஒன்றாகி
கவினுறு தொழில் வாழ்வில்
உன்னதமாய்ப் பலரும்
வாழ்த்தப் பணியாற்றி - அரச
பணி நிறைவில் ஓய்வுபெறும் எங்கள்
சேது பல்லாண்டு காலம் வாழ
மணிவிழா நன்னாளில்
மனம் நிறைந்து
வாழ்த்துகிறோம்!
Congratulation
வாழ்த்துவோர்:
ஐ.தயானந்தராஜா – அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பொ.ஞானதேசிகன் – பிரதி அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
ச.சிவநேஸ்வரன் – அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி
க.அருந்தவபாலன் – அதிபர், டிறிபேக் கல்லூரி
அ.அகிலதாஸ் – கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
பொன்.அருணகிரிநாதன் – பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்.கல்வி வலயம்
(53798)(7.6.3)

## வீடு வாடகைக்கு உண்டு

கஸ்தூரியார் வீதியில் மூன்று அறைகள், ஒரு கோல் சமையலறையுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 271 9433 (53811) (7.6.3)

## காணி விற்பனைக்கு

தாவடி தெற்கு, கொக்குவிலில் (தாவடி பாடசாலைக்கு அருகில்) 16பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(53813) (12.3.6) தொடர்பு:077 611 6050 பாலா.

## வீடு வாடகைக்குத் தேவை

3-4 படுக்கை அறைகள் கொண்ட வீடு K.K.S. றோட்டுக்கு அருகில் தேவை. (53800) (7.6.3)

தொடர்பு : 077 973 8802, 076 540 7121


## விசேட கல்வி அலகுக் கட்டடம் திறந்து வைப்பு

சாவகச்சேரி சக்தி அம்மன் தமிழ்க் கலவன் வித்தியாலயத்துக்கு 15 லட்சம் ரூபா செலவில் புலம்பெயர்ந்த நலன் விரும்பி ஒருவரால் அமைத்து வழங்கப்பட்ட விசேட கல்வி அலகுக் கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

அதனை அமைத்துக் கொடுத்தவரும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமாரும் கூட்டாக கட்டடத்தைத் திறந்து வைத்தனர். (வ-9)


## உடனடி வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் பிரபல்ய ஹோட்டல் ஒன்றிற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு வேலையாட்கள் உடனடியாக தேவை

- வரவேற்பாளர்கள் ( Receptionist )
- சமையல் உதவியாளர்கள் ( பெண்கள் )

தொடர்புகளிற்கு : (C/17425)

**0772269790**


## ஆன்மிக நிகழ்வு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வுகள் வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு காரைநகர் கிழவன் காடு கலாமன்ற மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெறும். (வ-173)

## ரவிராஜின் நினைவுதின நிகழ்வு

தென்மராட்சி, நவ.6

யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி மைந்தனுமாகிய நடராசா ரவிராஜின் நினைவுதின நிகழ்வுகள் இன்று பி.ப.3 மணிக்கு சாவகச்சேரி நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வரவேற்புரையை சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையும், அஞ்சலி உரையை மேல் மாகாணசபை உறுப்பினர் மனோ கணேசனும் நினைவுரையை தெஹிவளை- கல்கிசை மாநகரசபை உறுப்பினர் விக்கிரபாகு கருணாரட்ணவும் நினைவுப் பேருரையை நாடாளுமன்ற உறுப்பினர் ம.சுமந்திரன் 'தற்கால உலகமயமாதல் சூழமைவில் மென் தீவிரத்தின் பொருத்தப்பாடு' என்ற தலைப்பிலும் நிகழ்த்தவுள்ளனர்.

அரசியல் சட்டம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதலுக்கான ரவிராஜ் நிறுவனம் என்ற அமைப்பொன்றும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (வ-9)

## முழு நிலா கருத்தாடல்

யாழ்ப்பாணம், நவ. 6

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் முழுநிலாக் கருத்தாடல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இல 62, கே.கே.எஸ் வீதி கொக்குவில் சந்தி, கொக்குவில் என்ற முகவரியில் இயங்கும் தேசிய கலை இலக்கியப் பேரவையில் இன்று வியாழக் கிழமை பி.ப 3.30 நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் 'மலையக மண் சரிவுப் பேரழிவும் வீடமைப்பு முறைமையும்' என்ற தொனிப்பொருளில் பேசப்படவுள்ளது.

நிகழ்வின் தொடக்கவுரையை த.சிறீபிரகாஸ் நிகழ்த்த கருத்துரையை பெருந்தோட்ட பாதுகாப்பு மக்கள் ஒன்றியத்தின் இணைப்பாளர் சபா.மோகன் வழங்கவுள்ளார். அதனைத் தொடர்ந்து திறந்த கலந்துரையாடல் இடம்பெறும். (வ-10)


## வலி.கிழக்கு பிரதேசசபை, புத்தூர்
## கேள்வி அறிவித்தல் - 2015

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 2015 ஆம் ஆண்டிற்கு (01.01.2015 - 31.12.2015) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 07.11.2014– 20.11.2014.
கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 20.11.2014 ந.ப 12.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 20.11.2014 பி..ப 02.00 மணி.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை "தவிசாளர், வலி கிழக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், புத்தூர்" எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும், எதிர்வரும் 20.11.2014ஆம் திகதி ந.ப 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ, அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| தொ. இல | விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ( வரி நீங்கலாக ) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (வரி நீங்கலாக) | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை (வரிநீங்கலாக) | மாதாந்த வாடகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 01. | அச்சுவேலி பொதுச் சந்தை. (துவிச்சக்கர வண்டித்தரிப்பிடம், துவிச்சக்கர வண்டி 5/= மோட்டார் சைக்கிள் 10/=, மின்சாரக்கட்டணம் ஒப்பந்தக்காரரால் செலுத்தப்படல் வேண்டும் ) | 2000.00 | 10,000.00 | 5,127,500.00 | |
| 02. | அச்சுவேலி பஸ் தரிப்பிடம் | 500.00 | 2000.00 | 111,800.00 | |
| 03. | அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 627,000.00 | 500.00 |
| 04. | அச்சுவேலி கோழியிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 201,300.00 | 500.00 |
| 05. | அச்சுவேலி ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 46,500.00 | 500.00 |
| 06. | வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 130,100.00 | |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | | | |
| 01. | புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 215,600.00 | 500.00 |
| 02 | புத்தூர் பொதுச் சந்தை | 500.00 | 2000.00 | 166,800.00 | |
| 03. | புத்தூர் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 13,200.00 | 500.00 |
| | **நீர்வேலி உப அலுவலகம்** | | | | |
| 01. | நீர்வேலி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 62,700.00 | 500.00 |
| 02. | நீர்வேலி ஆட்டிறைச்சிக் கடை | 300.00 | 1000.00 | 10,000.00 | 500.00 |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | | |
| 01. | கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 694,100.00 | 500.00 |
| 02. | கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 300:00 | 1000.00 | 13,200.00 | 500.00 |
| 03. | கோப்பாய் கோழியிறைச்சி கடை | 500.00 | 2000.00 | 67,500.00 | 500.00 |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | | |
| 01. | உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 144,100.00 | 500.00 |
| 02. | உரும்பிராய் ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 99,000.00 | 500.00 |
| 03. | உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 2000.00 | 244,200.00 | |
| 04. | ஊரெழு மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 85,800.00 | 500.00 |
| 05. | ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 1000.00 | 24,200.00 | 500.00 |

01. சந்தையிலிருந்து ஒரு கி.மீற்றர் சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.
02. கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புபவர்கள் தத்தமது பிரதேச கிராம சேவையாளர்களின் வதிவிடச் சான்றிதழ், கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் தலைமை அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.
03. கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித்தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 12%பெறுமதி சேர் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும், காலத்துக்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்படவேண்டும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
05. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
06. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
07. விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மாதாந்த வாடகை மீள்மதிப்பீடு செய்யப்படும் போது மதிப்பீடு செய்யப்படும் தொகை செலுத்தப்படல் வேண்டும்
08. கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கணபதிப்பிள்ளை துரைசிங்கம்
தவிசாளர்
வலி. கிழக்கு பிரதேசசபை,
புத்தூர்

வலி. கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம், புத்தூர்.
06.11.2014

(C17292)(7.6.3)

## பெயர் மாற்றம்

இல.37/4, கணேசபுரம், கிளிநொச்சியில் வசித்துவரும் மணிமுத்து மரியசூசை ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை மணிமுத்து இராசதுரை என மாற்றி யுள்ளேன் என்பதனை அறியத் தருகின்றேன்.

ம.இராசதுரை (நாதஸ்வரம்),
கணேசபுரம், கிளிநொச்சி.
(47919) (12.3.6)

## பொது அறிவிப்பு

" T.துஷ்யந்தன் அளவெட்டி மேற்கு, அளவெட்டி, யாழ்ப்பாணம்.

சீபேங்க் அசெட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் நிறுவனம் சார்பில் யாழ்ப்பாணத்தில் சுயாதீன முதலீட்டு ஆலோசகராகப் பணிபுரிந்து வந்த 820464320V எனும் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையுடைய T.துஷ்யந்தன் என்பவர் சீபேங்க் அசெட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் சார்பில் இனி எந்தவொரு வியாபார நடவடிக்கையிலும் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார் என இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றோம். இது முதற்கொண்டு எமது நிறுவனம் சார்பில் குறித்த நபருடன் ஈடுபடும் எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும் சீபேங்க் அசெட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் நிறுவனம் பொறுப்பேற்காது என்பதையும் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்,
சீபேங்க் அசெட் மெனேஜ்மன்ட் லிமிட்டட் "
(சி17426) (12.3.6)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
செல்லத்துரை
சத்தியபாமா
திதி : 06.11.2014



அன்னை மடி
27.09.1934

இறைவன் அடி
08.11.2003

அன்புடனும் பண்புடனும் எமைவளர்த்த அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்து ஆண்டுகள் பதினொன்று சென்றாலும்
ஆறவில்லையே எம் துயரம்!

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
கணவர், சகோதரன், பிள்ளைகள்.

குண்டர,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

## கடற்பாசி செய்கையில் மீனவர்கள் மிக ஆர்வம்

அச்சுவேலி, நவ 6

கடற்பாசி செய்கைக்கான முழு உதவிகளையும் ஹேலீஸ் நிறுவனத்தின் விவசாயப் பிரிவு இலவசமாக வழங்கி வருவதோடு அறுவடை செய்யப்படும் கடற்பாசியை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது.

கடற்பாசி செய்கை மீன்பிடித் தொழிலுக்கு பாதிப்பில்லாத வகையில் பகுதிநேரத் தொழில் முயற்சியாக நடைபெற்று வருகின்றது. பூநகரி வலைப்பாட்டில் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்ட கடற்பாசி வளர்ப்பு வெற்றி அளித்தமையை அடுத்து வலைப்பாட்டில் 100 குடும்பங்கள் கடற்பாசி வளர்ப்பில் ஈடுபட்டிருப்பதாகவும் அங்கு கடற்பாசி நல்ல விளைச்சலை கொடுப்பதாகவும், பாசி வளர்ப்பு முயற்சியில் ஈடுபடும் குடும்பங்கள் கணிசமான அளவு வருமானத்தைப் பெற்று வருவதாகவும் ஹேலீஸ் நிறுவனத்தின் கடற்பாசி செய்கைக்குப் பொறுப்பான அதிகாரி எஸ்.சிவராம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தெரிவிக்கையில்,

வலைப்பாட்டில் கடற்பாசிச் செய்கை வெற்றி அளித்ததை அடுத்து நயினாதீவு, எழுவைதீவு, புங்குடுதீவு பகுதிகளிலும் கடற்பாசிச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாசிச் செய்கையில் ஈடுபடும் குடும்பங்களுக்குச் செய்கைக்கான விதை மற்றும் மிதவைகள் தொழில்நுட்ப ஆலோசனைகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுவதோடு அறுவடை செய்யப்படும் பாசிக்கான சந்தை வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. நயினாதீவில் தற்பொழுது 30 பேர் வரையில் கடற்பாசி செய்கையில் ஈடுபட்டுள்ளனர். மேலும் பலர் கடற்பாசிச் செய்கையில் ஈடுபடுவதற்கு ஆர்வம் கொண்டு விண்ணப்பித்துள்ளார். நயினாதீவு, எழுவைதீவு, புங்குடுதீவு ஆகிய பகுதிகளில் கடற்பாசிச் செய்கை வெற்றி அளித்துள்ளது எனத் தெரிவித்துள்ளார். (த-11)

## மருந்தகங்கள் மீதும் சுகாதாரப் பகுதி கண்

### சட்ட நடவடிக்கைக்குத் தயார்

வலி.தென்மேற்கு, நவ.6

குடாநாட்டில் சட்ட விதிமுறைகளுக்கு முரணாக இயங்கி வந்த ஐஸ்கிறீம், யூஸ் உற்பத்தி நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கையை மேற்கொண்டுள்ள யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்ட சுகாதாரக் குழுவினர் அடுத்த கட்டமாக மருந்தகங்கள் (பார் மசிகள்) மீது தங்கள் நடவடிக்கையை விஸ்தரிக்கவுள்ளனர்.

குடாநாட்டில் குறிப்பாக யாழ். மாநகர சபைப் பகுதியில் இயங்கும் மருந்தகங்களில் பல மருந்தகங்கள் சட்ட விதி முறைகளைப் பின்பற்றாமல் இயங்கி வருவது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து சுகாதாரக் குழுவினர் சகல மருந்தகங்களின் மீதும் சோதனை நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளனர்.

விற்பனை செய்யப்படும் மருந்து வகைகளுக்குச் சிட்டை வழங்காமை, 2014ஆம் ஆண்டுக்கான பதிவை மேற்கொள்ளாமை, மருத்துவரின் சீட்டு இல்லாது மருந்து வழங்குதல், காலாவதியான மருந்து வகைகள், வழங்கப் படும் மருந்து வகைகளின் பதிவேடு இல்லாமை, மருந் தாளர்கள் இல்லாமை போன்ற குறைபாடுகளுடன் இயங்கும் மருந்தகங்கள் மீது சுகாதாரக் குழுவினர் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளனர் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (த-115)



மலையகத்தில் அண்மையில் ஏற்பட்ட மண் சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்குடன் வலி. மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் நாகரஞ்சினி ஐங்கரனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடைகள் மாவட்ட இளைஞர் கழகத்தின் சம்மேளன உப தலைவரும் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ச.லக்சனிடம் கையளிக்கப்பட்டன. இந்த உடு புடைவைகள் மலையகத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு மக்களுக்கு உடனடியாக வழங்கப்பட உள்ளன. வலி மேற்குப் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வலி மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான ந.பி.இராஜ்குமார், ச.சபாநாயகம் மற்றும் உத்தியோகஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (த-21)

## பற்றைகளை அழியுங்கள்

யாழ்ப்பாணம், நவ.6

வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருக்காத வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புச் சுற்றாடல்களில் படர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகள், செடிகள் போன்றவற்றை உடனடியாக வெட்டி அழிக்குமாறு பிரதேச சபையின் தலைவர் க.துரைசிங்கம் கோரியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளதால் நுளம்புகளின் தாக்கம் அதிகரித்துள்ளது. நுளம்புப் பெருக்கத்தை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்குச் சபை ஏற்ற நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளது.

இந்த நுளம்புகள் பற்றைகள் மற்றும் செடிகள் ஊடாக அதிகளவில் பெருகுகின்றன. எனவே மக்கள் குடியிருக்காத வெற்றுக்காணிகளில் காணப்படும் பற்றைகளைக் காணி சொந்தக்காரர்கள் வெட்டி அகற்ற வேண்டும்.

நுளம்புப் பெருக்கத்தினால் ஏற்படும் நோய்களைத் தவிர்க்கும் பொருட்டுப் பிரதேசத்தின் பல இடங்களில் காணப்படும் செடி, கொடிகளை அகற்றுமாறு மக்களிடம் கோரியுள்ளோம்.

இந்த பற்றைகளை மக்கள் அகற்றத் தவறும் பட்சத்தில் அவர்கஞ்க்கு எதிராகச் சபையின் சட்ட விதிக்கு அமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தப் பற்றைகள், செடிகள் என்பனவற்றைச் சபையின் தொழிலாளர்களைக் கொண்டு அகற்றவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார். (த-17)

## குறிகாட்டுவான்துறை வரை மின்சார இணைப்புகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், நவ.6

வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் குறிகாட்டுவான் துறை வரை மின்சார இணைப்புகள் வழங்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

இதனை அடுத்து குறிகாட்டுவான் மற்றும் கேரதீவு போன்ற கிராம மக்களில் ஒரு பகுதியினருக்கும் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள 20 வரையிலான குடிமனைகளுக்கான மின்சார இணைப்புப் பணிகள் முடிவுற்றுள்ளன. ஆயினும் இந்த கிராமங்களுக்கு மின்சாரம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

மின்னிணைப்பு வழங்கப்பட்ட பகுதிக்கு மின்சார விநியோகத்தை அடுத்த வாரத்தில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்க மின்சார சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (த-17)

## மானிப்பாயில் இன்று பசு மாடுகள் வழங்கல்

வலி.தென்மேற்கு, நவ.6

குடாநாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்க முன்வந்துள்ள தமிழ் பௌத்த சங்கம் நல்லினத்தைச் சேர்ந்த நூறு பசு மாடுகளை பயனாளிகளுக்கு வழங்கவுள்ளது. இதற்கான ஒழுங்குகளைச் சங்கத் தலைவர் அருஸ் நேசரட்ணம் ரவிக்குமார் மேற்கொண்டுள்ளார்.

அம்பிலிப்பிட்டி பண்ணையிலிருந்து கொண்டு வரப்பட்ட பசு மாடுகள் இன்று வியாழக்கிழமை மாலை மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் வைத்து பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன. கிராம உத்தியோகத்தர்களின் சிபாரிசுகளுடன் பயனாளிகள் ஏற்கனவே தெரிவு செய்யப் பட்டுள்ளார்கள்.

பசுமாடுகள் வழங்கும் நிகழ்வை முன்னிட்டு இன்று காலை மானிப்பாய் கலாசார மண்டபத்தில் பொதுக் கூட்டமொன்றும் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் ஓமல்பே சோபித தேரர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

முதலாவது மாடு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்கும் இரண்டாவது மூன்றாவது மாடுகள் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்துக்கும் முருகன் ஆலயத்துக்கும் வழங்கப் படவுள்ளன. அதனைத் தொடர்ந்து ஏனைய மாடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன. (த-115)

## 30 ஆயிரம் பணியாளர்கள் சேமலாப நிதித் திட்டத்தில்

### யாழ்.மாவட்டத்தில் மட்டும்

யாழ்ப்பாணம், நவ.6

யாழ்.குடாநாட்டில் இதுவரை 30 ஆயிரம் பேர் வரையில் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள அதேவேளை, இந்த மாதத்தில் இதனை மேலும் துரிதமாகச் செயற்படுத்தி இணையாத பணியாளர்களையும் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2ஆயிரம் நிறுவனங்களைச் சேர்ந்த 30 ஆயிரம் பணியாளர்கள் வரை ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைக்கப்பட்டு அவர்கள் அதனூடாகப் பயனடைந்து வருகின்றனர்.

இந்த ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் மேலும் பணியாளர்களை இணைத்து அவர்களின் எதிர்கால வாழ்வை மேம்படுத்த தொழில் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்காக இந்த நவம்பர் மாதத்தை ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைக்கும் மாதமாகத் தொழில் திணைக்களம் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த அடிப்படையில் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிராம சேவகர் பிரிவு ரீதியாக இது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதன்போது தொழில் திணைக்களத்தால் விழிப்புணர்வுக் கருத்தரங்கு, துண்டுப் பிரசுரங்கள் வழங்குவது போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன் இதுவரை இந்த ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைந்துகொள்ளாத தொழில் நிறுவனங்களின் விவரங்களும் இதன்போது திரட்டப்படவுள்ளன.

அதேவேளை, ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைந்த பணியாளர்கள் தமது ஆவணங்களைத் தவறவிட்டிருந்தால் அவற்றைத் தொழில் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டும் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (த-17)

## யாழ்.விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கு

### ஹேலீஸ் நிறுவனம் வழங்குகிறது

அச்சுவேலி, நவ.6

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கு வழங்குவதில் தனியார் துறையினர் ஆர்வம் காட்டி வரு கின்றனர். அந்த வகையில் ஹேலீஸ் நிறுவனம் இறக்கு மதி செய்யப்பட்ட விதை உரு ளைக்கிழங்கு 50 கிலோ பொதியொன்றை 11ஆயிரத்து 500 ரூபாவுக்கு வழங்கவிருப்பதோடு அதற்குப் பயன்படுத்தும் அடிக்கட்டுப் பசளையையும் இலவசமாக வழங்கவிருப்பதாக அறிவித்துள்ளது.

விதை உருளைக்கிழங்கு தேவையான விவசாயிகள் திருநெல்வேலியில் உள்ள ஹேலீஸ் நிறுவனத்தில் முற்பணம் செலுத்திப் பதிவுகளை மேற்கொள்ளுமாறும், இறக்குமதி செய்யப்பட்ட சசி, றெட் லைட்கேட், றெபாடா ஆகிய இனக் கிழங்கு வழங்கப்படவிருப்பதாகவும், நவம்பர் நடுப் பகுதியில் விதை உருளைக் கிழங்கை விவசாயி களுக்கு விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப் பதாகவும் ஹேலீஸ் திருநெல் வேலி நிலையப் பொறுப்பதி காரி தெரிவித்தார்.

அதே சமயம் யாழ்.மாவட்ட உருளைக் கிழங்கு செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் விதை உருளைக் கிழங்கை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாடு களை மேற்கொண்டுள்ளது. (த-11)

## பருத்தித்துறை-திருமலை பஸ் நாளை முதல் அச்சுவேலி வரை

வடமராட்சி, நவ.6

பருத்தித்துறை-திருகோணமலை பஸ்சேவை நாளை வெள்ளிக்கிழமை முதல் அச்சுவேலி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தற்போது பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்குத் தினமும் அதிகாலை 4.30 மணிக்குப் புறப்படும் பஸ் அதிகாலை 3.45 மணிக்குத் தொண்டமானாற்றில் இருந்து வல்வெட்டித்துறை ஊடான 751 பாதை வழியே பருத்தித்துறையை வந்தடைந்து திருகோணமலைக்குப் புறப்படுகின்றது.


நாளை வெள்ளி முதல் இந்தச் சேவையில் ஈடுபடும் பஸ் அதிகாலை 3 மணிக்கு அச்சுவேலியில் இருந்து புறப்பட்டுத் தொண்டமானாறு ஊடாக அதே பாதையில் பருத்தித்துறை பஸ் நிலையத்தை வந்தடைந்து திருகோணமலைக்குப் புறப்படும். இதே போல திருகோணமலையில் இருந்து பகல் 12.30 மணிக்குப் பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் பஸ் வல்வெட்டித்துறை, தொண்டமானாறு ஊடாக அச்சுவேலி சென்றடையும் என பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ முகாமையாளர் க.கந்தசாமி தெரிவித்தார். (த-173)

## சிமெந்து, பிளாஸ்ரிக் கதிரைகள் களவாடியோருக்கு 6 மாதச் சிறை

முல்லைத்தீவு, நவ. 6
பெருமளவு சிமெந்து பைக்கெற்றுகள் மற்றும் பிளாஸ்ரிக் கதிரைகளைக் களவாடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த 28ஆம் திகதி முள்ளியவளை தண்ணீரூற்றுப் பகுதியில் கைது செய்யப்பட்ட இருவருக்கு தலா 6 மாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்.
கைப்பற்றப்பட்ட சிமெந்து பைக்கெற்றுகள், கதிரைகள் என்பவற்றை முறைப்பாட்டாளரிடம் ஒப்படைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டதுடன் எதிராளியிடமிருந்து கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் பொலிஸாருக்குப் பணித்தார். (த-101)

# நிரந்தர மருத்துவர் 7 வருடமாக இல்லை

## வன்னேரிக்குளம் மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளர் பெரும் சிரமம்



கிளிநொச்சி, நவ. 6
கிளிநொச்சி வன்னேரிக்குளம் மருத்துவமனையில் 7 ஆண்டுகளாக நிரந்தர மருத்துவர் இல்லாத நிலையில் இயங்கி வருகின்றது.
இந்தக் கிராமத்தில் 25 ஆண்டுகளாக மருத்துவராகப் பணியாற்றியவர் ஓய்வு பெற்றுச் சென்று 7 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இதுவரை நிரந்தர மருத்துவர் நியமிக்கப்படவில்லை.
கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டங்களில் மருத்துவர் விரைவாக நியமிக்கப்படுவார் என மீள்குடியேற்றம் ஆரம்பமான நாளிலிருந்து அதிகாரிகள் கூறிவந்த போதிலும் இதுவரை மருத்துவர் நியமிக்கப்படவில்லை. அக்கராயன் மருத்துவமனையிலிருந்து வாரத்தில் இரு நாள் மருத்துவர் அங்கு சென்று பணியாற்றுகின்றார். நிரந்தர மருத்துவர் இல்லாததன் காரணமாக வன்னேரிக்குளம், ஜெயபுரம், ஆனைவிழுந்தான்குளம் ஆகிய மூன்று கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்து 500 வரையான குடும்பங்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன.
விவசாய கிராமமான வன்னேரிக்குளத்தில் பாம்புக்கடி, மகப்பேறு, விபத்துக்களின் போது 10 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அக்கராயன் மருத்துவமனைக்கு நெருக்கடிகளுக்குள் மத்தியில் செல்ல வேண்டியுள்ளதாக வன்னேரிக்குளம் மக்கள் தெரிவிக்கின்றனர்.
1953ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வன்னேரிக்குளம் கிராமத்தில் தற்போது 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றபோதிலும் நிரந்தர மருத்துவர் இல்லாதமையால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். (த-18)

## போதைப் பொருள் பாவனை அதிகரிக்கிறது வவுனியாவில்

வவுனியா, நவ. 6
போதைப் பொருள்களின் பாவனையில் கடந்த 9 மாதங்களில் 139 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி பி. இரகுநாதன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;
இந்த வருடத்தில் போதைப் பொருள்களின் பாவனை அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இந்த வருடத்தில் ஜனவரி மாதம் தொடக்கம் செப்ரெம்பர் மாதம் வரையிலான 9 மாதக் காலப் பகுதியில் கஞ்சா, ஹெரோயின் வைத்திருத்தல், கள்ளச் சாராயம், கசிப்பு உற்பத்தி, சட்டவிரோதமான மது விற்பனை, வயது குறைந்தவர்களின் மதுப்பாவனை என 139 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதில் ஜீலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் ஆகிய மூன்று மாதங்களில் 24 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.
இதே காலப்பகுதியில் ஹெரோயின் வைத்திருந்த 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களிடம் 1,065 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது - என்றார். (த-421)



பதுளை மாவட்டத்தில் மண் சரிவினால் உயிரிழந்த மக்களின் ஆத்ம சாந்திக்காகவும் பாதிக்கப்பட்ட மக்கள் விரைவாகக் குணமடைந்து நலம்பெறவேண்டுமெனவும் வேண்டிக்கொள்ளும் பொருட்டு கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் மத வழிபாடு ஒன்றை நேற்று முன்தினம் நடத்தியது. கிளிநொச்சிக் கந்தசுவாமி ஆலயத்திலும் தென்னிந்திய திருச்சபை தேவாலயத்திலும் நடைபெற்ற இந்த வழிபாடுகளில் மாவட்டத்தின் ஊடகவியலாளர்கள், சமூகப் பெரியோர்கள், சிறுவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-18)

## இரும்பு கடத்திய நபருக்கு 6 மாதம் கடூழியச் சிறை



முல்லைத்தீவு, நவ. 6
கைவேலிப் பகுதியில் கடந்த மார்ச் 27ஆம் திகதி டிராக்டர் வாகனம் ஒன்றில் பெருமளவு இரும்பு பொருள்களைக் கடத்தியதாகக் கூறிக் குற்றஞ்சாட்டப்பட்ட 7 பேருக்குத் தலா 6 மாதக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம்.
மேற்படி வழக்கில் இரும்பு பொருள்களை அரசுடைமையாக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி எதிராளியிடமிருந்து கைவிரல் அடையாளத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (த-101)

## நீரில் மூழ்கியது முசலி



மன்னார், நவ 6
கடும் மழை காரணமாக மன்னார் முசலிப் பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் அங்குள்ள மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். சிலர் வீடுகளில் வசிக்கமுடியாமல் இடம்பெயரவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.
அண்மைக் காலமாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட முசலி பிரதேச செயலகத்துக்குட்பட்ட காயாக்குழி கிராமத்துக்கு வன்னி மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ்பாரூக் கடந்த 3ஆம் திகதி சென்று பார்வையிட்டுள்ளார். அத்துடன் இடர் நிவாரண சேவைகள் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சமைத்த உணவு, குடிதண்ணீர் போன்ற உடனடி நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.
அத்துடன் நீர்மட்டம் அதிகரித்துள்ள கல் ஆறுவரை சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர், கல்ஆற்றின் நீர் மட்ட அதிகரிப்பால் தரை வழிப் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ள 6 கிராமங்களான முள்ளிக்குளம், மறிச்சுக்கட்டி, கரடிக்குழி, ஹூனைஸ் நகர், பாலைக்குழி மற்றும் சீனத் நகர் கிராம மக்களுக்கும் இந்த நிவாரணங்களை வழங்குவதற்கும் ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (த-18)

## சாளம்பன் கிராம மக்களுக்கு தென்னங் கன்று விநியோகம்



ஒட்டுசுட்டான், நவ. 6
சுவிஸ் சூரிச் சிவன்கோயில் சைவத்தமிழ்ச் சங்கத்தின் "அன்பே சிவம்" அமைப்பின் ஊடாக வரப்புயர மரநடுகைத் திட்டத்தின் ஏற்பாட்டில் இறுதிப் போரில் பாதிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சாளம்பன் கிராமத்தைச் சேர்ந்த 200 குடும்பங்களுக்குத் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.
இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன், வினோ நோகராதலிங்கம் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி. சிவமோகன் ஆகியோர் பங்கு கொண்டு தென்னம் பிள்ளைகளை வழங்கினர்.
இதன்போது அந்தக் கிராம மக்களால் பிரமுகர்களிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அவர்கள் கருத்துத் தெரிவிக்கும்போது,
இறுதிப் போரில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 575 முன்னாள் போராளிகள் புனர் வாழ்வு பெற்று வந்திருக்கின்ற போதிலும், இதுவரை அவர்களுக்கு உரிய வகையில் வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.
புளியடிக்குளம், ஐயங்கன்குளம், விளாத்திக்குளம், உடையார் சாளம்பன்குளம் உட்பட்ட குளங்கள் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. குளங்களைப் புனரமைப்பதன் மூலம் விவசாய நடவடிக்கைகளைச் சிறப்பாக மேற்கொள்ளமுடியும் என்று கூறினர்.
அத்துடன் சாளம்பன் கிராமத்தில் நீருக்குப் பலத்த நெருக்கடி நிலை காணப்படுவது தொடர்பிலும் மக்களால் சுட்டிக்காட்டப்பட்டது. குறிப்பாக 90 குடும்பங்கள் தற்காலிக வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றன. எதிர்வரும் மாதங்கள் மாரிகாலம் ஆகையால் வீடுகளுக்குள் நீர் புகுந்து மக்கள் இடம்பெயரும் அபாயம் உள்ளமையால் முகாம் ஒன்றை அமைத்துத் தரச் சம்பந்தப்பட்ட தரப்புக்களை வலியுறுத்துமாறும் மழையைச் சமாளித்து மக்கள் ஒதுங்கிக்கொள்ள ஒரு இடமும் இல்லை என்றும் - மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.
இதேவேளை - இந்தத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கும் தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டன. (த)

## 15 வயதுச் சிறுமி வன்புணர்வு; இளைஞனுக்கு விளக்கமறியல்

முல்லைத்தீவு, நவ. 6
முள்ளியவளைப் பகுதியில் 15 வயதுச் சிறுமியைப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தியதாகக் கூறி குற்றஞ்சாட்டப்பட்ட 18 வயது நிரம்பிய இளைஞர் ஒருவரை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.
மேற்படி நபர் சிறுமியின் மச்சான் எனவும், சிறுமி தனது குழந்தையை அநாதரவாக விட்டுச் சென்றதாகவும் பொலிசார் மன்றில் தெரிவித்தனர்.
மாஞ்சோலை வைத்தியசாலையில் சிறுமியையும், சிறுமியின் குழந்தையையும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (த-101)

## பொன்சேகா வெளிநாடு செல்வதற்கு அனுமதி

கொழும்பு, நவ.6
முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா, வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த தடை, தற்காலிகமாகத் தளர்த்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, நீதிமன்ற கட்டுப்பாட்டில் இருந்த பொன்சேகாவின் கடவுச்சீட்டு 100,000 ரூபா பிணை முறியின் அடிப்படையில் அவரிடம் ஒப்படைப்பதற்கு கொழும்பு உயர்நீதிமன்ற நீதியரசர் தேவிகா தென்னக்கோன் உத்தரவிட்டார்.

பயங்கரவாத தாக்குதல்கள் காரணமாக ஏற்பட்டுள்ள நோய்களுக்கு சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக, பொன்சேகா சிங்கப்பூர் செல்ல வேண்டியுள்ளது என்றும் அதற்கு நீதிமன்ற அனுமதி வேண்டுமென்றும் அவரது சட்டத் தரணியால் உயர் நீதிமன்றத்தில் கோரிக்கை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதற்கமையவே சரத் பொன்சேகாவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. (ற)

# மீண்டும் புலிப்பூச்சாண்டி காட்டி நாட்டை அபாயத்துள் தள்ளாதீர்

## விஜித்த ஹேரத் எச்சரிக்கை

கொழும்பு, நவ.6
வடக்கில் அரசியல் சுதந்திரம் இருந்தால் 'உதயன்' பத்திரிகை அலுவலகம் ஏன் தீவைக்கப்பட்டிருக்கவேண்டும்? - என்று ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் நேற்று சபையில் கேள்வி எழுப்பினார்.

புலி....புலி... என இல்லாத ஒன்றைக் கூறி நாட்டில் தேசிய பாதுகாப்பையும், ஒற்றுமையையும் கட்டியெழுப்ப முடியாது எனத் தெரிவித்த அவர், இந்தத் துருப்புவிளையாட்டை அரசு மீண்டும் தொடர்ந்தால் நாட்டில் மீண்டும் அபாயநிலை தோற்றம்பெறும் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக இடம் பெற்ற குழுநிலை விவாதத்தில்



விஜித்த ஹேரத்

உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:

இல்லாத புலியை இருப்பதாகக் கூறி நாட்டின் தேசிய பாதுகாப்பு பற்றி அரசு கூறுகின்றது. தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்துவதனூடாக தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடியாது.

தேர்தலுக்காக புலி எனும் துருப்புச்சீட்டு விளையாட்டை அரசு மறுபடியும் ஆரம்பிக்கிறது. இந்த விளையாட்டு வேண்டாம். நாட்டில் இல்லாத பிரச்சினையை அது தோற்றுவிக்கும்; ஒற்றுமையைச் சீர்குலைக்கும்.

இன்று வடக்கில் அரசியல் சுதந்திரம் இருந்திருந்தால் 'உதயன்' பத்திரிகை அலுவலகம் தீ வைக்கப்பட்டிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது; ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்காது; இராணுவ ஆட்சி நடத்த வேண்டிய தேவை இருக்காது.

இராணுவ ஆட்சி வடக்கில் நீடித்தால் வடக்கு மக்களிடம் சந்தேகமும் அவநம்பிக்கையும் ஏற்படும். அதைத் தடுக்க முடியாது. வடக்கின் சிவில் நிர்வாகத்தில் இராணுவம்தான் தலையிடுகிறது. 2009 இல் போர் முடிந்துவிட்டது. இன்று 2014 ஆகிவிட்டது. இந்நிலையில் அங்கு ஏன் சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினர் தலையிடுகின்றனர்?

பாதைகளையும், பாலங்களையும் அமைப்பதனூடாக மக்களின் மனங்களை மாற்றமுடியாது. அவர்களுக்கு வாழும் உரிமையை வழங்கவேண்டும். இதைப் பலவந்தமாகச் செய்யமுடியாது.- என்று தெரிவித்தார். (ற)

## கட்டுநாயக்கா ஊழியர்கள் போராட்டம் முடிவு



கொழும்பு, நவ.6
சம்பள உயர்வு உட்பட சில கோரிக்கைகளை முன் வைத்து கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய சுதந்திர ஊழியர் சங்கம் நேற்று ஆரம்பித்திருந்த கணிப் புறக்கணிப்புப் போராட்டம் முடிவுக்கு வந்தது.

கட்டுநாயக்க சுதந்திர ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சை அடுத்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது என்று- தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிப் புறக்கணிப்பால் விமான சேவைகள் பாதிப்படைந்ததுடன் மின்சாரமும் தடைப்பட்டது. இந்த நிலையில் நேற்றைய தினமே பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கியவன் நானே

## பிரதமர் ஜயரட்ன தூக்கிப் போட்டார் குண்டு

நாட்டைத் துண்டுதுண்டாகப் பிரித்தால் மக்களிடையே முரண்பாடு தோற் றம்பெற்று நாட்டில் பிரச்சினை ஏற்படும் என்று தெரிவித்த பிரதமர் டி.எம்.ஜயரட்ன, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை முஸ்லிம்கள் உருவாக்கவில்லை. அதை உருவாக்கியவர் தானே என்றும் தெரிவித்தர்ர்.

நாடாளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சட்டம், ஒழுங்கு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்து இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கையில் 3 இனங்களைச் சேர்ந்த மக்கள் இருக்கின்றனர். வடக் கில் 9 லட்சம் தமிழர்கள் இருக்கின்ற னர். அத்துடன், கிழக்கில் 6 லட்சம் தமிழர்களும், நாட்டின் ஏனைய பகுதிக ளில் 15 லட்சம் தமிழர்களும் வாழ்கின்றனர். அதேபோல், கிழக்கிலும், மத்திய மலைநாடு உள்ளிட்ட ஏனைய பகுதிகளிலும் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இந்நிலையில், ஒரு பகுதி மக்களுக்காக நாட்டை துண்டு துண்டாகப் பிரித்தால் ஏனைய பகுதி மக்கள் பாதிக்கப்படுவர். மக்களுக்கிடையே முரண்பாடு ஏற்படும். அதனால் நாட்டில் பிரச்சினை ஏற்படும். மு.காவை நானே உருவாக்கினேன். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை நானே உருவாக்கினேன். முஸ்லிம்கள் உருவாக்கவில்லை. எனது ஊரான கம்பளையிலுள்ள சிங்கள மக்கள்தான் முஸ்லிம் காங்கிரஸை உருவாக்க முன்வந்தனர். முஸ்லிம்கள் அன்று முன்வரவில்லை. அதனால், அவர்களின் நன்மை கருதி நான் முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கினேன். நாட்டில் சாதாரண சமூக மொன்று கட்டியெழுப்பப்பட வேண்டும். நாட்டிலுள்ள 99 சதவீத மக்கள் ஐக்கிய இலங் கைக்குள் வாழவே விரும்புகின்றனர் - என்றார். (ற)



நிர்மாணத்துறை பொறியியல் சேவை வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ மாலைதீவின் வீடமைப்பு அமைச்சர் மொஹமட் முயிசுவை சந்தித்து கலந்துரையாடினார். அத்துடன் இந்திய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் வெங்கெட் நாயுடுவையும் சந்தித்து உரையாடினார். தென்கொரியாவின் சோல் நகரில் இந்த சந்திப்பு இடம் பெற்றது. தென் கொரியாவின் சோல் நகரில் கடந்த மூன்றாம் திகதி ஆரம்ப மான ஐந்தாவது ஆசிய பசுபிக் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்களின் மாநாட்டில் இலங்கையின் சார்பில் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்ஸ கலந்துகொண்டுள்ளார். இந்த மாநாட்டின் போதே அமைச்சர் விமல் வீரவன்ஸ இந்திய -மாலைதீவு வீடமைப்பு அமைச்சர்களை சந்தித்தார். இலங்கை உட்பட 30 நாடுகளின் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்கள் இந்த மாநாட்டில் பங்கு பற்றுகின்றன. (ற)

## முட்டைக்கு கட்டுப்பாட்டு விலை



கொழும்பு, நவ.6
நேற்று முதல் முட்டை விற்பனைக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. அதன்படி இனிமேல் முட்டை விற்பனையாளர்கள் ரூபா 11.50 சதத்துக்கே முட்டையை விற்பனை செய்ய முடியும்.

உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தர முட்டை உற்பத்தியாளர்கள் தம்முடைய உற்பத்திகளுக்கு நிலையான சிறந்த விலையைப் பெற்றுக்கொள்ளும் வகையில் முட்டைக்கு கட்டுப்பாட்டு விலையில் முட்டைகளை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தரவுடன் நிதி அமைச்சில் நடத்திய பேச்சை அடுத்தே முட்டைக்கான இந்த கட்டுப்பாட்டு விலை தீர்மானிக்கப்பட்டது.

லக் சதொச மூலம் முட்டைகளை கொள்வனவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பேக்கரி உரிமையாளர் அவர்களுக்குத் தேவையான் முட்டைகளை வெளிநாடுகளிலிருந்து அதிக விலைக்கு இறக்குமதி செய்வதாகவும் உள்ளூர் கோழி வளர்ப்பாளர்களை ஊக்குவிக்கும் முகமாக இந்தத் துறையில் ஈடுபட்டுள்ளோருக்கு உதவி நிதி அமைச்சும் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தர தெரிவித்தார்.

# தமிழ்க் கூட்டமைப்பை தடை செய்ய வேண்டும்

## பிரதி அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, நவ.6
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்யவேண்டும் என்று பிரதி அமைச்சர் சரத் வீரசேகர கோரிக்கை விடுத்துள்ளார். நாடாளுமன்றில் வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் அதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கைக்ளை, கோட்பாடுகளைப் பின்பற்றி வருகின்றது என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட உடனேயே அதனுடன் தொடர்புடைய அனைத்து அமைப்புக்களையும் தடை செய்திருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் நோக்கில் அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்யவில்லை. ஆயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாக புலிகளின் கொள்கைகளை பின்பற்றி வருகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# ஹெல உறுமயவை தக்கவைக்க ஜனாதிபதி கடும் முயற்சியாம்

## எஸ்.பி.திஸாநாயக்க கூறுகின்றார்

கொழும்பு, நவ.6
ஜாதிக ஹெல உறுமய கட்சியை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் தக்க வைத்துக்கொள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடும் முயற்சி எடுத்து வருகின்றார் என்று- தெரிவிக்கப்படுகிறது. உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஹெல உறுமய கட்சி அரசிலிருந்து வெளியேறிச் செல்வதைத் தடுக்கத் தம்மாலான அனைத்து முயற்சிகளையும் ஜனாதிபதி எடுத்து வருகின்றார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசமைப்புத் திருத்தம் தொடர்பிலான ஜாதிக ஹெல உறுமய



வின் பரிந்துரைகள் மிகவும் சிக்கல் மிகுந்தவை என அவர் தெரிவித்துள்ளார். இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நீண்ட கால அவகாசம் தேவைப்படும் என்றும் - அவர் தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பது தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்பினர்களுக்கு இடையில் முரண்பட்ட கருத்துக்கள் நிலவி வருகின்றது என்று- தெரிவித்துள்ள அவர், சம்பிக்க ரணவக்க ஒரு நிலைப்பாட்டையும் உதய கம்மன்பில ஒரு நிலைப்பாட்டையும், ஓமல்பே சோபித தேரர் மற்றுமொரு நிலைப்பாட்டையும் கொண்டிருக்கின்றனர் என்றும் -தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசியல் சாசனம் தேர்தலுக்கு முன்னதாக திருத்தம் செய்யப்படாவிட்டால் ஆளும் கட்சியை விட்டு விலக நேரிடும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது. (ற)



# வயசானாலும் அழகு போகவில்லை

தாய்லாந்தின் புகழ்பெற்ற அழகி 67 வயதானாலும், 18 வயதுக்கு ஏற்ற இளமையுடன் வலம் வந்து கொண்டிருக்கிறார்.

தாய்லாந்தில் முதல் மிஸ் யுனிவர்ஸ் பட்டம் பெற்றவர் அபாஸ்ரா ஹாங் சகுலா. 1947 ஆம் ஆண்டு பிறந்த அபாஸ்ரா, 18 வயதில் மிஸ் யுனிவர்ஸ் பட்டம் பெற்றார்.

அதன்பின் சில ஆண்டுகள் புகழ் பெற்று விளங்கினாலும் காலப்போக்கில் உலகம் அவரை மறந்துவிட்டது. இந்த நிலையில் 48 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் அபாஸ்ரா வெளிச்சத்துக்கு வந்துள்ளார், தற்போது இவரைப் பற்றி பேசாத ஊடகங்களே இல்லை என்று கூறலாம்.

இதற்கு காரணம் இன்றும் அழகு சிறிதுகூட குறையாமல் இளமையுடன் இருக்கிறார்.

பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை செய்திருக்கிறார். இளமைக்காகப் பணத்தை வாரி இறைத்திருக்கிறார் என்றெல்லாம் வதந்திகள் பரவினாலும், ஆரோக்கியமான அளவான உணவு, உடற்பயிற்சி, சந்தோஷமான மனநிலை தான் இளமைக்கு காரணம் என தெரிவிக்கிறார் - அபாஸ்ரா.









## விபீஷணனுக்கு அனுமான் வழங்கிய அறிவுரை என்ன?

இராமபிரானது பெயரை நெடுநாள்களாக விபீஷணன் தான் உச்சாடனம் பண்ணியும் இராமதரிசனம் தனக்குக் கிடைக்கவில்லை என அவன் அனுமானுக்குக் கவலையுடன் கூறினான். அதற்கு அனுமான் விபீஷணனை நோக்கி "இராமநாமம் உச்சாடனம் பண்ணுவது மட்டும் போதாது. அவர் இராமருக்குச் சேவையும் செய்தல் அவசியமாகும்" என்று கூறினார். இராமரது நாமத்தை தியானித்திருந்த அதேவேளை தான் இடையறாது இராம சேவையையும் மேற் கொண்டிருந்தமை பற்றி அனுமன் விளக்கிக் கூறினான். இவ்விதம் தான் இராமரது அருளையும் பெற்று அவருக்கு அன்மித்தும் அன்புடையவராகவும் இருக்கும் பாக்கியத்தைப் பெற்றான் என்று விளக்கிக் காட்டினான்.




## விமானத்தை தடுத்து நிறுத்திய எலி

நோர்வே தலைநகர் ஒஸ்லோ நகரில் இருந்து அமெரிக்காவின் நியூயோர்க்குக்கு பயணிகள் விமானம் புறப்பட்டது. அப்போது விமானி அறையில் எலி ஒன்று ஓடியதை விமானி கண்டுபிடித்தார். உடனே விமானம் நிறுத்தப்பட்டது. எலியைப் பிடிப்பதற்கு பாதுகாவலர்கள் முயற்சித்தனர். அது அங்கும், இங்கும் ஓடி அவர்களை அலைக்கழித்தது. சுமார் 5 மணி நேரத்துக்கு பிறகு எலி அவர்களிடம் பிடிபட்டது. இதனால் விமானம் 5 மணி நேரம் தாமதமாக நியூயோர்க் புறப்பட்டுச் சென்றது. அதுவரை பயணிகள் அங்கேயே அமர்ந்து இருந்தனர். விமானத்தில் எலி இருந்தால் அது இயந்திர பகுதிக்குள் சென்று வயர்களை கடித்து சேதப்படுத்தும் வாய்ப்பு உண்டு. அப்போது விமானம் விபத்துக்குள்ளாகும் நிலை ஏற்படலாம். இதைத் தடுக்கவே எலியைப் பிடித்த பிறகே விமானம் புறப்பட அனுமதிக்கப்பட்டது.



## டப்பிங் தொடர்களை நிறுத்த வேண்டும்

சின்னத்திரை தயாரிப்பாளர் சங்கத்துக்கு மீண்டும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார் ராதிகா. சங்கத்துக்காக பல திட்டங்களை அவர் கையில் வைத்திருக்கிறார். இதுபற்றி அவர் கூறியிருப்பதாவது: எங்களுக்கென்று சொந்த அலுவலக கட்டடம் வேண்டும். சங்க உறுப்பினர்கீள் மற்றும் அவர்களின் குடும்ப நலத் திட்டங்களை நிறைவேற்றவும் நிதி தேவைப்படுகிறது. இதற்காக நிதி திரட்டப்போகிறோம். அதை எந்த வகையில் செய்யலாம் என்று யோசித்து வருகிறோம்.

பிற மொழி தொடர்களை இங்கு டப் செய்து ஒளிபரப்புவதால் இங்குள்ள தொழில்நுட்பவியலாளர்களுக்கு வேலையில்லாமல் போகிறது. கேரளா, கன்னடத்தில் டப்பிங் தொடர்கள் கிடையாது. அதுபோன்ற நிலையை இங்கு கொண்டு வரவேண்டும். இதற்காக தொலைக்காட்சி நிறுவன உரிமையாளர்களுடன் பேசுவோம்.

எங்கள் சங்கம்தான் பெப்சி தொழிலாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு அளிக்கிறது. இந்த விடயத்தில் சினிமா வேறு தொலைக்காட்சி வேறு. அன்றைக்குள்ள எபிசோட்களை கொடுத்தாக வேண்டும். இடைவெளி விட முடியாது. தொடர்ந்து படப்பிடிப்பு நடத்தியாக வேண்டும். இதனை பெப்சி அமைப்புடன் பேசி சீர்படுத்துவேன் என்கிறார் - ராதிகா.



## காதலித்தது உண்மை





நயன்தாராவையும், ஹன்சிகாவையும் நான் உயிருக்கு உயிராக காதலித்தேன். அவர்கள்; என்னை புரிந்து கொள்ளவில்லை என்று சிம்பு தெரிவித்துள்ளார்.

சிம்பு, நயன்தாராவை காதலித்தார், முத்தமிட்டார். போட்டோ எடுத்தார்கள். இணையதளத்தில் வெளியானது. பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சிம்பு, நயன்தாரா காதல் முறிந்து போனது. அதன் பிறகு சிம்பு ஹன்சிகாவை காதலித்தார், பிரிந்தார். இது அனைத்தும் தெரிந்ததுதான்.

நான் நயன்தாராவையும், ஹன்சிகாவையும் உயிருக்கு உயிராக காதலித்தேன். அவர்கள்தான் மதம் மாறுவது போன்று எளிதில் மாறி மனதை மாற்றிக் கொண்டார்கள். நயன்தாரா, ஹன்சிகா இருவருமே நான் அவர்கள் மீது வைத்திருந்த உண்மைக் காதலை புரிந்து கொள்ளவில்லை.

நானும், நயன்தாரவும் இது நம்ம ஆளு படத்தில் நடித்தாலும் பழைய நட்பு இல்லை. காதல் முறிவுக்கு பிறகு நயன்தாரா மற்றும் ஹன்சிகாவைப் பார்த்தால் ஒரு ஹலோ சொல்வதோடு சரி பேசுவது இல்லை. அதற்கு காரணம் அவர்கள் என்னை புரிந்து கொள்ளவில்லை.

சினிமா துறையில் என் நெருங்கிய தோழி என்றால் அது த்ரிஷா தான். அவருடன் தான் பல ஆண்டுகளாக நல்ல நட்பு உள்ளது. நாங்கள் அவ்வப்போது சந்தித்துப் பேசுவோம் என்றார்- சிம்பு.

ஒருவருடைய வளர்ச்சியில் பங்கு பற்றாத பாராட்டுக்கள் குறித்து, இளைஞர்கள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்பது திருக்குறள் தரும் எழுதப்படாத செய்தியாகும்.

*(கடந்தவாரத் தொடர்ச்சி...)*

அறம்,பொருள், இன்பம் என்ற மூன்று நெறிகளையும் நீங்கள் சிறு வயது முதலே சரிவரக் கடைப் பிடித்தால், வீடுபேறு தானாக உங்களுக்குக் கிட்டும். அது ஒரு நாளில் வழங்கப்படும் அட்சய பாத்திரமல்ல. அது ஒரு நெடிய பயணம்.

ஒரே நாளில்; இளைஞர் கையில் எதிர்காலம் என்போரும், இனி இளைஞர்களே எல்லாம் என்போரும் யாதொரு முயற்சியிலும் ஈடுபடாமல் வீடுபேறு குறித்துப் பேசித்திரியும் மதம் பரப்பும் பிரிவினருக்கு ஒப்பானவர்களாகவே இருப்பார்கள்.

எனவேதான் ஒருவருடைய வளர்ச்சியில் பங்குபற்றாத பாராட்டுக்கள் குறித்து, இளைஞர்கள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்பது திருக்குறள் தரும் எழுதப்படாத செய்தியாகும்.

இளைஞர்களைப் போற்றுவோம் என்போர் குழந்தைகளை வசதியாக மறந்து விடுகிறார்கள்.

ஒரு குழந்தையின் மூளை என்ற 'காட்டிஸ்க்' அதன் மூன்றில் ஒரு மடங்கை தாயின் கருவில் இருக்கும் போதே நிரப்பிவிடுகிறது.

மற்றொரு மூன்றில் ஒரு பங்கை ஐந்து வயதுக்குள் நிரப்பிவிடும். இறுதி மூன்றில் ஒரு பங்கை ஐந்து வயது முதல் இறக்கும்வரை மெல்ல மெல்லக் கற்க முயல்கிறது.

கடுகு போன்ற ஓர் ஆலம் விதைக்குள் பிரமாண்டமான ஆலமரம் கிளைவிட்டு வளரக்கூடிய செய்தி பதியப்பட்டிருப்பது போலவே குழந்தைக்குள்ளும் அனைத்துச் செய்திகளும் பதிவாகி இருக்கின்றன.

ஆகவே குழந்தைக்குள் பதியப்பட்டுள்ள தகவல்களை சுயமாக வெளிப்படச் செய்வது வரை, அவர்களை வளர்த்தெடுக்கும் பொறுப்பு அடங்கியிருப்பது தான் இளைஞர் கையில் எதிர்காலம், இளைஞர்களைப் பாராட்டுவோம் என்ற பணிகளாகும்.

## இளைஞர்கள் கையில்தான் எதிர்காலம்



இளைஞர்களிடம் ஒப்படைப்பதென்பது யாரோ நான்கு இளைஞர்களைப் பிடித்து வந்து நீங்களே எமது செல்வங்கள், இதோ உங்கள் கையில் எதிர்காலம் என்று சொல்வதல்ல. அது அவர்களைச் செல்வந்தர்களாக்குவதற்குரிய நீண்ட செயற்பாடாகும்.

அந்தச் செயல் மேடையில் முழங்குவதற்குரியதல்ல. சொல்வதற்குரியதல்ல. செய்வதற்குரியதாகும். ஒவ்வொரு இளைஞனும் இதைப் புரிந்து எச்சரிக்கையாக இருப்பது அவசியம் என்பது வள்ளுவர் போன்ற பேரறிஞர்களது கருத்தாகும்.

## காதலில் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது பெண்களே



காதல் தோல்வியை அதிகம் சந்திப்பவர்களாக அல்லது அதனால் அதிகம் பாதிப்படைபவர்களாகக் காணப்படுபவர்கள் நிச்சயம் பெண்களே.

காதல் என்ற ஒன்று இருந்தால் அதில் வெற்றி தோல்வி என்பவை நிச்சயமாக இருக்கத்தான் செய்யும். அதிலும் இன்றைய காலங்களில் காதல் தோல்வி என்பது கட்டாய வார்த்தையாகவும் , சம்பிரதாய வசனமாகவும் மாறிவிட்டது.

காதல் தோல்வி என்பது ஆண், பெண் என இரு தரப்புக்கும் பொதுவான ஒன்றாகவே காணப்படுகின்ற அதேநேரம் காதல் தோல்வியை அதிகம் சந்திப்பவர்களாக அல்லது அதனால் அதிகம் பாதிப்படைபவர்களாகக் காணப்படுபவர்கள் நிச்சயம் பெண்களே.

"கண்ணும் கண்ணும் கொள்ளையடிச்சால் காதல் எண்டு அர்த்தம்" என்று ஒரு பாடல் உண்டு. பொதுவா எங்கட பெடியளிலை எங்கேயோ யாரையோ ஒருத்தர் உயிருக்குயிரா காதலிப்பார்கள். ஆனால் அந்தப் பிள்ளைக்கு அதாவது காதலிக்குத் தெரியாமல் எங்கட பெடியள் வீதி வீதியாக கண்களைக் கொள்ளையடிச்சுக் கொண்டு திரிவாங்கள். பெண்களும் அவன் உண்மையா காதலிக்கிறான் என நம்பி ஒரு சிரிப்பாய் சிக்னல் காட்டுவினம். ஒரு பத்து நாளிலை இருவரையும் பூங்காவிலோ, தியேட்டரிலோ பார்க்கலாம்.

இன்னும் ஒரு பத்து நாளில் பெடியன்ர தொலைபேசி பாவனையில் இல்லை. இப்போது அந்த ஆணின் நினைவுகள் அவனுடன் பழகிய நாள்கள், அவனோடு பேசிய கதைகள், அவனோடு இருக்கும்போது அங்கு இருவரையும் பார்த்த மற்றவர்களின் கண்கள் இவை அனைத்தும் அவளின் நினைவில் பேரிடியாய் அமர்ந்து கொள்ளும். இதனால் அவள் வாழ்க்கையில் மட்டுமல்ல ஆண்கள் மீதான விரக்தியின் உச்சத்துக்குச் சென்று விடுவாள். இதிலிருந்து அவள் மீண்டு வருவதற்குப் பல வருடங்கள் தேவைப்படும்.

அடுத்த பத்தே நிமிடத்தில் தன் உண்மைக் காதலை மறந்து வேறு காதலைத் தேடிவிடுவான் ஆண். ஆனால் பெண்ணோ காதலை மறக்க முடியாமல் துவண்டு விடுவாள்.. மீண்டும் குறிப்பிடுகிறேன் காதல் தோல்வி என்பது இருபாலாருக்கும் பொதுவான ஒன்று. ஆனால் காதல் தோல்வியை அதிகம் சந்திப்பதும் எதிர்கொள்வதும் பெண்களே.

விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

**காதலில் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது**

**ஆண்களா? பெண்களா?**

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## என் அன்பே....



அன்பே....! நித்தம் நித்தம்
உன் நினைவு- என்னை
நினைவிலும் கனவிலும் வாட்டுதடா!
உன் முத்தத்தின் தீச்சுவாலை- என்
மூச்சுக் காற்றையே
உறையச் செய்யுதடா!
இன்பத்திலும் துன்பத்திலும்-
என்னருகில் நீ இருப்பாய் என்று
வாக்களித்தாயே ஆனால்
என்னை இப்பொழுது
துன்பத்தில் மட்டும் தள்ளி விட்டு
தள்ளி நிற்கின்றாயே!

என் அன்பே....!
இருவரித் திருக்குறள் ஒரு பொருள்
சொல்ல- உன் ஒரு நொடிப் பார்வை
ஆயிரம் பொருள்படும் அன்பே!
உன் வார்த்தைகளை விட
உன் மௌனங்களையே நான்
இரசித்தது அதிகம்- அதனால் தான்
ஏனோ என் வாழ்க்கையில் நீ
மௌனமாக நிற்கின்றாயோ-
என் அன்பே! என்
மௌனங்கள் கலையும்
வேளைக்காக மணிக்கணக்கில்
காத்திருக்கிறேன்
என் அன்பே....!

*கே. சற்சொரூபி*
*வவுனியா*

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் இளவல்கள் வட்டம் என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.............................................
முகவரி :-.......................................
........................ ........................
திகதி கையொப்பம்

**இளவல்கள் வட்டம்** ,
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## என் வாழ்வின் பொக்கிஷம்


பள்ளியறியாப் பருவத்தில்
படிக்க கள்ளம் பண்ணி
பொய்க் கண்ணீர் சிந்திய
பொழுதுகளை எண்ண
சிரிப்பு வருகிறது இன்று
முதல் நாள் பள்ளியறையில்
விழி பிதுங்க அடியெடுத்து வைத்த
என்னைக் கரம் பற்றிய நட்பு
பல கதைபேசி சிரித்த நாள்களும்
பரிமாறிய உணவுகளும்
நாள் முழுவதும்
நகைப்போடு பொழுதுபோக்கி
முதல் நாள் விடிய விடிய படித்து
பாதித் தூக்கத்தோடு
எழுதிய பரீட்சைகளையும்
வாங்கிய தண்டனைகளையும்
விழாக்காலங்களில்
அணி திரண்டு
சிறப்பித்த மேடைகளையும்
நினைக்க அழுகை
வருகிறது இன்று என்
வாழ்வில் பொக்கிசமான
அந்தப் பள்ளி நாள்கள்-
மீண்டும் வருமா?

## தனிமை

எத்தனை பேர்
என்னருகிலிருந்தாலும்
என் தனிமையை
உணர்கின்றேன்...
எனக்குள் உன்
நினைவுகள்
ஓடிக் கொண்டிருப்பதால்



*எஸ். தர்சி,*
*சுண்டிக்குளி.*




## பேஸ்புக் காதல்

இணையத்தில்
கொண்ட காதலில்
கற்பனைகள் அதிகம்
முகம் பார்க்காமல்
வந்த காதல்
பொழுது போக்காய்...;
ஏமாற்று வித்தையாய்..

திருமணம் என்ற
வார்த்தையில்
காணாமல் போய் விடுமே!

*சிந்து சிவதாஸ், சுதுமலை.*

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காணாமற்போனவர்கள் இறந்து போனவர்களா?

இறுதிப் போரின்போது காணாமற்போனவர்கள் அனைவரும் உயிரிழந்துவிட்டார்கள்; அல்லது கொல்லப்பட்டுவிட்டார்கள் என்று மறைமுகமாக அரசு ஒப்புக்கொள்ள ஆரம்பித்திருக்கிறதா என்கிற சந்தேகம் எழுந்துள்ளது.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது அமர்வுகளை கடந்த 3 தினங்களாக முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்தியது. இந்த அமர்வின் முன்பாக கண்ணீரும் கம்பலையுமாகப் பலர் சாட்சியமளித்தார்கள். அவர்களில் மிகப் பெரும்பான்மையானோர் தமது உறவினர்களைத் தேடிக் கண்டுபிடித்துத் தரும்படிதான் ஆணைக்குழுவின் முன்பாக மன்றாடுகின்றார்கள்.

தமது உறவுகள் இன்னும் எங்காவது கண்காணாத இடங்களில் தடுத்து வைக்கப்பட்டும் அடிமைகளாக அடைத்து வைக்கப்பட்டும் இருக்கக்கூடும் என்றே அவர்கள் நம்புகிறார்கள். இதனாலேயே அவர்களைக் கண்டுபிடித்துத் தரும்படி அவர்கள் ஆணைக்குழுவின் முன்பாக மன்றாட்டமாகக் கோரிக்கை முன்வைக்கிறார்கள்.

எனினும் இந்த விசாரணை ஆணைக்குழுவின் மூலம் அவர்களைக் கண்டறிய முடியுமா என்பது சந்தேகமே. இந்த ஆணைக்குழுவின் விசாரணைப் போக்கைப் பார்க்கும்போது இறுதிப் போரில் நபர்கள் காணாமற்போனமைக்குப் பொறுப்பாளிகள் மற்றும் தனிநபர்கள் யார் என்பதையாவது கண்டறிவார்கள் என்று தோன்றவில்லை.

ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையின் ஒட்டுமொத்த விளைவு என்ன என்பது உண்மையில் எவருக்குமே தெரிந்திருக்கவில்லை. ஆணைக்குழுவின் தலைவரும் அவ்வப்போது சாட்சிகள் கேள்வி எழுப்புகையில் இந்த விடயத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார். 2010ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் முன்பாகவும் இதே போன்று மக்கள் தமது உறவுகள் காணாமற்போனமை குறித்துச் சாட்சியமளித்திருந்தார்கள். அதன் விளைவாக தற்போதைய ஆணைக்குழு நியமிக்கப்பட்டதைத் தவிர வேறு எதுவும் உருப்படியாக நடக்கவில்லை.

அதேபோன்று இந்த ஆணைக்குழுவும் தமிழர்கள் காணாமற்போனமைக்கு பொறுப்பான்வர்களைக் கண்டறிந்து அவர்களைப் பொறுப்புக்கூற வைக்கும் வகையில் அறிக்கையிடும் என்று தோன்றவில்லை. காணாமற்போனவர்களை இறந்தவர்களாகப் பதிவு செய்து இந்த விவகாரத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் ஆணைக்குழுவும் இப்போது நாட்டம் காட்டுவதாகத் தெரிகிறது. முல்லைத்தீவு சாட்சியப் பதிவின்போது இது நடைபெற்றது. புதிதாக சாட்சியமளிக்க விரும்பியவர்களிடம், அவர்களது உறவினர்களை இறந்து விட்டனர் என்று பதிவு செய்யும்படி ஊக்கமளிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு இணங்கியவர்களுக்கு ஆணைக்குழு பரிந்துரைக் கடிதம் ஒன்றையும் கூடவே வழங்கியிருக்கிறது.

காணாமற்போனவர்கள் அனைவரும் இறந்து போய்விட்டார்கள் என்று பதிவு செய்யப்பட்டுவிட்டால், அவர்களைப் போரில் இறந்துபோனவர்கள் கணக்கில் சேர்த்து இந்த விவகாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்து விடலாம். அதன் பின்னர் அது குறித்த சர்வதேசக் கவனமும்கூட இல்லாமல்போய்விடும்; பிரச்சினை தீர்ந்துவிடும் என்று கணக்கிடப்படக்கூடும்.

ஆனால், காணாமற்போனவர்களில் பெரும்பாலானவர்களின் உறவினர்களின் நோக்கம் தமது உறவினர்கள் உயிரோடு இருந்தால் அவர்களைக் கண்டறிவதும் அப்படி இல்லையென்றால் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதும் அது எப்படி நிகழ்ந்தது என்பதை அறிவதும் அதற்குப் பொறுப்பானவர்கள் யார் என்று அறிவதும்தான். ஆணைக்குழுவின் பணிகள் அந்த எதிர்பார்ப்பை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் அமையவேண்டியது மிக அவசியம்.

# வடக்கில் கூட்டமைப்பின் நிர்வாகம் சீராகுமா?

சேரலாதன்



வட பகுதியிலுள்ள பிரதேச சபை ஒன்றின் தவிசாளருக்கும், செயலாளருக்குமிடையே ஏற்பட்ட பிணக்கு நீதிமன்றம் வரை சென்று அந்த இருவரும் பிணைமுறி செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதுடன் நீதிவானின் கண்டனத்துக்கும் ஆளானதாகச் செய்தியொன்று தெரிவிக்கின்றது. வட பகுதியைப் பொறுத்தவரையில் இதுவொன்றும்புதியவிடயமல்ல. வடக்கு மாகாண சபையின் முதலமைச்சருக்கு எதிராக அதன் பிரதம செயலாளர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்த நிலையில் அதனையொட்டியதாக பிரதேச சபையின் தவிசாளர் ஒருவருக்கு எதிராக செயலாளர் ஒருவர் வழக்குத் தாக்கல் செய்ததால் மேற்குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

### மதிக்காமல் செயற்படும் நிலை

வடக்கைப் பொறுத்தவரையில் மாகாண சபை மட்டுமல்ல பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் உள்ளன. உள்ளூராட்சி மன்றங்களுக்குச் செயலாளர்களை நியமிக்கும் அதிகாரம் ஆளுநருக்கே உள்ளதால் இவ்வாறு நியமனம் பெற்ற செயலாளர்களில் பலர் அரச விசுவாசிகளாகவே காணப்படுகின்றனர். இவர்கள் தவிசாளர்களின் கட்டளைகளை மதிக்காமல் செயற்படும் நிலை காணப்படுவதால் தினமும் முரண்பாடுகள் ஏற்படுவதுடன் அலுவலகக் கடமைகளும் பாதிக்கப்படுகின்றன.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் அரச அதிகாரிகளும் அரசியல் மயப்படுத்தப்பட்ட நிலை காணப்படுகின்றது. அரசுடன் இணைந்திருப்பவர்களைத் திருப்திப்படுத்தினால் போதுமென்ற நினைப்புடன் இவர்கள் செயற்பட்டு வருகின்றனர். இதனால் எதிர்க்கட்சியினரை உதாசீனம் செய்வதற்கு இத்தகையவர்கள் தயங்குவதில்லை.

மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு ஜனநாயக நாடொன்றில் அதிக மதிப்பு வழங்கப்படல் வேண்டும். இது நாடாளுமன்ற உறுப்பினர் தொடக்கம் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கும் பொருந்தும். ஆனால் ஆளும் கட்சியின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களிலும், எதிர்க்கட்சிகளின் வசமுள்ள உள்ளூராட்சி மன்றங்களிலும் பாகுபாடு காண்பிக்கப்படுகின்றமை நியாயமானதல்ல. இதனால் பொது மக்களின் வெறுப்பை அந்த உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்கள் சம்பாதித்துக் கொள்கின்றனர்.

வடக்கு மாகாண சபையிலும் இதே நிலைதான் நீடிக்கின்றது. மக்களின் வாக்குப்பலத்தைக் கொண்டு ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள முதலமைச்சரையும், அமைச்சர்களையும், உறுப்பினர்களையும் அங்குள்ள அதிகாரிகள் கண்டு கொள்வதில்லையென்ற குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன. அரசினால் நியமிக்கப்பட்ட, அரசின் ஆசீர்வாதம் முழுமையாகக் கிடைக்கப் பெற்ற ஆளுநரே சகல விடயங்களையும் கையாள்வதால் அவரைத் துதிபாடுவதிலேயே அதிகாரிகள் காலத்தைக் கடத்தி வருகின்றனர். இதனால் மக்களின் குறைகளைத் தீர்த்து வைக்க முடியாததொரு இக்கட்டான நிலைக்குள் முதலமைச்சர் தலைமையிலான மாகாண சபை நிர்வாகம் தள்ளப்பட்டுள்ளது.

### இந்தியா வழங்கவுள்ள வாகனங்கள்

அண்மையில் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியொன்று பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு இந்திய அரசு வாகனங்களை வழங்குவதற்கு முன்வந்தபோதிலும்இலங்கை அரசு வாகனங்களின் பெறுமதியிலும் மூன்று மடங்கு வரியை விதிப்பதாகவும் இதனை நீக்கி விடுமாறு இந்திய அரசு விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால், வரிகளைச் செலுத்திய பின்னர் வாகனங்கள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படவிருப்பதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போதைய நிலையில் இலங்கை அரசுக்கு நெருக்குதல்களைவழங்கி மாகாண சபைக்குரிய அதிகாரங்களைப் பெற்றுக் கொடுப்பதே இந்திய அரசின் முன்னுள்ள முக்கிய பிரச்சினையாகும். 1987 இல் ஏற்படுத்தப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவானவைதான் மாகாண சபைகள். இதற்காகவே இலங்கை அரசமைப்பில் 13 ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் இந்த ஒப்பந்தத்தை மதிக்காத வகையில் இலங்கையரசு தன்னிச்சையாகச் செயற்பட்டு வருகின்றது. இதனைத் தட்டிக் கேட்கும் துணிவு இந்தியாவிடம் இருப்பதாகத்தெரியவில்லை. மாறாக இலங்கை அரசின் கால்களைப் பற்றிப் பிடித்துக் கொள்ளும் வகையிலேயே அதன் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இந்திய- இலங்கை இராணுவ கூட்டுப் பயிற்சி, இலங்கைக்கு ஆயுதங்களை விநியோகித்தல், அநகாரிக தர்மபாலவுக்கு நினைவு முத்திரை வெளியிடல், இலங்கையின் கடற்படைத் தளபதிக்கு விருது வழங்கிக் கௌரவித்தல் என இலங்கையைக் குளிரவைக்கும் இந்தியாவின் செயற்பாடுகள் தொடர்கின்றன. இவை மேலும் தொடருமென எதிர்பார்க்கலாம். ஆனால் இலங்கைக் கடற்படையினால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டு இதுவரை அவர்களின் 89 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டது தொடர்பாகவும், தமிழக மீனவர்கள் ஐந்து பேருக்கு போதைப் பொருளைக் கடத்தியதாகத் தெரிவித்து தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டமை தொடர்பாகவும் இந்திய மத்திய அரசு காத்திரமான நடவடிக்கை எதுவும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே மாகாண சபை உறுப்பினர்களுக்கு பெரும் நிதி செலவிட்டு வாகனங்களை வழங்குவதை விட மாகாண சபைக்குரிய அதிகாரங்களை இலங்கை அரசிடமிருந்து பெற்றுக் கொடுத்து மக்கள் நலத் திட்டங்களை அது செயற் படுத்துவதற்கான ஏது நிலையை உருவாக்குவதே நன்மை பயக்கும்.

### ஆளும் தரப்பில் மோதல்

தற்போது மாகாண சபையின் ஆளும் தரப்பு உறுப்பினர்களும் தமக்குள் மோதிக் கொள்ளும் நிலையொன்று காணப்படுகின்றது. ஏற்கனவே உள்ளூராட்சி மன்றங்கள் ஆளும் கட்சியினரின் முரண்பாடுகளால் சீர்குலைந்து காணப்படும் நிலையில்தற்போது மாகாண சபைக்குள்ளும் இது புகுந்துள்ளது. பிரதேச வாதம் தொடர்பான விவாதங்களும் அங்கு இடம்பெற்றதைக் காண முடிந்தது. தமிழர்களிடையே பிளவை ஏற்படுத்தும் திட்டமிடப்பட்ட சதியென இது வர்ணிக்கப்படுகின்றது. தமிழர்களின் ஒற்றுமையைச் சிதைத்து விட்டால் அவர்களின் பேரம் பேசும் சக்தியை உடைத்து விடலாமென ஏற்கனவே பல திட்டங்கள் அரங்கேற்றப்பட்டதை எளிதில் மறந்துவிட முடியாது. விடுதலைப் புலிகளும் இவ்வாறு தான் பிளவுபடுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுவதுண்டு.

எனவே தமிழ் மக்கள் சகல விடயங்களையும் சீர்தூக்கிப் பார்த்து உண்மை நிலையை உணர்ந்து கொள்ள வேண்டும். வெறுமனே உணர்ச்சிகரமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் ஒன்றுமே கிடைக்கப் போவதில்லை. மாறாக பிளவுகள் அதிகரிப்பதற்கே வழி வகுக்கும்.

### உருவாக்கப்படும் மாயை

வடபகுதியைப் பொறுத்த வரை யில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆளத் தெரியாதவர்கள் என்ற மாயையை மக்களின் மனங்களில் உருவாக்குவதில் அரசும் அரசுடன் இணைந்து பணியாற்றுபவர்களும் ஈடுபட்டுள்ளனர். இதற்கான பரப்புரைகளும் இடம்பெற்று வருகின்றன. இதன் ஓர் அங்கமாகவே வடக்கு மாகாண சபையை வைக்கல் பட்டறை நாய்களென ஜனாதிபதி கிளிநொச்சியில் வைத்துக் கூறியதை எடுத்துக் கொள்ள வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களைச் செயலாளர்களும், மாகாண முதலமைச்சரை பிரதம செயலாளரும் மதித்து நடக்காத நிலையில் அவர்களால் நிர்வாகத்தை எவ்வாறு கொண்டு செல்ல முடியும்?

ஆனாலும் தம்மால் இயன்ற வரையில் உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படுவதைக் காண முடிகின்றது. இந்த வகையில் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். மாகாண சபையும் ஓரளவாவது இயங்க வேண்டுமாயின் அதற்குரிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். முதலமைச்சரின் அதிகாரங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும். வெறுமனே வாகனங்களில் பயணங்களை மேற்கொள்வதால் எந்த வகையிலும் பயன் கிடைக்காது என்பதையும் மாகாண சபை உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் ஏதோ எதிர்பார்ப்புடன் தான் அவர்களைத் தெரிவு செய்தனர். இந்த எதிர்பார்ப்பில் ஒரு சிறிய பகுதியையாவது இவர்கள் நிறைவேற்றியே ஆக வேண்டும். அப்போதுதான் மக்களின் மனங்களில் இவர்கள் தொடர்பாக ஓரளவாவது நம்பிக்கை ஏற்படும்.

# நெற்செய்கையில் புதிய இனம்

## அறிமுகமும் புதிய தொழில்நுட்பமும்

பொ.அற்புதச்சந்திரன்,
பிரதி மாகாண விவசாயப்
பணிப்பாளர். மன்னார்.

(நேற்றைய தொடர்ச்சி)

**விதை நெல்லை சுத்திகரித்தல்:-**

நெல்லை சுத்திகரிப்பதன் மூலம் பல அனுகூலங்களை பெற்றுக் கொள்ளலாம்.

மன்னார் மாவட்டத்தில் முருங்கன் விவசாயப் பண்ணையில் ஒரு புசல் நெல்லுக்கு 25 ரூபாவைச் செலுத்தி விதை நெல்லை சுத்திகரிக்க முடியும். அத்துடன் ஆண்டான்குளம், உயிலங்குளம் வீதியில் கறுக்காய்குளம் பிரதேசத்தில் மாதோட்ட விவசாய நிறுவனத்தால் யினால் நிறுவப்பட்டுள்ள விதைகள் சுத்திகரிப்பு நிலையத்தில் கிலோவுக்கு 4 ரூபா செலுத்தி கீரிச்சம்பா விதை நெல்லை சுத்திகரிக்கலாம். சுத்திகரிக்கப்பட்ட விதைநெல்லை பாவிப்பதனால் மேலே கூறப்பட்ட நன்மைகளை அடைய முடியும். மேலும் நீண்ட வறட்சியான காலங்





களில் உற்பத்தி செய்தபோது முழுமையாக நிரம்பாத நெல்மணிகளே அறுவடை செய்யப்பட்டிருக்கும். அவற்றை விதைப்பதனால் நெல்மணிகள் முளைத்தாலும் வீரியமாக வளராது. அத்துடன் வயலில் தொட்டம் தொட்டமாக முளைக்காமலும் காணப்படும். இதனால் திரும்ப திரும்ப விதைக்க வேண்டி வரலாம் சரியான பயிர் அடர்த்தியை பேணமுடியாமலும் போகும். அத்துடன் எதிர்பார்க்கும் விளைச்சலையும் பெற்றுக் கொள்ள முடியாது.

ஆகவே விதை நெல்லை கட்டாயமாக மேற்குறிக்கப்பட்ட சுத்திகரிக்கும் நிலையங்களுக்கு எடுத்துச்சென்று சுத்திகரித்தல் அவசியமாகும். சுத்திகரித்த விதைநெல்லின் முளைத்திறனானது 85 வீதத்துக்குக் குறையாமல் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

**விதை நெல்லைப் பரிகரித்தல் :-**

100 லீற்றர் கொள்ளக்கூடிய பரல் ஒன்றை எடுத்து 75 லீற்றர் நீரை நிரப்பவும். பின்னர் முட்டை ஒன்றை நீரினுள் இட்டு 25 சத நாணயக் குற்றி அளவில் முட்டையின் அகலமான பாகம் மேல் நோக்கி மிதக்கும் வரை கறியுப்பை இட்டு கரைக்கவும். இறுதியாக நெல்லை அதனுள் இட்டு நன்கு கலக்கவும். மிதக்கும் சப்பிகள் அரை வயிறன்கள், களை விதைகள் ஆகியவற்றை அகற்றவும். நீரினடியில் அமிழ்ந்திருக்கும் நெல்லை எடுத்து தூய நீரில் 2 தொடக்கம் 3 தடவைகள் கழுவிய பின் நிழலில் உலர விட்டு விதைக்கவும்.

பாரம்பரிய முறையாக இருந்தாலும் இம்முறையூடாக விதைகளைப் பரிகரிக்கலாம் அல்லது பொருத்தமான பங்கஸ் நாசினியைப் பயன்படுத்தலாம்.

**நடுகை முறைகள் :-**

தற்போது நவீன நடுகை முறைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் பரசூட் முறையிலான நடுகை முறை குருமுசோல் வகை என்பன பொருத்தமானதாக அமையும். 8 கிலோ விதை நெல்லை மட்டும் பாவித்து ஒரு ஏக்கரில் விதைக்க முடியும். பரசூட் முறையிலான நாற்று நடுகையினை முருங்கன் விவசாய போதனாசிரியர் பிரிவில் பள்ளக்கமத்திலும் மாந்தை விவசாய போதனாசிரியர் பிரிவில் சொர்ணபுரி கிராமத்திலும் முன் மாதிரி துண்டங்கள் அமைத்து செயல்முறை விளக்கமளிக்கப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு இம்முறையிலான நடுகைமுறைக்கான பயிற்சிகள் வழங்கமுடியும்.

**நாற்று நடுகை இயந்திரம் அறிமுகம் :-**

நெல் நாற்று நடுகை இயந்திரத்தின் மூலம் நாற்றுகளை நடுகை செய்வதற்கு ஒரு புசல் விதை நெல் மட்டும் போதுமானது. விதை நெல்லை 2 அடி அகலமும் 90 அடி நீளமுமான பொலித்தீன் நடுகை செய்யவுள்ள வயலுக்கு அருகில் நீர்ப்பாசன வசதியுள்ள இடமாகவும் தெரிவு செய்து அவ்விடத்தில் விரித்து விடவும். அதன் மேல் சிறிதளவு மண்ணை பரப்பி. விதை நெல்லை கௌச்சோ பங்கநாசினி கொண்டு பரிகரித்த பின்னர் பொலித்தீன்மேல் இடவும். 3 நாள்களுக்கு நிழல் வழங் கவும் அத்துடன் காலை மாலை பூவாளி மூலம் நீர் ஊற்றவும். நாற்றுக்கள் சிறிது வளர்ந்த பின் நீரினை கூட்டிவிடலாம். ஒவ்வொரு நாளும் நன்கு கன்காணிக்க வேண்டும். நோய்த் தாக்கங்கள் காணப்படுமாயின் பரிந்துரை செய்யப்பட்ட நாசினியை விசிறவும். பொலித்தீனுக்கு பதிலாக ஓர் அடி அகலமும் 2அடி நீளமும் கொண்ட 93 பிளாஸ்ரிக் றோளையும் பயன் படுத்தலாம்.

விதைத்து 14 தொடக்கம் 24 நாள்களுக்கிடையில் நாற்றுக்களை வயலில் நடுகை செய்யலாம். ஓர் அடி நீளமுள்ள துண்டுகளாக பொலித்தீன் வெட்டி நாற்று நடும் இயந்திரத்தின் தட்டில் நாற்றுக்களை அடுக்கி. தயார் செய்யப்பட்ட வயலில் நடுகையை மேற்கொள்ளளாம். வயலை களித்தரையாயின் 2 நாள்களுக்கு முன்பும் மணல் தரையாயின் ஒரு நாளுக்கு முன்பும் சேறடித்து தயார் செய்ய வேண்டும். 3 மாத வயதுடைய நெல்லினங்களை இவ்வாறான நடுகைக்கு தவிர்ப்பது நல்லது. பொதுவாக 3½ மாத அல்லது 4 மாத வயதுடைய நெல்லினங்களே சிறப்பானது நடுகை இயந்திரமானது சுமார் 6½ லட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யக் கூடியதாகவுள்ளது.

மேலும் எதிர்வரும் போகத்தில் மன்னார் மாவட்டத்தில் ஐந்து விவசாய போதனாசிரியா பிரிவுகளில் செய்முறை விளக்கம் மேற்கொள்ளப்படும் என அறியத் தருகின்றேன். குறிப்பிட்ட இயந்திரத்தின் மூலம் நாற்று நடுகையானது நானாட்டான் விவசாயப் போதனாசிரியா பிரிவில் பொய கட்டைக்காடு கிராமத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 03 திகதி பிரதேச விவ சாயிகளுக்கு செயல்முறை விளக்கமளிக்கப் பட்டுள்ளது.

கூலியாள்களுக்கான செலவு அதிகரித்து வரும் நிலையில் தனியொருவரினால் இதன் மூலமாக ஒரு நாளைக்கு 2 ஏக்கர் வரை நடுகை செய்ய முடியும்.

**சேதனப்பசளை பாவனையும் ஊக்குவிப்பும்:**

இலகுவாக கிடைக்கக் கூடிய வைக்கோலினை மீண்டும் வயலுக்கு இடுவதனால் மண்வளத்தை பேணுவதுடன் உரப்பாவனையைக் குறிப்பிட்டளவு குறைத்துக் கொள்ள முடியும். தற்போது அறுவடை இயந்திரங்ளைப் பாவித்து நெல் அறுவடை செய்யப்படுவதனால் வயலில் மீதமாக விடப்படும் வைக்கோலைப் பரவி விட்டு நீரை தேக்கி விடுவதனால் அவை மீண்டும் உக்கி மண்ணுடன் கலந்து விட வாய்ப்பாக அமையும். அத்துடன் நெல்லைக் குற்றும் போது 25 வீதம் உமி வெளியேறுகின்றது. வீணாகப் போகும் இந்த உமியினைப் பகுதியாகக் கருக்கி வயலினுள் இட்டு உழுது விடுவதன் மூலம் கீழ் குறிப்பிடப்படும் பயன்களை பெற்றுக் கொள்ளலாம். விளைச்சல் அதிகரிக்கும், நுண்மூலகமான சிலிக்கன் அதிகளவு கிடைக்கும். மண்ணின் பெ[illegible]திக இயல்புகளை மேம்படுத்தும், நீரை பிடி[illegible]து வைத்திருக்கும் இயல்பை கூட்டும், ம[illegible]ணின் கற்றயன் மாற்று கொள்ளளவினை அ[illegible]ரிக்கும், மண்ணில் உருவாகக் கூடிய நச்[illegible] தன்மையைப் போக்கும்.



படத்தில் காட்டப்பட்டுள்ளவாறான உமியை பகுதியாக கருக்கும் உபகரணமானது 4500 ரூபா செலவுடன் செய்து கொள்ள முடியும். மேலும் முதல் உழவுக்கு முன்னா ஓர் ஏக்கருக்கு பின்வரும் அளவுகளில் சேதனப்பசளை இடுவது சிபாரிசு செய்யப்படுகின்றது.

மாட்டெரு - 2 மெட்றிக் தொன், பசுந்தாட் பசளை - ஆள் தூக்கக்கூடிய அளவு 35 கட்டுகள். கருக்கிய உமி -250 கிலோ.

பசுந்தாட் பசளையாக கிளிசிரிடியா இலைகள் பாவிப்பது மிகவும் சிறந்தது. இத் தேவைக்காக வேலிகளில், வயல் ஓரங்களில் வரம்புகளில் கிளிசிரிடியா தடிகளை நட்டு அவற்றின் இலைகளை பசுந்தாட் பசளையாக பயன்படுத்தி கொள்ளலாம். தடிகளை உயிர்கரி மற்றும் மின்சாரம் உற்பத்திகளுக்கு பாவித்துக் கொள்ளலாம். தடிகளை எரித்து பெறப்படும் மின்சார உற்பத்திக்கு ஒரு கிலோ தடி 3 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்படுகின்றது.

(தொடரும்)

# காலநிலை மாற்றமும் மரங்களும்

செல்வராசா

பல நாடுகளின் முக்கிய ஓர் எழுவினாவாக பிரச்சினையாக அமைவது கால நிலை மாற்றம் என்பதாகும். அதனால் அரசுகளினதும், அபிவிருத்தி நிறுவனங்களினதும், நிவாரண முகவர்களினதும், மற்றும் பல்வேறுபட்ட அமைப்புக்களினதும், சமூகங்களினதும் நிகழ்ச்சி நிரலில் கால நிலை மாற்றம் என்பது முதன்மை பெறுகின்றது.

ஏனைய நாடுகள் காட்டும் கரிசனையில் ஒரு சிறிதளவாவது எமது அரசு எமது, அபிவிருத்தி நிறுவனங்கள், எமது நிவாரண முகவர்கள் மற்றும் பல்வேறுபட்ட அமைப்புக்கள், சமூகங்கள் காட்டுகின்றனவா என்று ஒரு முறை திரும்பிப் பார்க்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

நாம் இந்தப் புவியை எமது மூதாதையரிடமிருந்து மரபுரிமைச் சொத்தாக சுவீகரித்துக் கொள்ளவில்லை. உண்மையில் எமது எதிர்காலச் சந்ததியினரிடமிருந்து, கடனாகப் பெற்றுள்ளோம் என்பது ஓர் அமெரிக்க இந்திய முது மொழி. அந்த முதுமொழியைக் கவனத்திற் கொள்ளாமையினாலேயே நாம் தற்போது பல இயற்கைப் பேரிடர்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். அல்லாமலும் ஏற்கனவே எமது எதிர்காலச் சந்ததியினர் மீது, காலநிலை மாற்றத்தின் தாக்கம் தொடங்கிவிட்டது.

தற்போதைய மா்னுட ஜாதியின் ஒட்டு மொத்தமான கூட்டு நடத்தைப் பிறழ்வினால், புவி பல்வேறு வகையிலும் வகை தொகையின்றிச் சுரண்டப்படுகின்றது. மரங்கள் தறிக்கப்படு கின்றன. மரங்கள் நடுவதில் அக்கறை காட்டப்படுவதில்லை. அதற்கான தண்டனையை நாமும் எமது எதிர் காலச் சந்ததியும் அனுபவித்தே தீரவேண்டும். அனைத்து மக்களினதும் மனங்களிலும் நாம் மாபெரும் தவறு செய்கின்றோம் என்கின்ற எண்ணப் பாங்கு ஏற்பட்டு செயற் படாத வரையில் எமக்கும், எமது பிள்ளைகளுக்கும், பிள்ளைகளது பிள்ளை களுக்கும் மீட்சியே இல்லை.

இதனை அலட்சியம் செய்யாது ஒவ்வொரு பொது மக்களினதும் உள்ளங்களிலும் உறைக்கத்தக்கதாக இச் செய்தி எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

மரம் நடுகை மாதம்



**துவலுவும், புவி வெப்பமயமாதலும்**

மத்திய பசுபிக் கண்டத்திலுள்ள ஒரு நாடு துவலு என்பது. 10.000 பழங்குடி மக்களைக் கொண்டது. இந் நாடு. இந்நாடு காணாமல் கோகும் நிலையிலுள்ளது. அதற்குக் காரணம் நிலம், கடல், கால நிலையில் ஏற்படும் மாற்றங்களாகும். காணாமற் போகப் போகும் இந்த நாட்டின் மீதான கவனத்தை ஈரத்து வருகின்றது. பல்வேறு விவாதங்கள் உலகளாவிய ரதியில் நடைபெற்று வருகின்றது. அவரகளது சமகால இலக்கியங்களும் இவரகள் எதிர் கொள்ளும் இயற்கை இடர்களைப் பேசு பொருளாகக் கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன.

## அணு ஆயுத பயங்கரவாதம்
### இந்தியா எச்சரிக்கை

நியூயோர்க், நவ.6

அணு ஆயுத பயங்கரவாத அச்சுறுத்தல் அதிகரித்து வருவதால், அணுசக்தி பாதுகாப்பை மேம்படுத்த சர்வதேச ஒத்துழைப்புத் தேவை என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா.பொதுச்சபையில் சர்வதேச அணுசக்திக் கழகம் சமர்ப்பித்துள்ள ஆண்டறிக்கை குறித்து, ஐ.நா.வுக்கான இந்தியத் தூதுக்குழுவின் முதன்மைச் செயலர் அபிஷேக் சிங் திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: சர்வதேச சமுதாயம் சந்திக்கும் மிக முக்கிய பிரச்னையாக அணு ஆயுத பயங்கரவாத அச்சுறுத்தல் உருவெடுத்து வருகிறது. உலக நாடுகள் அதனை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு, திறன் வாய்ந்த சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் என்று அபிஷேக் சிங் குறிப்பிட்டுள்ளார். (வ)

# தூக்கு நிறைவேறினால் இந்திய அரசே பொறுப்பு
## திருமாவளவன் காட்டம்



இலங்கையில் ஐந்து தமிழக மீனவர்களின் மரண தண்டனை நிறைவேற்றப்படுமானால், அதற்கு இந்திய அரசே முழுப் பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவித்தார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன்.

தமிழக மீனவர்கள் 5 பேருக்கு இலங்கை உயர் நீதிமன்றம் அண்மையில் தூக்குத் தண்டனை விதித்தது. அதைத் தொடர்ந்து தமிழக அரசியல் கட்சிகள் சார்பில் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம், மறியல் உள்ளிட்டவை நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், தமிழக மீன வர்கள் 5 பேருக்கு விதிக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனையை ரத்துச் செய்யக் கோரி விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கட்சித் தலைவர் தொல். திருமா வளவன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக் கணக்கானோர் பங்கேற்று இலங்கை அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

அப்போது, செய்தியாளர்களிடம் பேசிய திருமாவளவன், "இலங்கையுடன் பேசித் தமிழக மீனவர்களை காப்பாற்ற இந்திய அரசு நடவடிக்கை வேண்டும்' என்று வலியுறுத்தினார்.

மேலும், குறித்த மீனவர்களின் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் நிலை ஏற்பட்டால் இந்திய அரசே அதற்கான முழுப் பொறுப்பை ஏற்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார். இதனிடையே, திருச்சியில் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். (வ)

## கன்னடத் தயாரிப்பாளரை கரம் பிடிக்கிறார் பாவனா

திருவனந்தபுரம், நவ.6

கன்னட திரைப்படத் தயாரிப்பாளரை நடிகை பாவனா திருமணம் செய்யவுள்ளார். தமிழில், சித்திரம் பேசுதடி, ஜெயங்கொண்டான், வெயில், தீபாவளி, ராமேஸ்வரம் உட்பட ஏராளமான படங்களில் நடித்திருப்பவர் மலையாள நடிகை பாவனா. தற்போது கன்னட படங்களில் நடித்து வருகிறார்.



2012 ஆம் ஆண்டு அவர் நடித்த ரோமியோ என்ற கன்னடப் படத்தைத் தயாரித்தவர்களில் ஒருவர் நவீன். இவரும் பாவனாவும் காதலித்து வருவதாக முதலில் செய்தி வெளியானது. இது குறித்து அப்போது கேட்டபோது, "நான் காதலிப்பது உண்மைதான். யார் என்பதை திருமணம் நடக்கும்போது சொல்கிறேன்" என்று கூறியிருந்தார் பாவனா.

நவீனும், பாவனா என் தோழி என்று மட்டும் சொல்லி இருந்தார். இப்போது அந்தக் காதல் உண்மை எனத் தெரிய வந்துள்ளது. அடுத்த வருடத் தொடக்கத்தில் அவர்களுடைய திருமணம் பாவனாவின் சொந்த ஊரான திருச்சூரில் நடக்கும் என்று கூறப்படுகிறது. இதுகுறித்து பாவனாவின் வீட்டில் விசாரித்தபோது, ஜனவரி மாதம் 18 ஆம் திகதி பாவனாவின் சகோதரருக்கு திருமணம் நடக்கவுள்ளது. அதற்குப் பின்னர் பாவனாவின் திருமணம் நடக்கும். அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்றனர். மாப்பிள்ளையார் என்பதைத் தெரிவிக்க அவர்கள் மறுத்துவிட்டனர். (வ)

## தீவிரவாத இயக்கத்தால் மோடிக்கு கொலை மிரட்டல்



டில்லி, நவ.6

பிரதமர் நரேந்திர மோடிக்கு பாகிஸ்தானிலிருந்து செயற்படும் தீவிரவாத இயக்கமொன்று கொலை மிரட்டல் விடுத்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வாகா எல்லையில் நடந்த மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அந்தத் தாக்குதலுக்கு தாலிபான் தீவிரவாதக் குழுவிலிருந்து பிரிந்த தெஹ்ரிக் ஏ தாலிபான் பாகிஸ்தான் ஜமாத் உல் அஹ்ரர் என்ற தீவிரவாத இயக்கம் பொறுப்பெற்றுள்ளது.

மேலும் வாகா தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ள மோடிக்கு பதிலளிக்கும் விதமாக, டுவிட்டரில் அந்த தீவிரவாதக் குழு கொலை மிரட்டல் விடுத்துள்ளது.

அந்த இயக்கத்தின் செய்தித் தொடர்பாளராகக் கருதப்படும் இசானுல்லா இசான் என்பவன் இந்த மிரட்டலை விடுத்துள்ளான்.

நூற்றுக்கணக்கான இஸ்லாமியர்களைக் கொன்று குவித்தவர் மோடி என்று குறிப்பிட்டுள்ள அவன், காஷ்மீர் மற்றும் குஜராத் அப்பாவி மக்கள் உயிரிழப்புக்குப் பழி வாங்குவோம் என்று கூறியுள்ளான். இந்த மிரட்டலை அடுத்து உளவுத்துறை கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது. இதனிடையே வாகா எல்லையில் பலத்த பாதுகாப்பு இருந்த காரணத்தால் பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல் நடத்த முடியாமல் போனதாக உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)



தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் ஐவரையும் விடுவிக்காது விட்டால் இலங்கைக்குச் சென்று போராட்டம் நடத்துவோம் என்று தமிழக மக்கள் முன்னேற்ற கழக தலைவர் ஜான்பாண்டியன் அறிவித்துள்ளார். தமிழக மீனவர் மீதான தூக்குத் தண்டனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்தின் சார்பில் திருச்சியில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (வ)

## கொல்கத்தா துறைக்கு தீவிர காப்பு

பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என மத்திய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளதை அடுத்து கொல்கத்தா துறைமுகத்துக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் இந்த எச்சரிக்கையை அடுத்து கப்பல் படை பயிற்சிக்காக கொல்கத்தா துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஐ.என்.எஸ்.குக்ரி, ஐ.என்.எஸ். சுமித்ரா ஆகிய அதிநவீன போர்க் கப்பல்களும் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளன.

பொதுமக்கள் பார்வைக்காக கொண்டுவரப்பட்ட இந்தக் கப்பல்கள் பாதுகாப்புக் கருதி கடலுக்குள் கொண்டுசெல்லப்பட்டன. துறைமுகம் வழியாக அல்குவைதா தீவிரவாதிகள் ஊடுருவ வாய்ப்பு இருப்பதாக பாதுகாப்பு நிபுணர்களும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (வ)

# தீவிரவாதத்துக்கு ஆதரவு வழங்குகிறது பாகிஸ்தான்
## பென்டகன் அறிக்கை மூலம் தெரியவந்ததாக இந்தியா கூறுகிறது

டில்லி, நவ.6

பென்டகனின் அறிக்கை மூலம் தீவிரவாதத்துக்கு பாகிஸ்தான் ஆதரவு அளித்து வருவது பகிரங்கமாகி உள்ளது என்று இந்தியா கருத்துத் தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன், ஆப்கானிஸ்தான் நிலவரம் குறித்து 6 மாத காலம் ஆய்வு நடத்தியது. 100 பக்கங்கள் கொண்ட இதன் அறிக்கையைத் தற்போது தாக்கல் செய்துள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

தீவிரவாதிகளின் பாதுகாப்பான சொர்க்கமாக பாகிஸ்தான் விளங்கி வருகிறது.

ஆப்கன் மற்றும் இந்தியாவில் தீங்கு விளைவிக்கும் விதமாக, ஆப்கன் மற்றும் இந்தியா மீது கவனம் செலுத்திவரும் தீவிரவாத அமைப்புகள் பாகிஸ்தானில் இருந்து இயக்கப்படுகின்றன. இந்திய ராணுவத்தை நேரடி போரில் வெல்ல முடியாது என்பதால் தீவிரவாதிகள் மூலம் பாகிஸ்தான் மறைமுக போர் நடத்துகிறது. பிரதமராக மோடி பதவி ஏற்பதற்கு 3 நாள்களுக்கு முன்பு ஆப்கனின் ஹீரட் நகரில் உள்ள இந்திய தூதரகத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.



பிரதமர் மோடி இந்து மத அமைப்புகள், இந்துத்துவக் கொள்கைகளுக்கு நெருக்கமாக இருப்பதால் இத்தகைய தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இவ்வாறு பென்டகன் கூறி உள்ளது.

ஆப்கானிஸ்தானின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு இந்தியா சிறப்பான பங்களிப்பை வழங்குவதாகவும் பென்டகன் புகழ்ந்துள்ளமை குறித்து டில்லியில் நேற்று முன்தினம் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் சையது அக்பருதீன் கூறுகையில், சர்வதேச தீவிரவாதத்துக்கு ஆதரவு தரும் அளவுக்கு வளர்ந்து வரும் பாகிஸ்தான் பற்றி சர்வதேச நாடுகள் அறியும் வகையில் அந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்றார். (வ)

## அந்தமான் அருகே புதிய புயல் 'அஷோபா'

அந்தமான் அருகே வங்கக் கடலில் புதிய புயல் 'அஷோபா' உருவாகிறது. அது தீவிர புயலாக மாறும் நிலை உள்ளது என்று புயல் எச்சரிக்கை மையம் அறிவித்துள்ளது.


அந்தமான் அருகே வங்கக் கடலில் விசாகப்பட்டினத்தில் இருந்து 1400 கிலோ மீற்றர் தூரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. அது வலுவடைந்து புயலாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தப் புயலுக்கு 'அஷோபா' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இது ஒடிசா முதல் ஆந்திரா மற்றும் தமிழ்நாடு வரை தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் இருக்கும் என்று கருதப்படுகிறது. இப்போது ஆரம்பக் கட்டத்தில் உள்ளதால் அதன் வழியை இப்போது கணிக்க முடியாத நிலை உள்ளது. 8 அல்லது 9 ஆம் திகதி இது புயலாக மாறும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதேபோன்று மற்றொரு குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தென்மேற்கு வங்கக் கடலில் இலங்கை அருகே உருவாகி உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## கனடாவில் பனிப்புயல்

கனடாவில் ஏற்பட்ட பனிப் புயலால் பாடசாலைகள் மூடப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கனடாவின் நியூ பிறவுன்ஸ்விக்கில் ஏற்பட்ட முதல் பனிப் புயல் காரணமாக மாகாணம் முழுவதும் பல பாடசாலைகளை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை பொழிய ஆரம்பித்த பனி 22.8-சென்டி மீற்றர்கள் வரை பெய்துள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.
இந்தப் புயலின் காரணமாக சுமார் 14.000 இற்கும் மேற்பட்ட வீடுகள் மின்சாரத்தை இழந்துள்ளதாக கூறப்படுகிறது.
மேலும் இப்புயலால் பலத்த காற்றும் வீசும் என வானிலை ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். (வ)



மொஸ்கோவில் நடைபெற்ற கண்காட்சியொன்றில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஆகியோர் குறித்த கார்ட்டூன் தொகுப்பு ஒன்றைக் காணலாம். (வ)

## ஆசிய நாடுகளுக்கு ஒபாமா சுற்றுப்பயணம்



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.
அவர் சீனா, மியன்மார் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து தொடர்ச்சியாக மாநாடுகளில் பங்கேற்றல் மற்றும் இருதரப்புபேச்சு ஆகியவற்றை மேற்கொள்ளவுள்ளார் என்று வெள்ளை மாளிகைத் தகவல் தெரிவித்துள்ளது.
ஒபாமா நவம்பர் 10-12 ஆகிய நாள்களில் ஏ.பி.ஈ.சி. தலைவர்கள் கூட்டம் மற்றும் ஏ.பி.ஈ.சி. தலைமை செயல் அதிகாரி மாநாடு ஆகியவற்றில் கலந்து கொள்வதோடு, சீன நாட்டு ஜனாதிபதி ஜீ ஜின் பிங்கை சந்தித்துப் பேச்சில் ஈடுபடுகிறார். இத்தத் தகவலை வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் ஜோஷ் எர்னெஸ்ட் அறிக்கை ஒன்றின் வழியே தெரிவித்துள்ளதாக ஜின்ஹுவா செய்தி இதழ் தகவல் தெரிவித்துள்ளது.
அதன் பின்னர் நவம்பர் 12-14 ஆம் திகதிகளில் மியன்மார் நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் ஒபாமா அங்குள்ள நே பி டா நகரில் கிழக்கு ஆசிய மாநாடு மற்றும் அமெரிக்க-ஏசியான் மாநாட்டிலும் கலந்து கொள்கிறார். அந்தநாட்டு ஜனாதிபதி தெயின் சியென்னோடு இருதரப்பு கூட்டம் ஒன்றிலும் ஒபாமா கலந்து கொள்ளவுள்ளார். (வ)

## கிறிஸ்தவர்கள் இரண்டுபேர் உயிருடன் எரித்துக் கொலை

### குர் ஆனை அவமதித்ததால்



லாகூர், நவ.6
பாகிஸ்தானில், புனித குர்ஆனை அவமதித்ததாக வெளிவந்த செய்தியால் 2 கிறிஸ்தவர்கள் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.
பாகிஸ்தானின் பஞ்சாப் மாகா ணத்தில், உள்ள கசூர் மாவட்டத்தில், கோட் ராதாகிஷான் என்ற கிராமம் உள்ளது. அங்கு புனித குர்ஆனை எரித்ததாக, ஷசாத் மசி (வயது-35) அவரது மனைவி ஷமா (வயது-31) ஆகிய 2 கிறிஸ்தவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அடுத்து, அவர்கள் உயிருடன் தீ வைத்துக் கொளுத்தப்பட்டனர்.
இது குறித்து அவர்களுடைய உறவினர் கூறுகையில்: "முகம்மது யூசுப் என்பவருக்குச் சொந்தமான செங்கல் சூளையில், ஷசாத்தும், ஷமாவும் வேலை பார்த்து வந்தனர். அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாததால், தங்களுடைய 4 குழந்தைகளுடன், அவர்கள் வேலையை விட்டுச் செல்வதற்கு முடிவு செய்தனர். ரூ.5 லட்சம் அளித்தால் மட்டுமே, வெளியே செல்ல விடுவேன் என்று யூசுப் கூறியுள்ளார். இது தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.
இந்த நிலையில் நேற்று முன்தினம் ஷசாத்தும், ஷமாவும் புனித குர்ஆனை எரித்து விட்டதாக மசூதியில் அறிவிக்கப்பட்டது. இதை அடுத்து குவிந்த ஏராளமான முஸ்லிம்கள் இருவரையும் உயிருடன் தீவைத்து எரித்து, செங்கல் சூளைக்குள் தூக்கி வீசினர். தாங்கள் அப்பாவிகள் என்று இருவரும் கதறி அழுதனர். ஆனால், அவர்களின் கூக்குரலை எவரும் பொருட்படுத்தவில்லை." புனித குர்ஆனை எரித்தார்கள்" என்று தவறான தகவல் கொடுத்ததால் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதற்கு யூசுப்தான் காரணம்"- என்றார். (வ)

## நைஜீரியாவில் தாக்குதல் 32 பேர் உயிரிழப்பு



பொடிஸ்கம், நவ.6
நைஜீரியாவில் இடம்பெற்ற மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 32 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 119 பேர் காயம் அடைந்தனர்.
வடக்கு நைஜீரியாவில் உள்ள பொடிஸ்கம் பகுதியில் பொது மக்கள் அதிகம் நடமாடும் பகுதியில் நேற்று முன்தினம் மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த வெடிகுண்டுத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 32 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். சுமார் 119 பேர் காயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள், உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடத்தில் சந்தேகப்படும்படியாகத் திரிந்த நபரொருவரைப் பொது மக்கள் பிடித்து சரமாரியாகத் தாக்கினர். பின்னர் அவரைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.
இந்தத் தாக்குதலை நடத்தியது போகோ ஹரம் என்ற தீவிரவாத அமைப்பு என்று சந்தேகிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக, 2 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர்.
இதற்கிடையே, மத்திய கோகி என்ற இடத்தில் உள்ள சிறைச் சாலையில் துப்பாக்கிச் சூடு நடத்திய போகோ ஹரம் தீவிரவாதிகள், அங்கிருந்த 145 கைதிகளை விடுவித்துள்ளனர். பொலிஸாருக்கும் தீவிரவாதிகளுக்கு இடையே நடைபெற்ற மோதலில் ஒரு கைதி கொல்லப்பட்டார்.
12 கைதிகளை பொலிஸார் மீட்டனர். அர சுக்கு எதிராகச் செயற்பட்டு வரும் போகோ ஹரம் அமைப்பு கடந்த மாதம் பள்ளிக் குழந்தைகளைக் கடத்தி பின்னர் அவர்களை விடுவித்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## ஆப்கான் துணை ஆளுநரும் நீதிபதியும் சுட்டுக் கொலை

ஆப்கானிஸ்தானில் ஞாயிற்றுக்கிழமை நடை பெற்ற இரு வெவ்வேறு தாக்குதல்களில் மாகாண துணை ஆளுநர் ஒருவரும் நீதிபதி ஒருவரும் சுட்டுக் கொல்லப் பட்டனர்.
இதுகுறித்து அந்தநாட்டுப் பாதுகாப்புத் துறை அதி காரிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்ததாவது:
தெற்கு காந்தஹார் பகுதியில் அமைந்துள்ள காந்தஹார் பல்கலைக்கழக வகுப்பறையில் துணை ஆளுநர் அப்துல் கதீம் பட்யால், சுட்டுக் கொல்லப்பட்டார். (வ)

## படுகொலையைப் பார்க்க சிறுவர்களுக்கு நிர்ப்பந்தம்

### ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் அட்டகாசம்



சிரியாவில்சிறுவர்களை ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் பலவந்தப்படுத்தி படுகொலைக் காணொலிகளைப் பார்க்க வைப்பதாக வெளியான தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
ஈராக் மற்றும் சிரியாவின் பல பகுதிகளைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ். சிறுவர்களை மிகவும் கொடுமைப்படுத்தி வருகின்றனர்.
தங்களது இயக்கத்தில் குர்து இனச் சிறுவர்களை சேர்க்கும் முயற்சியில் கடந்த 6 மாதங்களில் மட்டும் சுமார் 150 சிறுவர்களை கடத்தி கோபேன் நகரில் தனிமைப்படுத்தியுள்ளனர்.
இந்த நிலையில் தீவிரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்ட சிறுவர்களில் 4 பேரைத் தெரிவு செய்து அவர்களிடம் ஐ.எஸ். ஐ.எஸ். நடத்திய விதம் மற்றும் அவர்களின் செயற்பாடுகள் குறித்து சர்வதேச மனித உரிமைகள் ஆணையகம் கேட்டதில் பல திகிலூட்டும் தகவல்கள் வெளிவந்துள்ளன.
இதுகுறித்து சிறுவன் ஒருவன் கூறுகையில், அவர்கள் சொல்வதை நாம் கேட்கவில்லை என்றால் அவர்கள் எங்களைச் சவுக்கால் அடிப்பார்கள்.
எந்தக் காரணம் சொன்னாலும் கேட்கமாட்டார்கள். அவர்கள் எங்களின் மர்ம உறுப்பிலும் அடித்துள்ளனர். மேலும் கொரிய மொழியில் பழமொழிகளையும் கற்றுத் தந்த அவர்கள், எங்களுக்கு அது புரியவில்லை என கூறினால் அதற்கும் அடி தான் விழும் என்று அழுதபடி கூறியுள்ளான். (வ)

## மக்களிடம் அதிகாரத்தைக் கையளிக்கிறார் புர்கினா பசோ நாட்டு இராணுவத் தளபதி



புர்கினா பசோ நாட்டு இடைக்கால ஜனாதிபதியாகப் பதவியேற்ற ராணுவத் தளபதி பொது மக்களிடம் அதிகாரத்தை அளிக்க இணக்கம் தெரிவித்துள்ளார்.
கடந்த வாரம் புர்கினா பசோ நாட்டின் நீண்டகால ஜனாதிபதியான பிளைசே கொம்போரேக்கு எதிராகப் பொது மக்கள் எதிர்ப்பு வலுத்ததால் பதவி துறந்து இருந்தார். அதை அடுத்து அதிகாரம் இராணுவத்தினரின் வசம் சென்றிருந்தது. இந்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியதை அடுத்து அதிகாரத்தைத் தற்காலிகமாக ஏற்றிருந்த இராணுவத் தளபதி லெப்டினன்ட் கொலோனெல் இசாக் ஷிடா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாரத்தைப் பொதுமக்கள் வசம் அளிப்பதாக வாக்குறுதி அளித்துள்ளார்.
இதுகுறித்து புர்கினா பசோவின் பெரும்பான்மை மொஸ்ஸி பூர்வீகக் குழுவின் மன்னரான நாபா பாங்கோ II செய்தியாளர்களுக்குத் தெரிவிக்கையில், கொலோனெல் இசாக் ஷிடா மற்றும் அவரது பிரதிநிதிகள் குழு தம்மிடம் வந்து தமது அதிகாரத்தைப் பொது மக்களிடம் தரவிருப்பதாக வாக்குறுதி அளித்ததாகவும் இத்திசையில் அவர்கள் பயணிக்கத் தான் ஊக்கப்படுத்தியதாகவும் கூறியுள்ளார். மேலும் தமது நாடு சமாதானத்தையும் அமைதியையும் மீளப் பெறவேண்டும் என்று தான் விரும்புவதாகவும் மன்னர் நாபா கூறியுள்ளார். ஏற்கனவே நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை காலை எதிர்க்கட்சித் தலைவர்கள், ஆர்ப்பாட்டக் காரர்களைக் கலைந்து செல்லுமாறும் தாம் ராணுவத் தலைவர்களுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.
இதுகுறித்து எதிரணித் தலைவர் ஷெப்பிரின் டியாப்ரே கூறும் போது இராணுவம் விரைவில் அதிகாரப் பகிர்வு செயற்பாடு குறித்த ஆவணத்தை அளிக்கவுள்ளதாகவும் அதனை எதிரணித்தலைவர்கள் மீளாய்வு செய்து உரிய நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாகவும் கூறியுள்ளார். (வ)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: மருத்துவச் செலவு ஏற்படக்கூடும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலையும் காரிய தாமதத்தையும் சந்திக்க வேண்டி இருக்கும்.

**இடபம்**: புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். வெளியூர் பயணங்களின்போது கவனம் தேவை. அடுத்தவர்களுக்காக பொறுப்புகளை ஏற்கும்போது ஒரு முறைக்கு பலமுறை சிந்தித்து முடிவு எடுப்பது நல்லது.

**மிதுனம்**: வெளியூர்ப் பயணங்கள் செல்ல நேரிடலாம். புதிய நபர்களிடம் எச்சரிக்கை தேவை. பெரியோர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். துணிச்சலுடன் எந்தக் காரியத்திலும் ஈடுபட்டு வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள்.

**கடகம்**: தொழில் வியாபாரம் திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வருமானம் அதிகம் கிடைக்கப் பெறுவீர்கள். வராது என்று எண்ணிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் சந்தோசமாக இருப்பார்கள்.

**சிங்கம்**: சகோதர வழியில் வேண்டிய உதவி கிடைக்கும். பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். மனத் தைரியம் கூடும். துணிச்சலுடன் எந்தக் காரியத்திலும் ஈடுபட்டு வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள்.

**கன்னி**: சமூகத்தில் மரியாதை உயரும். வாக்கு வன்மையால் புகழ் கூடும். புதிய நபர்களை நம்பி எதையும் செய்யும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலைச் சந்திக்க வேண்டி இருக்கும்.

**துலாம்**: எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும். வெளியூர், வெளிநாட்டு பயணம் திட்டமிட்டபடி அமையும். குடும்பத்தில் திடீர் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்களுடன் சுமுகமான போக்கு காணப்படும். நீண்ட தூர தகவல்கள் நல்ல செய்தியைக் கொண்டு வரும்.

**விருச்சிகம்**: உங்களது செயல்களை மற்றவர்கள் பாராட்டுவார்கள். மரியாதையும் அந்தஸ்தும் அதிகரிக்கும். புதிய நபர்களிடம் கவனம் தேவை. மனதில் தைரியமும் புதிய உற்சாகமும் உண்டாகும். புதிய முயற்சிகளில் இழுபறியான நிலை காணப்படும்.

**தனுசு**: நிர்ப்பந்தத்தின் பேரில் மனதுக்கு பிடிக்காத வேலையைச் செய்ய வேண்டி ஏற்படலாம். எதிர்காலம் பற்றிய சிந்தனையும் மனக் கவலையும் ஏற்படும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டவும்.

**மகரம்**: அரச தொடர்புடைய முக்கிய நபர்களின் அறிமுகமும் அவர் களால் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள். உங்கள் பேச்சைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். அனுசரித்துச் செல்வது நல்லது. ஆன்மிகப் பணிகளில் கவனம் செல்லும்.

**கும்பம்**: எந்த வாக்குறுதியும் அளிக்காமல் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் உயர்வுபெறத் தேவையான உதவிகள் கிடைக்கும். அடுத்தவருக்கு உதவி செய்யப் போய் அதனால் அவச்சொல் உண்டாகலாம். கவனம் தேவை.

**மீனம்**: வீண் அலைச்சல் உண்டாகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த பணியை முடிப்பதில் தாமதம் உண்டாகலாம். அடுத்தவர் செய்கை கோபத்தைத் தூண்டு வதாக இருக்கும்.

## நாளை

**ஐப்பசி-21 வெள்ளிக்கிழமை | 07.11.2014**

திதி: பிரதமை
பி.இ.03.34 வரை
நட்சத்திரம்: பரணி
பி.ப.04.06 வரை

சுபநேரம்:06.05-07.35 வரை
இராகுகாலம்:10.35-12.05 வரை
**கார்த்திகை விரதம்**
**ஐப்பசிப் பரணி**

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## உலகத்துக்கு தேவைப்படும் நண்பர்கள்

தீமையை நீக்குவது என்பது முடியுமான காரியமல்ல. எமது தத்துவம் தீமையும் நன்மையும் நாணயத்தின் இரு பக்கங்கள் என்பதைப் போதிக்கிறது. உங்களுக்கு நன்மை வேண்டுமென்றால் தீமையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். கடலில் உயர எழுகின்ற அலை எங்கோ ஓர் இடத்தில் பள்ளத்தை உண்டாக்கியிருக்கிறது. தீமைக்கு எதிராக உள்ள வேலை, அதைப்பற்றி எவ்வளவு அதிகமாக நாம் பேசினாலும், அதைப்பற்றிய அதிகமான அறிவைப் பெறுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாது. தீமைக்கு எதிரான வேலையைப் பற்றிய கொள்கை முதன்முதலில் இதுதான். அது நம்மை அமைதியானவர்களாக்க வேண்டும். குறுகிய மனப்பான்மையை எமது இரத்தத்திலிருந்து வெளியே எடுக்க வேண்டும். எங்கெல்லாம் வெறி பிடித்த சீர்திருத்தங்கள் இருந்தனவோ, அங்கெல்லாம் அவை தங்களுடைய வெற்றியைத் தாங்களாகவே முறியடித்துவிட்டதை உலக வரலாறு கூறுகிறது. தீமையை பலாத்காரத்தின் மூலமும் சட்டத்தின் மூலமும் அல்லது வெறியின் மூலமும் நீக்க முயலும் போது இந்த நிலை தான் ஏற்படுகிறது. நல்லது செய்வதற்காகவானாலும் வெறித்தனம் கையாளப்படும்போது இத்தகைய விளைவுகள் ஏற்படும் போது வரலாறு எமக்கு இத்தகைய உதாரணங்களைக் காட்டுகிறது. ஆகவே ஒவ்வொரு சமுதாயத்திலும் தீமைகள் உள்ளன. அந்தத் தீமை தரும் துன்பத்திலிருந்து வெளியேறுவதற்கு வழியைச் சொல்பவனே நண்பன். மற்றவர்கள் எல்லாம் குளத்தில் மூழ்கும் சிறுவனுக்கு சொற்பொழிவு செய்பவர்கள் போன்றவர்களே. ஒரு சிறுவன் நீரில் மூழ்கும் போது நீந்துவது எப்படி என்று ஒருவன் கரையில் நின்றபடி சொற்பொழிவாற்றினானாம். மூழ்கிக் கொண்டிருந்த சிறுவன் முதலில் வெளியே என்னைத் தூக்கு என்று கத்தினானாம். நமது மக்களும் அப்படித்தான். எங்களை வெளியே இழுக்கும் மனிதன் எங்கு இருக்கிறான். உண்மையாக நேசிக்கும் மனிதன் எங்கு இருக்கிறான் என்று அழுகிறார்கள். அத்தகைய மனிதர்கள் தான் இந்த உலகத்துக்கே தேவைப்படுகிறார்கள்.

# ஒளியைப் புகவிடும் கார்கள் விரைவில் அறிமுகம்



தொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சியால் நாளுக்கு நாள் பல்வேறு மாற்றங்களுடன் பல பொருள்கள் அறிமுகமாகி வருகின்றன.

அவற்றின் ஓர் அம்சமாக ஒளியை ஊடுபுகவிடும் கதவுகளைக் கொண்ட கார்களும் விரைவில் அறிமுகமாகவுள்ளன.

இதற்கான ஆராய்ச்சியில் கெய்யோ பல்கலைக்கழகத்தில் ஊடக வடிவமைப்புத் துறையில் கற்றுவரும் சுசுமாரச்சி மற்றும் மசகிகோ இனாமி ஆகிய மாணவர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

இந்தத் தொழில்நுட்பம் தொடர்பாக காணொளி விளக்கம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | | 8 | | | 5 | | |
| | | 5 | 4 | | | | | 6 |
| 4 | 6 | | 1 | 5 | 3 | | 7 | |
| | | 2 | 5 | | 4 | | | |
| | 1 | 3 | | | | 2 | 4 | |
| | | | 9 | | 1 | 7 | | |
| | 9 | | 2 | 4 | 7 | | 5 | 3 |
| 3 | | | | | 9 | 4 | | |
| | | 4 | | | 5 | | 8 | 9 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 8 | 6 | 3 | 4 | 9 | 5 | 2 |
| 6 | 2 | 5 | 1 | 9 | 7 | 8 | 3 | 4 |
| 9 | 3 | 4 | 5 | 8 | 2 | 1 | 7 | 6 |
| 3 | 6 | 7 | 4 | 5 | 9 | 2 | 8 | 1 |
| 1 | 5 | 2 | 8 | 7 | 6 | 4 | 9 | 3 |
| 8 | 4 | 9 | 2 | 1 | 3 | 7 | 6 | 5 |
| 2 | 9 | 3 | 9 | 6 | 1 | 5 | 4 | 8 |
| 5 | 9 | 1 | 3 | 4 | 8 | 6 | 2 | 7 |
| 4 | 8 | 6 | 7 | 2 | 5 | 3 | 1 | 9 |

# யாழ் இந்துவை வீழ்த்தி மானிப்பாய் ஏஞ்சல் வெற்றி

'குறோஸ் வே நோத்' வெற்றிக் கிண்ணத்துக்கான 16 வயதுப்பிரிவு ஆண்கள் பிரிவு ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மருண் அணி யாழ். இந்துக் கல்லூரி அணியை வீழ்த்தி அசத்தியது.

முதல் பாதி ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் அணி 4 புள்ளிகளையும் யாழ். இந்துக் கல்லூரி அணி 6 புள்ளிகளையும் பெற்றன. இரண்டாம் பாதியில் அதிரடி ஆட்டத்தினை வெளிப்படுத்திய மானிப்பாய் ஏஞ்சல் 17 புள்ளிகளைப் பெற்றனர். யாழ். இந்துக் கல்லூரியால் 5 புள்ளிகளை மட்டுமே பெறமுடிந்தது. ஏஞ்சல் வீரன் சஞ்சேயன் சிறப்பாக ஆடி 8 புள்ளிகளைப் பெற்றார். ஆட்டம் இடைவேளைக்காக இடை நிறுத்தப்பட்ட போது ஏஞ்சல் அணி 21 புள்ளிகளையும் யாழ். இந்துக் கல்லூரி 11புள்ளிகளையும் பெற்றிருந்தன.

மூன்றாம் பாதி ஆட்டத்தில் ஏஞ்சல் 15புள்ளிகளையும்யாழ். இந்துக் கல்லூரி 11புள்ளிகளையும் பெற்றன. இதில் மானிப்பாய் சார்பில் சயிராம் 6 புள்ளிகளையும். சிம்ரென் 5புள்ளிகளையும். மக்சன் 4 புள்ளிகளையும் யாழ். இந்துக் கல்லூரி அணி சார்பில் கீதப்பிரியன் 5 புள்ளிகளையும் பெற்றனர். நான்காம் பாதி ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது. இரு அணியினரும் விட்டுக் கொடுக்காமல் ஆடினர். இந்துக் கல்லூரி எழுச்சி பெற்றிருந்தது. எனினும் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. இரண்டு அணியினரும் தலா 15 புள்ளிகளைப் பெற்றனர். ஆட்ட முடிவில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை 51:37 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (உ-23)



### கடும் போராட்டத்தின் பின்

## ஒரு புள்ளியால் வென்றனர் கொக்குவில் இந்து மகளிர்

யாழ்ப்பாணம், நவ. 6

குறோஸ் வே நோத் வெற்றிக் கிண்ணத்துக்கான 15 வயதுப் பெண்கள் பிரிவு ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி பலத்த போட்டிக்கு இடையே நூலிழையில் வேம்படி மகளிர் கல்லூரி அணியைத் தோற் கடித்தது.

நேற்றுப் புதன்கிழமை மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசபாடசாலை கூடைப்பந்தாட்ட திடலில் ஆட்டம் இடம்பெற்றது. கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் கல்லூரி அணி மோதியது. முதல் பாதி ஆட்டத்திலேயே கொக்குவில் இந்துவின் கை மேலோங்கியிருந்தது. வேம்படி மகளிர் கல்லூரி 3 புள்ளிகளையும். கொக்குவில் இந்துக்கல்லூரி 4 புள்ளிகளையும் பெற்றன. இரண்டாம் பாதி ஆட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி ஆட்டத்தைத் தன் கட்டுக்குள் கொண்டுவந்தது. 8 புள்ளிகளை அந்த அணி பெற்றது. ஆனாலும் விட்டுக்கொடுக்காத கொக்குவில் இந்து 7 புள்ளிகளைப் பெற்றது. வேம்படி வீராங்கனை கீர்தனி சிறப்பாக ஆடி 6 புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்தார். ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டபோது அணிகள் சமநிலையில் இருந்தன. தலா 11 புள்ளிகளைப பெற்றிருந்தனர்.

மூன்றாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சளைக்காமல் போராடின. எனினும் புள்ளிகளைப் பெறுவதில் இடர்பட்டன. கொக்குவில் இந்துக் கல்லூரி 2 புள்ளிகளையும் வேம்படி மகளிர் கல்லூரி அணி 4 புள்ளிகளையும் பெற்றன. இதனால் வேம்படி ஆட்டத்தைத் தன் வசப்படுத்தியது.

இருப்பினும் நான்காம் பாதி ஆட்டத்தில் கொக்குவில் அணியினர் தமது முழுத்திறமையையும் காட்டி விளையாடினர். வேம்படி தடுப்பரண்களைத் தாண்டி பந்தைக்கூடைக்குள் தள்ளினர். 10 புள்ளிகளைப் பெற்றனர். வெற்றியையும் ருசித்தனர். இந்தப் பாதியில் வேம்படியால் 7 புள்ளிகளை மட்டுமே பெற முடிந்தது. இதனால் ஒரு புள்ளி வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவ வேண்டியதாகியது. முடிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி மகளிர் அணி 23:22 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

(உ-23)

## சச்சினுக்கு முரளியும் ஆதரவு

சுயசரிசதையில் பயிற்சியாளர் சப்பல் பற்றி சச்சின் கூறியிருப்பது உண்மை தான் என இலங்கையின் முன்னாள் ஜாம்பவான் முரளிதரன் ஆதரவாகப் பேசியுள்ளார்.

சச்சின் தனது சுயசரிதை புத்தகமான 'பிளேயிங் இட் மை வே' என்ற புத்தகத்தில் பயிற்சியாளராக இருந்த சப்பல் மீது பல வித குற்றச்சாட்டுகளை வைத்துள்ளார். சச்சின் சொல்லி இருப்பது எல்லாம் உண்மை தான் என்று பல்வேறு வீரர்களும் சச்சினுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் கொல்கத்தாவில் நடந்த நிகழ்ச்சியொன்றில் பங்கேற்ற இலங்கையின் சுழற்பந்து ஜாம்பவான் முரளிதரன் சச்சினின் சுயசரிதை புத்தகத்தில் சப்பல் குறித்து விமர்சனம் செய்யப்பட்டுள்ளது குறித்த நிருபர்களின் கேள்விக்குப் பதிலளித்துள்ளார்.

இது பற்றி அவர் கூறுகையில் சச்சின் கூறியதில் உண்மை உள்ளது. இதை இந்திய அணி ஆக்கப்பூர்வமான விமர்சனமாக எடுத்துக் கொண்டு, பயிற்சியாளர்களைநியமிக்கும்போது பலமுறை யோசித்துக்கொள்வது நல்லது. இதற்கு மேல் கருத்து கூற முடியாது என்று தெரிவித்துள்ளார்.

மேலும், சச்சின் புத்தகத்தில் உள்ள அம்சங்களுக்கு தன்னால்கருத்துகூறமுடியாதுஎன்று ராகுல் டிராவிட் தெரிவித்துள்ளார். இந்த சர்ச்சையை தவிர புத்தகத்தில் படித்து பார்க்க மேலும் பல நல்ல விடயங்கள் இருக்கும். எனது கவனம் அதில் தான் உள்ளது என்று டிராவிட் கூறியுள்ளார். (த)



## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், நவ. 6

'குறோஸ்வே நோத்' வெற்றிக் கிண்ணத்துக்காக மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை நடத்தும் கூடைப் பந்தாட்டத் தொடரில் இன்று வியாழக்கிழமை நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:

காலை 7.30 மணிக்கு இடம் பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதும்.

காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் வவுனியா மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதும்.

காலை 10.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மருண் அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதும்.

மதியம் 11.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா மத்திய மகா வித்தியாலய அணி மோதும்.

மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதும்.

4.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் வவுனியா மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை நீல அணி மோதும்.

மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை மருண் அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதும்.

யாழ்ப்பாணம், நவ. 6

யாழ்.இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டச்சங்கம் நடத்தும் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ்.இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

(உ-23)

### காலிறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 6

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்படும் 19 வயது ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டங்கள் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

இதில் முதலாவது காலிறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி மோதவுள்ளது.

இரண்டாவது காலிறுதியாட்டத்தில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

மூன்றாவது காலிறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதவுள்ளது.

நான்காவது காலிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது.

காலிறுதியாட்டத்தில் வெற்றி பெறும் அணிகள் தொடர்ந்து இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் மோதவுள்ளன. அரையிறுதியாட்டதில் வெற்றி பெறும் அணி மாலை இடம் பெறும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன.

இறுதியாட்டத்துக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எ.இராஜேந்திரன், சிறப்பு விருந்தினராக ரி.எஸ்.எஸ்.ஏ. யின் தலைவர் எட்வின் குணரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-23)

# கழற்றிவிடப்பட்ட மைக் ஹசி

ஐ.பி.எல் தொடரில் மும்பை அணிக்காக விளையாடிய ஆஸ்திரேலிய அணியின் முன்னணி வீரர் மைக்கல் ஹசி அந்த அணியில் இருந்து கழற்றிவிடப்பட்டார்.

2015ஆம் ஆண்டுக்கான 8ஆவது ஐ.பி.எல். 20/20 கிரிக்கெட் போட்டித் தொடர் 2015ஆம் ஆண்டு ஏப்ரல் 8ஆம் திகதி தொடங்கி மே 24ஆம் திகதி நிறைவடையும் என்று ஐ.பி.எல் குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்நிலையில், ஐ.பி.எல். போட்டிக்கான முதற்கட்ட வீரர்கள் பரிமாற்றம் கடந்த மாதம் 6ஆம் திகதி தொடங்கியது.

இதில் மும்பை இந்தியன்ஸ் அணி நிர்வாகம் இரு வீரர்களை பரிமாற்றம் அடிப்படையில் வாங்கியுள்ளது. ராஜஸ்தான் றோயல்ஸ் அணியிடம் இருந்து துடுப்பாட்டக்காரர்கள் உன்முக் சந்தையும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியிடம் இருந்து வேகப் பந்து வீச்சாளர் வினய் குமாரையும் பெற்றுள்ளது.

அதே சமயம் முன்னணி வீரர் மைக்கல் ஹசியை மும்பை அணி கைவிட்டது. சென்னை அணிக்காக விளையாடியபோது ஓட்டங்கள் குவித்த அவரை மும்பை அணி ரூபா 15 கோடிக்கு வாங்கியது.

ஆனால் 7 ஆவது ஐ.பி.எல் போட்டியில் மும்பை அணியில் விளையாடிய ஹசி, 9 ஆட்டங்களில் விளையாடி வெறும் 209 ஓட்டங்கள் (சராசரி 23.22) மட்டுமே எடுத்தார். மோசமான ஆட்டம் காரணமாக அவரை வைத்துக் கொள்ள மும்பை விரும்பவில்லை. மேலும், வேகப்பந்து வீச்சாளர் பிரவீன் குமாரும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரும் 2015ஆம் ஆண்டு ஐ.பி.எல்லுக்கு முன்பாக ஏலம் விடப்படுவார்கள். முதற்கட்ட வீரர்கள் பரிமாற்றம் அடுத்த மாதம் 12ஆம் திகதி முடிகிறது. (கு)






# கடைசி நிமிடத்தில் சென்னை கோல்; சமநிலையில் முடிவடைந்தது ஆட்டம்

சென்னையில் நேற்று முன் தினம் நடைபெற்ற இந்தியன் சுப்பர் லீக் உதைபந்துப் போட்டியில் அட்லெடிகோ டி கொல்கத்தா - சென்னையின் எப்.சி. அணிகளுக்கு இடையிலான த்ரில் ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

கடைசிநிமிடத்தில் (90 ஆவது நிமிடம்) சென்னை அணிக்கு பெனால்டி வாய்ப்பு க் கிடைக்க, அதில் கோலடித்தார் இலானோ. இதனால் சென்னை அணி தோல்வியிலிருந்து தப்ப, மகிழ்ச்சி பெருக்கில் மைதானத்தில் இருந்து வெளியேறினார்கள் ரசிகர்கள். இதுவரை தோல்வியையே சந்திக்காத வலுவான அணியான அட்லெடிகோ 3ஆவது சமநிலையைச் சந்தித்திருக் கிறது. அட்லெடிகோ 12 புள்ளிகளுடனும், சென்னை 10 புள்ளிகளுடன் புள்ளிகள் பட்டியலில் முதல் இரு இடங்களில் உள்ளன.

இரு அணிகளும் பலம் வாய்ந்தவை என்பதால் ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக சென்ற இந்த ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்தில் கொல்கத்தா வீரர் கிரேஸியாவின் கோல் வாய்ப்பை சென்னை கோல் காப்பாளர் ஷில்டான் அற்புதமாக முறியடித்தார். 9ஆவது நிமிடத்தில்சென்னைஅணிக்குமூலைஉதைவாய்ப்புகிடைத்தபோதும், அதற்கு பயன் கிடைக்கவில்லை. இதன்பிறகு 12ஆவது நிமிடத்தில் வலது புறத்தில் இருந்து சென்னையின் கவுரமாங்கி கொடுத்த பாஸை மவுரிஸ் வெளியில் அடித்து வீணடித்தது ஏமாற்றமாக அமைந்தது.

இதன்பிறகு 27 ஆவது நிமிடத்தில் அட்லெடிகோ வீரர் ஜோப்ரே, சென்னை வீரர் இலானோவை கீழே தள்ள, ஜோப்ரேவை மஞ்சள் அட்டையால் எச்சரித்த நடுவர், சென்னைக்கு பிரீ கிக் வாய்ப்பை வழங்கினார். கீழே விழுந்த அதேவேகத்தில் பிரீ கிக்கை எடுத்தார் இலானோ. அதனால் அவர் கோலடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் அதை வெளியில் அடித்து வீணடித்தார்.

33ஆவது நிமிடத்தில் அட்லெடிகோ முன்கள வீரர் முகமது ரபி பந்தை கோல் கம்பத்தை நோக்கி விரட்டிச் சென்றார். அப்போது முன்னேறி வந்த சென்னை கோல் காப்பாளர் ஷில்டான் பால், ரபியை கீழே தள்ள, ஷில்டானுக்கு சிவப்பு அட்டை கொடுத்த நடுவர், அட்லெடிகோவுக்கு பெனால்டி வாய்ப்பை வழங்கினார். இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திய அட்லெடிகோ வீரர் லூயிஸ் கிரேஸியா கோலடிக்க, அந்த அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. இதன்பிறகு சென்னை அணி 10 வீரர்களுடன் விளையாடியது. கோல் காப்பாளர் ஷில்டானுக்குப் பதிலாக மாற்று கோல் காப்பாளர் ஜென்னாரோ களம்புகுந்தார். அதனால் ஸ்டிரைக்கர் மவுரிஸ் வெளியேற்றப்பட்டார்.

பின்னர் நடைபெற்ற 2ஆவது பாதி ஆட்டத்தின் தொடக்கத்திலேயே ஜோப்ரே 2ஆவது முறையாக மஞ்சள் அட்டையால் எச்சரிக்கப்பட்டதால் அது சிவப்பு அட்டை யாகக் கணக்கில் கொள்ளப்பட்டு அவர் போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டார். இதனால் 47 ஆவது நிமிடத்தில் இருந்து இரு அணிகளும் 10 பேருடன் விளையாடின.

இரு அணிகளின் பின்களமும் வலுவானதாக இருந்த நிலையில் கடைசி வரை போராடிய மென்டோஸா, கடைசி நிமிடத்தில் கோல் கம்பத்தை நோக்கிப் பந்தை விரட்டிச் செல்ல, அட்லெடிகோ பின்கள வீரர் கிங்ஷுக் பாய்ந்து சென்று மென்டோஸாவை கீழே தள்ளினார். அப்போது கிங்ஷுக்கை மஞ்சள் அட்டையால் எச்சரித்த நடுவர், சென்னைக்குப் பெனால்டி வாய்ப்பை வழங்க, அதில் கோலடித்து போட்டியை சமநிலையில் முடித்தார் இலானோ. (கு)

# முழுவதும் உண்மையே



கிரேக் சப்பல் குறித்து சச்சின் கூறியது உண்மைதான் என்று இந்திய வீரர் ஹர்பஜன் சிங் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் கடந்த ஆண்டு ஓய்வு பெற்ற பின் , பிளேயிங் இட் மை வே' என்ற பெயரில் சுயசரிதை எழுதியுள்ளார். இந்தப்புத்தகம் இன்று வெளியாகிறது.

இதில் சச்சின், இந்திய அணி முன்னாள் பயிற்சியாளராக இருந்த சப்பலை பற்றிச் சில விடயங்கள் தெரிவித்துள்ளார். அதில், கடந்த 2007 இல் உலகக்கிண்ணத் தொடர் தொடங்க ஒரு மாதம் இருக்கும்போது, எனது வீட்டுக்குச் சப்பல் வந்தார். அப்போதைய அணித் தலைவர் டிராவிட்டிடம் இருந்து பதவியை பறித்து விட்டு, அதை நான் ஏற்க வேண்டும் என்றார். இதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டேன் என தெரிவித்திருந்தார். இது குறித்து ஹர்பஜன் சிங் கூறியதாவது, முன்னாள் பயிற்சியாளர் சப்பல் குறித்து சச்சின் கூறிய கருத்துகள் உண்மை. வீரர்களுக்கு இடையில் மோதலைத் தூண்டிவிட்டார். தவிர, வீரர்களுக்கு இடையிலான நல்லுற வில் விரிசலை ஏற்படுத்தினார். இதன் மூலம், அவரது விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டார். இந்திய அணியைச் சீர்குலைத்துவிட்டார் என்று கூறியுள்ளார். (கு)

# பதிலடி கொடுக்குமா இலங்கை?




இலங்கை, இந்தியா அணிகள் மோதும் 2வது ஒருநாள் போட்டி இன்று குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நடக்கிறது. இரு அணிகளும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் மோதுகின்றன. இதன் முதல் ஒருநாள் போட்டி கட்டாக்கில் நடைபெற்றது. விஸ்வரூபம் எடுத்த இந்தியா இமாலய ஓட்டங்கள் குவிக்க, இலக்கை எட்ட முடியாமல் இலங்கை அணி 169 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.

இதனால் இந்திய அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருக்கிறது. இதைத் தொடர்ந்து 2ஆவது ஒருநாள் போட்டி இன்று நடக்கிறது.

இந்திய அணியின் தொடக்க வீரர்கள் ரஹானே, தவான் இந்த போட்டியிலும் சிறப்பான தொடக்கம் கொடுத்தால் ஓட்டங்கள் முதல் போட்டியைப் போலவே உயரும். தொடர்ந்து சிறப்பான நிலையில் இருக்கும் ரெய்னாவும் இலங்கைப் பந்துவீச்சுக்குச் சவாலாக இருப்பார்.

கோஹ்லியின் தலைமை வித்தியாசமாக இருக்கிறது. முதல் போட்டியில் சில வியூகங்கள் மூலம் இவர் அசத்தினார். இவரும் தொடர்ந்து சிறப்பான நிலையில் இருக்கிறார்.

பந்துவீச்சில் இஷாந்த் சர்மா சிறப்பாக உள்ளார். கடந்த போட்டியில் அவர் 4 இலக்குகளை கைப்பற்றினார். சுழற்பந்தில் புதுமுக வீரர் அக்ஷர் பட்டேலும் அசத்துகிறார்.

வருண் ஆரோன் காயம் அடைந்ததால் பதிலாக 2ஆவது மற்றும் 3ஆவது ஒரு நாள் போட்டிக்கான இந்திய அணியில் சலகதுறை வீரர் ஸ்டுவர்ட் பின்னி சேர்க்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணியைப் பொறுத்தவரை, துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். அணித்தலைவர் மத்தியூஸ் கூட அணியின் துடுப்பாட்டம் மிகவும் மோசமானதாக இருப்பதாக குற்றம் சாட்டினார்.

ஓட்டங்கள் இலக்கை எட்ட வேண்டி இருக்கும் போது தொடக்கம் சிறப்பாக அமைய வேண்டும், தொடக்க வீரரான டில்ஷான் முதல் போட்டியில் 18 ஓட்டங்களில் வெளியேறி ஏமாற்றினார். களத்தடுப்பும் சரியானதாக அமையவில்லை. இலங்கை வீரர்கள் களத்தடுப்பில் கோட்டை விட்டனர். முக்கியமாக சங்கக்கார, தவானின் பிடியைத் தவறவிட்டது முதல் போட்டியில் பெரிய தவறாக முடிந்து விட்டது. துடுப்பாட்டத்திலும் சிறப்பான ஆட்டத்தை ஆட மறந்து விட்டார். 13 ஓட்டங்களில் வெளியேறி ரசிகர்களுக்கு அதிர்ச்சி கொடுத்தார். பந்து வீச்சை பொறுத்த வரை மலிங்க இல்லாதது அணிக்கு பின்னடைவு தான். முதல் போட்டியில் அசத்திய சுராஜ் ரந்தீவ் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். இவரும் இந்திய அணிக்கு நெருக்கடி கொடுக்க முடியும். (கு)



# இவர்கள் தான் சிறந்தவர்கள்

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் இந்த ஆண்டுக்காக சிறந்த அணியில் இந்திய அணித்தலைவர் டோனி, துணை அணித்தலைவர் கோஹ்லி இடம் பிடித்துள்ளனர்.

ஆண்டின் சிறந்த சர்வதேச ஒருநாள் அணி:
முகமது ஹபீஸ், குவிண்டான் டி காக், விராட் கோஹ்லி, ஜார்ஜ் பெய்லி, ஏபி டி வில்லியர்ஸ், டோனி (அணித்தலைவர்- விக்கெட் கீப்பர்), டுவைன் பிராவோ, ஜேம்ஸ் பால்க்னர், டேல் ஸ்டெய்ன், முகமது ஷமி, அஜந்த மென்டிஸ் மற்றும் ரோஹித் சர்மா.

ஆண்டின் சிறந்த டெஸ்ட் அணி:
டேவிட் வோர்னர், கேன் வில்லியம்சன், குமார் சங்கக்கார, ஏபி டி வில்லியர்ஸ் (விக்கெட் காப்பாளர்), ஜோ ரூட், அஞ்சலோ மத்தியூஸ் (அணித் தலைவர்), மிட்செல் ஜோன்சன், ஸ்டுவர்ட் பிராட், ஸ்டெய்ன், ரங்கன ஹேரத் மற்றும் டிம் சவுத்தி மற்றும் ரோஸ் டெய்லர்.

சர்வதேச விருதுக்காக பரிந்துரைக்கப்பட்ட வீரர்கள் விபரம்:-

ஆண்டின் சிறந்த சர்வதேச கிரிக்கெட் வீரர்:
ஏபி டி வில்லியர்ஸ், மிட்செல் ஜோன்சன், அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் குமார் சங்கக்கார

ஆண்டின் சிறந்த சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் வீரர்:
மிட்செல் ஜோன்சன், அஞ்சலோ மத்தியூஸ், குமார் சங்கக்கார மற்றும் டேவிட் வோர்னர்.

ஆண்டின் சிறந்த சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் வீரர்:
குவிண்டான் டி காக், ஏபி டி வில்லியர்ஸ், விராட் கோஹ்லி மற்றும் டேல் ஸ்டெய்ன்.

ஆண்டின் சிறந்த 20/20 வீரர்:
ஆரோன் பிஞ்ச், அலெக்ஸ் ஹால்ஸ் மற்றும் ரங்கன ஹேரத்.

ஆண்டின் சிறந்த 20/20 வீராங்கனை:
சார்லோட் எட்வர்ட்ஸ், மெக் லேன்னிங், மிதாலி ராஜ், மற்றும் ஸ்டீபனி டெய்லர்.

ஆண்டின் சிறந்த ஒருநாள் கிரிக்கெட்டின் வீராங்கனை:
சார்லோட் எட்வர்ட்ஸ், மிதாலி ராஜ், சாரா டெய்லர் மற்றும் ஸ்டீபனி டெய்லர்.

சர்வதேச கிரிக்கெட்டில் திறமையான வீரர்:
கோரே அண்டர்சன், கரி பேல்லன்ஸ், ஜிம்மி நீஸ்ஹாம் மற்றும் பென் ஸ்டோக்ஸ்.

(த)

## தொடர்ச்சிகள்

### பொய்

தலைவரும் கூறிக் கொண்டு திரிகின்றனர். ஆனால் வடக்கு மாகாண சபைக்கென ஒதுக்கப்பட்ட நிதி உரிய முறையில் செலவு செய்யப்படுகின்றது. எந்த நிதியும்திரும்பிச்செல்லவில்லை"- என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நேற்று கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் அங்கு குறிப்பிடும் போது,

"வடக்கு மாகாண சபை அமர்வில் இது தொடர்பாக விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளோம். வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவருக்கும் இது தொடர்பில் அனைத்தும் தெரியும். அவ்வாறிருந்தும் அவர் எம் மீது குற்றஞ்சுமத்துகின்றார். வடக்கு மாகாண ஆளுநரும் அவ்வாறே குற்றம் கூறிக் கொண்டு திரிகின்றார்."- என்றும் அவர் தெரிவித்தார்.

"வரவு-செலவுத் திட்டத்தில் மீண்டு வரும் செலவுக்கு 13ஆயிரத்து 650 மில்லியன் ரூபாவும், மூலதனச் செலவுக்கு ஆயிரத்து 876 மில்லியன் ரூபாவும் என, 15 ஆயிரத்து 526 மில்லியன் ரூபா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நிதி முன்னேற்றம் பற்றிய அறிக்கைகளில் 3 ஆயிரத்து 955 மில்லியன் ரூபா 6 விடயங்களுகாக ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இரணைமடுத் திட்டத்துக்கு ஆயிரத்து 490 மில்லியன் ரூபாவும், மேலதிகமாக ஆயிரத்து 280 மில்லியன் ரூபாவும் காணப்படுகின்றது. இந்த ஆவணங்களில், தெளிவாக இந்தச் செயற்பாடுகள் மாகாண வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தாலும், அதற்கான கட்டுநிதி மாகாண திறைசேரி ஊடாக வழங்கப்படவில்லை என்றும் அந்தக் கட்டுநிதி நேரடியாகத் திணைக்களங்களுக்கு வழங்கப்படுகின்றது என்றும் கூறப்பட்டுள்ளது. 3 ஆயிரத்து 959 மில்லியன் ரூபா நிதியானது, அந்த ஒதுக்கீட்டில் திட்டமிடலிலோ, நடைமுறையாக்கலிலோ, மீளாய்விலோ, மதிப்பீட்டிலோ, கண்காணிப்பிலோ, கொடுப்பனவிலோ மாகாண சபை உத்தியோகத்தர்களோ, மாகாண சபையோ மாகாண அமைச்சரவையோ எந்தவிதத்திலும் பங்கு கொள்ளவில்லை.

அவ்வாறிருக்கையில் எமக்குக் கிடைக்காத நிதியை நாம் செலவு செய்யவில்லை என்று என்ன அடிப்படையில் கூறித் திரிகிறார்கள்?. வடக்கு மாகாண சபை சீராக இயங்கவில்லை என்று மக்களுக்கு தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தவே அவர்கள் அவ்வாறு கூறித்திரிகின்றனர். மக்களுக்கு இது குறித்துத் தெளிவுபடுத்த வேண்டிய தேவையுள்ளதால் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

இங்கு முக்கிய விடயம் என்னவெனில் இந்தச் செலவினங்கள் 2014 ஆம் ஆண்டுக்கு மேலாக 2015, 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்கான செலவீனமாகக் காணப்படுகிறது. அவ்வாறிருக்கையில் மாகாண சபை செலவு செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு ஆதாரமற்றதும், பொருத்தமற்றதுமாகும்.

மீண்டு வரும் செலவு, அதாவது பராமரிப்புச் செலவு வேறுபட மாட்டாது. ஆகவே ஆயிரத்து 876 மில்லியன் ரூபாதான் வடக்கு மாகாண மூலதன ஒதுக்கீடு. இந்த ஒதுக்கீடுகளுக்கான வேலைகள், பொறுப்புகள் எல்லாம் எடுக்கப்பட்டுவிட்டன. கொடுப்பனவுகள் சில இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

காரணம் அதற்கான ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு இன்னும் வந்து சேரவில்லை.

பொதுவாகவே கொடுப்பனவுகளுக்கான முழுத்தொகையும் எந்த நிர்வாகத்திலும் 100 வீதம் செலவழிக்கப்படுவதென்பது சாத்தியமல்ல. இருந்தாலும் 75 - 80 வீதமான தொகையை மாகாண சபை செய்து முடிக்கும்"- என்று தெரிவித்தார்.

(ற-4)

### சிகிச்சை

தப்பி வந்து பின்னர் காணாமற் போனவர்கள் தொடர்பில் முதன் முறையாக அதிகளவு முறைப்பாடுகள் செய்யப்பட்டது.

மாத்தளனில் வைத்து பதிவு செய்து கப்பலில் நோயாளிகள் ஏற்றிச் செல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் திருகோணமலை புல்மோட்டை வைத்தியசாலைக்கே ஏற்றிச் செல்லப்பட்டனர். நாம் போரின் இறுதியில் இராணுவத்தினரிடம் சரணடைந்து, நலன்புரி நிலையத்திலிருந்து வெளியில் வந்து புல்மோட்டை, அநுராதபுரம், பதவியா, குருநாகல், கண்டி, வவுனியா என்று சகல வைத்தியசாலைகளில் தேடியும் எமது உறவுகள் கிடைக்கவில்லை என்று அவர்கள் தமது சாட்சியத்தில் குறிப்பிட்டனர்.

அத்துடன் காயத்துடன் இராணுவத்தினர் பொறுப்பெடுத்த தமது உறவுகளும் இன்று வரையில் திரும்பவில்லை என்று கடந்த நான்கு நாள் அமர்வில், 5 பேர் சாட்சியமளித்தனர். ஓமந்தையிலும், வட்டுவாகலிலும் வைத்து இராணுவத்தினர் எமது காயமடைந்த உறவுகளை பொறுப்பெடுத்தனர். அவர்களை நாம் கொண்டு செல்லப்படும் நலன்புரி நிலையங்களுக்கே கொண்டு வருவோம் என்று அவர்கள் தெரிவித்தனர். ஆனால் இன்று வரையில் அவர்கள் எங்களிடம் வரவில்லை என்று உறவினர்கள் குறிப்பிட்டனர்.

குறிப்பாக உபதபால் அதிபரான கணவர் மா.கதிர்காமநாதன் தனது சாட்சியத்தில், "தனது மனைவியான விக்னேஸ்வரி (வயது - 42) போரின் போது வெள்ளாம் முள்ளிவாய்க்காலில் வைத்து காலில் காயமடைந்தார். இராணுவத்தினர் எங்கள் எல்லோரையும் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி வவுனியா செட்டிகுளம் வலயம் - 4 நலன்புரி நிலையத்துக்கு கொண்டு சென்றது.

அங்கு ஒரு நாள் மாத்திரம் என்னுடன் எனது மனைவி இருந்தார். 20 ஆம் திகதி அங்கு இயங்கிய தற்காலிக வைத்தியசாலையில் எனது மனைவியைச் சேர்ப்பித்தேன். அங்கு வைத்தியர் சுப்ரா காலில் இருந்த குண்டை வெட்டி அகற்ற முற்பட்டார். அங்குள்ள வசதிகளை வைத்துக் கொண்டு அதனைச் செய்ய முடியவில்லை. இதன் பின்னர் வவுனியா வைத்தியசாலைக்கு ஏற்ற வேண்டும் என்றார். ஏனைய நோயாளிகளுடன் அனுப்புவதாகச் சொன்னார்கள்.

எனக்கு அனுமதி தரவில்லை WP 0336 என்ற அம்புலன்ஸில் ஏற்றி அனுப்பினர். இதன் போது பொலிஸ் கான்ஸ்டபிள் 41944 என்பவரும் உடனிருந்தார். என்னால் வெளியில் செல்ல முடியவில்லை. இதன் போது அப்போது வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி அங்கு வந்து கூட்டம் வைத்தார். அதற்கு நான் மொழிபெயர்ப்புக்குச் சென்றேன். இதன் போது ஆளுநரிடம் விடயத்தை கூறி அனுமதி கேட்டேன். அதற்கு அமைய அங்குள்ள இராணுவத்தினர் என்னை வெளியில் செல்வதற்கு அனுமதித்தனர்.

நான் வவுனியா வைத்தியசாலையில் சென்று பார்த்தேன். பின்னர் செட்டிகுளம் வைத்தியசாலையில் சென்று பார்த்தேன். அங்கும் இல்லை. அங்குள்ள பொறுப்பான வைத்தியர், இங்கு பிரெஞ்சு வைத்தியர் குழு வைத்தியம் பார்த்ததாகவும் அவர்கள் பதிவுகள் எதுவும் செய்யவில்லை என்று குறிப்பிட்டார். இன்று வரையில் மனைவி எங்கே என்பது தெரியாது"-என்று குறிப்பிட்டார்.

(ற-5)

### விசாரணை

மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தெரிவித்தார்.

2010 ஆம் ஆண்டு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வின் முன்பு சாட்சியமளித்த பலர், 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி தமது உறவுகளை வட்டுவாகலில் வைத்து இராணுவத்தினரிடம் அருட்தந்தை பிரான்ஸிஸ் ஊடாக கையளித்ததை தெரிவித்திருந்தனர். தற்போதும் இந்த முறைப்பாட்டை மீளவும் முன்வைக்கின்றனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவிடம் அவர்கள் முன்னர் முன்வைத்த முறைப்பாடுகளுக்கு என்ன நடந்தது ? அது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை என்ன என்று ஊடகவியலாளர்களால் ஆணைக்குழுவின் தலைவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமையவே இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு அந்த விடயங்கள் குறித்து ஆராயும்."- என்று அவர் தெரிவித்தார்.

தற்போது முன்வைக்கபட்ட குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் இதுவரை ஏதாவது விசாரணை மேற்கொண்டுள்ளீர்களா? என்று மீளவும் கேட்ட போது,

"நாம் இப்போதுதான் விசாரணைகளின் ஆரம்பக் கட்டத்தில் நிற்கின்றோம்" என்று குறிப்பிட்டார்.

குறித்த சம்பவம் நடந்தது தற்போதே 5 வருடங்களாகி விட்டது. மேற்படி விடயம் தொடர்பில், பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு எப்போது முடிவு தெரியும்? என்று அவரிடம் கேட்டபோது,

"என்னிடம் அந்தக் கேள்வியைக் கேட்க வேண்டாம். ஆணைக்குழுவின் விசாரணையில் நிறைய வேலைகள் இருக்கின்றன. முறைப்பாடுகளை மொழிபெயர்க்க வேண்டும். அதனை ஒழுங்குபடுத்த வேண்டும்"- என்று தெரிவித்தார்.

(ற-5)

### 3 ஆவது தடவையும்

தில் கோரியுள்ள விடயம் தொடர்பில் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்கள் எழுத்துமூல விளக்கத்தை சமர்ப்பிக்க நாளை 7ஆம் திகதி பிற்பகல் 3 மணிவரை கால அவகாசம் உள்ளது என்று அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

பிரதம நீதியரசரின் ஆலோசனைக்கு அமைய உயர் நீதிமன்ற பதிவாளரால் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருக்கு இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட் டுள்ளது.

(ற-சி)

### கொத்துக்

டார். காணாமற் போனோர் தொடர்பில் கடந்த நான்கு தினங்களாக முல்லைத்தீவு மாவட்டத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்தது. விசாரணையின் இறுதி நாளான நேற்று ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தப்பட்டது. அதில் ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சாட்சியமளித்த பலர் தமது பிள்ளைகள் கடத்தப்பட்டமை தொடர்பில் முறையிட்டிருந்தார்கள். அது தொடர்பில் நான் மேலதிகமாக எதனையும் தெரிவிக்கவில்லை. ஏனெனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு குறித்த விடயம் தொடர்பில் இரகசிய அறிக்கை வழங்கவுள்ளேன்"- என்று தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் அமர்வில், புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் சுதந்திரபுரம் பகுதியில் கொத்துக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் நேற்று முன்தினம் சாட்சியமளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஆணைக்குழு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த ஆணைக் குழுவின் தலைவர், "ஆணைக் குழுவின் புதிய விரிவாக்கப்பட்ட ஆணைக்கு அமையவே விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றோம். இருப்பினும் காணாமற் போனோர் தொடர்பிலேயே முதலில் விசாரிக்கின்றோம். அதன் பின்னரே போரின் போதான குற்றங்கள் குறித்து விசாரிப்போம். இந்தக் குற்றச்சாட்டு மட்டுமல்ல வேறு பல குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும், ஆணைக்குட்பட்ட விதத்தில் நாம் விசாரிப்போம்" - என்று கூறினார்.

(ற-5)



## மரண அறிவித்தல்



திருமதி
**திரவியம் நவரத்தினம் (காந்தமணி)**

அல்வாயைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரவியம் நவரத்தினம் (காந்தம்) நேற்று (05.11.2014) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து-கண்ணகை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னையா திரவியத்தின் அன்பு மனைவியும், சிவானந்தம் (ஓய்வுநிலை நூலகர்உதவியாளர், யாழ். பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற விமலநாதன் ஆகியோரின் அன்பு தாயும், கலாமாலினியின் (ஆசிரியை, யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை) அன்பு மாமியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசின் (பிரபல கட்டட ஒப்பந்தகாரரும், ஆர்மொனியக் கலை ஞரும்) அன்பு சகோதரியும், தர்சன், கோகுலன், தர்ஷா, விபீசன், விஜூசன், பத்மயன், சாம்பவி ஆகி யோரின் அன்பு பேர்த்தியும் ஹரிதுவாரனின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 46, நொத்தாரிஸ் வீதி, அரியாலை மேற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (06.11.2014) வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 46, நொத்தாரிஸ் வீதி,
அரியாலை மேற்கு, அரியாலை.

(53825)(10)

தகவல்:
மகன் - சி.சிவானந்தன்


## வடக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர்கள் விவரம் திரட்டல்

வடமாகாண அனைத்து அரச திணைக்கள அலுவலகங்களிலும் கடமையாற்றும் முகா மைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்தவர்களின் விவரங்கள் வட மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) அலுவலகத்தால் திரட்டப்படுகிறது.

மாகாண பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகத்தால் முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் விவரங்களைப் பூரணப்படுத்துவதற்கு ஏதுவாகவும் பேணப்படும் விவரங்களின் செம்மைத் தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டும் பூரண விவரங்களை அனுப்பி வைக்குமாறு கல்வித் திணைக்கள அலுவலகங் களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நியமனக் கடித இலக்கம், உத்தியோகத்தரின் பெயர், அடையாள அட்டை இலக்கம், குடும்ப நிலை, பால், தனிப்பட்ட முகவரி, திணைக்கள அலுவலக முகவரி, தற்போதைய பதவி வகை, இதுவரை சேவையாற்றிய நிலையங்களின் விவரங்கள் மற்றும் காலப் பகுதி போன்ற விவரங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## யோகா பயிற்சி

யாழ்ப்பாணம் சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் உப யோகா பயிற்சிப் பட்டறை இன்றும் நாளையும் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் என்னும் முகவரியில் அமைந்துள்ள நிலையத்தில் நடைபெறவுள்ளது. இந்தியாவில் உள்ள ஈசா நிறுவனத்தில் பயிற்சி பெற்ற வைத்திய கலாநிதி கௌரிபாலனால் இந்தப் பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் பங்கு பற்றலாம் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (வ-14)



# 31ஆம் நாள் நினைவலைகள்

## செல்லத்துரை தவறஞ்சன்

**தோற்றம் : 23.05.1969**

**மறைவு : 07.10.2014**

**அன்பு மழை பொழிந்து**
**எமை அரவணைத்த எம் அருமைத்தம்பி**
**மின்னாமல் முழங்காமல் இடி இடித்தது போல்**
**எமையெல்லாம் அதிரவைத்து எங்கு நீ சென்றாயோ?**
**பாசத்தால் துடிதுடித்து பரிதவித்து ஏங்குகின்றோம்**
**வாழும் காலமெல்லாம் உன் நினைவு நீங்காது**
**ஈரவிழிகளுடன் எம் கண்ணீர்ப் பூக்களையும்**
**காணிக்கையாக்குகின்றோம்.**
**உன் ஆத்மா இறைவனுடன் ஒன்றித்துச் சுகம் பெறவே**
**காலமெல்லாம் கடவுளை வேண்டிப்**
**பாதம் பணிகின்றோம்.**

**மனோறஞ்சினி அக்கா குடும்பத்தினர்.**
**சிறுவிளான், இளவாலை.**

(53814)(5.6.3)

# மரண அறிவித்தல்



## திருமதி பிரான்சீஸ்கம்மா (தங்கமணி) அந்தோனிப்பிள்ளை

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரான்சீஸ்கம்மா அந்தோனிப்பிள்ளை 04.11.2014 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சலமோன்-பவுலினாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம்-ஞானசவுந்தரி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், இராசசெல்வம், ஆனந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், ஐடா, ஜெயந்தி (லண்டன்) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற அல்பிறற்றம்மா மற்றும் பிலுப்பையா, ஆரோக்கியம், அடைக்கலம், டேவிற், சந்தியாப்பிள்ளை, திரேசம்மா ஆகியோரின் சகோதரியும், செல்வநேசன், துஷ்யந்தி, சுலக்சன், ஜெனிபர், ஜெனித்தா, ஜெனிலா ஆகியோரின் பேர்த்தியும் அஸ்வினாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 3ஆம் வட்டாரம், மண்டைதீவில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (08.11.2014) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்துக்கு இரங்கல் திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு, பின் புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**பிள்ளைகள்.**

**3ஆம் வட்டாரம்,மண்டைதீவு.**

(53815)(10.6.3)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் டோமினிக் தனுசன் (தனு)

**தோற்றம் : 06.09.1990** **மறைவு : 07.10.2014**

இரக்கமுள்ள இறைவா! உம்மிடம் அழைத்துக்கொண்ட எம் செல்ல மகன் உம் நித்திய வான் வீட்டில் என்றும் மகிழ்ந்திருக்க அருள் புரியும். ஆமென்.

எமது மகனின் மரணச் செய்தி அறிந்து நேரடியாகவும் தொலைபேசியூடாகவும், தபால் மூலமாகவும் இணையத்தளங்களூடாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், துண்டுப் பிரசுரங்கள், பதாகைகள், செபப்புத்தகங்கள், நினைவு அட்டைகளை வெளியிட்டவர்களுக்கும், பூமாலைகள், மலர்வளையங்கள் செலுத்தியோருக்கும், வீதியை அலங்கரித்தவர்களுக்கும், இரவு பகலாக தோளோடுதோள் நின்ற பாசமுள்ள நண்பர்களுக்கும், உற்றார், உறவினர், அயலவர்களுக்கும், திருப்பலி நிறைவேற்றிய குருக்களுக்கும், இல்லத்தில் வழிபாடுசெய்த பங்குத்தந்தை, பங்கு மக்களுக்கும், திருவுளப்பணிச் சபைக் குருவுக்கும், மாணவர்களுக்கும், தனித்தனியாக வந்து செபித்த குருக்களுக்கும், குழுவாக செபித்த பொது மக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக கொழும்புத்துறை பரிசுத்த செபமாலை அன்னை ஆலயத்தில் இன்று(06.11.2014) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்குகொண்டு எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**இல. 27/A, A.Vறோட்,**
**கொழும்புத்துறை.**

**இவரது பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்.**

(53812)(9.6.3)

# கார் விபத்தில் பெண்கள் சாவு

## மாங்குளத்தில் நேற்று சம்பவம்

கிளிநொச்சி, நவ.6

முல்லைத்தீவு, மாங்குளம், பனிக்கங்குளம் ஏ-9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்ததுடன், மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ள னர். இந்த விபத்து நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த கார்வேகக்கட்டுப்பாட்டை இழந்து பனைவடலி களை மோதி பல தட வைகள் தடம் புரண்ட தில் இந்த விபத்து ஏற் பட்டுள்ளது. சம்பவத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இரண்டுபெண்கள் உயி ரிழந்துள்ளனர். ஒரு பெண்ணும் ஓர் ஆணும் காயமடைந்தநிலையில் கிளிநொச்சி வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த விபத்தில் சாரதி காயங்களின்றித் தப்பியுள்ளார். கடற்படை அதிகாரி ஒருவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களே விபத்தில் சிக்கியுள்ளனர் என்று தெரியவருகிறது. கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அதிகளவான இராணுவத்தினர் குவிந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர் .(ந-55)

# ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்ட சந்தேக நபருக்குப் பிணை

யாழ்ப்பாணம், நவ. 6

14 வயதுச் சிறுவனை ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றினால் 75 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் சமுர்த்தி உத்தியோகத்தர் என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் அவர் சமுர்த்தி அலுவலகத்தில் பணியாற்றும் முகாமைத்துவ உதவியாளரெனக் கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் ஜி.தனுசன் என்பவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட குறித்த முகாமைத்துவ உதவியாளர் மல்லாவி, நட்டாங்கண்டல், கருமுள்ளியான் பகுதியைச் சேர்ந்தவர் எனப் பொலிஸாரின் பதிவுகள் கூறுகின்றன.

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உடற்பயிற்சிக்காக நடந்து சென்ற பொலிஸ் அதிகாரிகள் மழை பெய்ததால் அருகில் உள்ள பாழடைந்த வீட்டின் முன் பகுதியில் ஒதுங்கினர். அங்குள்ள மா மரத்தின் கீழ் மோட்டார் சைக்கிள் காணப்பட்டதால் சந்தேகம் கொண்டு உள்ளே சென்று பார்த்தபோது சிறுவனுடன் அவர் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டார் என்று கூறி இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

சிறுவனை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் கிளிநொச்சி நீதிமன்றுக்கு இருவரையும் பொலிஸார் அழைத்துச் சென்றுள்ளனர். சிறுவனைப் பெற்றோரிடம் செல்ல அனுமதித்த நீதிமன்று சந்தேக நபரை 75 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளது. (த-4)

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் ஈஸ்வரன்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

கோப்பாய் மத்தி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ஈஸ்வரன் நேற்று (04.11.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரனின் சகோதரனும், காலஞ்சென்ற கண்மணி மற்றும் இலங்கைநாதன், ஞானசேகரம் (கனடா), குலசேகரம் (கனடா), சிவசுப்பிரமணியம் (இத்தாலி), ஸ்ரீசிவசாந்தகுமார் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ரவீந்திரன் (இத்தாலி), ஜமேலா, சயந்தன் (லண்டன்), சயந்தகுமார் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகந்தினி (இத்தாலி), கலைநேசன் (மாகாணக்கல்வித் திணைக்களம்- வடமாகாணம்), சங்கீதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், ஹரனிகா, ஹரிகரன், திருஷா (இத்தாலி), லகீஷன், டிலக்ஷனா, கிஷான், கரீஸ், ஜகீஸ் (லண் டன்) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.11.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் கந்தன் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே: 021 492 3490, 077 449 3273

(53824)(10)

# கோத்தா - மன்னார் ஆயர் நேற்று சந்திப்பு

கொழும்பு, நவ.6

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஷக்கும் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப்புக்கும் இடையில் நேற்றுக் கொழும்பில் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் மன்னார் ஆயருடன் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் விக்டர் சோசை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் மன்னாரில் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள முள்ளிக்குளம் பகுதியில் தமிழ் மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பாகப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-சி)


## வீட்டுடன் காணி விற்பனைக்கு

பிறவுண் வீதி, கொக்குவில் புகையிரத நிலையம், யாழ். தொழில்நுட்பக்கல்லூரி, யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகில் 3 ½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 8689332

(53821)(10.6)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியர்
[illegible]
அவர்களின் அன்பு மாமனார்

## செல்லப்பா பத்மநாதன்



அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய 31ஆம் நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் குழாம்.
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்

# கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையில் சாரதியாக கடமையாற்றும் இ.ஜெனானந்தன் அவர்களின் அன்புத் தந்தையார்

## குமாரசாமி இராமச்சந்திரன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

(கி/17662)(9.1.0)

# மரண அறிவித்தல்

## திருமதி மனோன்மணி சிங்கநாயகம்



யாழ்ப்பாணம், கனகசபை அவெனியு, கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்தவரும் மாவிட்டபுரம் மற்றும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி குழந்தைவேலு சிங்கநாயகம் 02.11.2014 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு சிங்கநாயகம் ஆகியோரின் பாசமிகு மனைவியும், குணபாலசிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயபாலசிங்கம் மற்றும் மனோராணி (ஜேர்மனி), மனோரதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான பூபதி, சதாசிவம் மற்றும் நல்லம்மா, நாகேஸ்வரி (மணி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜவதனி (பிரான்ஸ்), நடேசன் (ஜேர்மனி), சரவணபவான் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், சரஸ்வதி, ராஜேஸ்வரி மற்றும் இராமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கிரிதாஸ், விதூஷானி, வீரேஸ்வரன், விஷ்ணு, மதிகரன், சகானா, சஞ்சுதன், சஞ்சிதா, நிவாசினி, லாவண்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கார்த்தி, யாதனா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.11.2014) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

தொடர்பு:
T.P: 0033563775626

(53820)(10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி சொர்ணலிங்கம்



யாழ். இணுவில் தெற்கு பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சொர்ணலிங்கம் 01-11-2014 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி(சாமியார்)-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், சீனியர்-சின்னதங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சொர்ணலிங்கத்தின் பாசமிகு மனைவியும், தனலட்சுமி, தவமலர், விஜயலட்சுமி, சகுந்தலாதேவி, சத்தியதேவி, தயாநிதி, சந்திரகுமார், குணசீலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கமலேஸ்வரி, தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், உமாதேவி, காலஞ்சென்ற தம்பித்துரை ஆகியோரின் அன்பு மைத்துனியும், கணேசநாதன், பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற பரமசிவம்பிள்ளை, குகநேசன், மகாராஜா, சசி, கிரிஜா ஆகியோரின் அன்பு மாமி யாரும், ஜனா, தீபா கணேஷ், மாதுலா ராதேயன், கோபி தர்சிலா, ரூபி விஜய தாஸ், ஜீவா தவராஜா, கிரி டிலானி, ஜெயந்தி நவனேசன், ஆரணி பிரபாகரன், ராஜன், நதீஸ், ஜிந்துஜன், ஜிந்துஜா, நிறோசன், கஜானன், கபிலன், சங்கீர்னா, சாரங்கன், ரக்ஸனா, ராகுல், ராகங்கி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கபிஷேக், நிஷேக், ரிஷ்வின், அருண், அன்பு, அழகி, அவ்வை, மீரா, மாதங்கி, அனுஜன், ராகவி, ஆதிரையன் ஆகியோரின் ஆசைப் பூட்டியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.11.2014 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கனடாவில் (ரொறன்ரோ) நடைபெறும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

(53823)(10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## தொடர்ச்சிகள்

### மலையக

மேற்கொண்டு வருகின்ற போதிலும் இவர்களின் உழைப்பினால் கிடைக்கின்ற பயன்கள் தோட்டக் கம்பனிகளின் கருவூலத்தை நிரப்பி வருவதைக்காண முடிகின்றது.
இவர்களின் வீட்டு வசதிகள் மேம்படுத்தப்படாததோடு, குறைந்த பட்சத் தேவைகள் கூட நிறைவேற்றப்படாத நிலையே காணப்படுகின்றது. இன்றும் கூட இந்த மக்களுக்கென சொந்தமாகக் காணிகள் வழங்கப்படவில்லை. இவர்கள் ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்ட லயன் குடியிருப்புக்களிலேயே தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகின்றனர்.
ஊடகங்களின் தகவலின் பிரகாரம் மண்சரிவு ஆபத்துத் தொடர்பாக இந்த மக்களுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் செல்வதற்கு இடமில்லாத நிலையில் அவர்கள் அங்கே தங்கியிருந்துள்ளனர். அரச நிர்வாகமும் இந்த மக்களைப் பாதுகாப்பான வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்துவதில் பாராமுகமாக இருந்ததை அறியமுடிகின்றது.
அரசின் பங்காளிகளாக இருக்கும் தொழிற்சங்கங்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களைப் பேணுவதில் பங்கு உண்டு என்பதை எவருமே மறுக்க முடியாது.
இதேவேளை நகரப் புறங்களில் அமைந்துள்ள கட்டடங்களைச் செம்மைப்படுத் துவதற்கும், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் அரசு பெருந்தொகையான நிதியைச் செலவிட்டு வருகின்றது. இந்த நிலையில் மிகவும் வறுமையான நிலையில் உள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு காணியும், வீடுகளும் வழங் குவது அரசின் முக்கிய கடமையாகும்.
அரசின் அறிவிப்பின் பிரகாரம் மண்சரிவில் பாதிக்கப்பட்டவர்களின் தொகை முன்னர் அறிவிக்கப்பட்டதை விடக் குறைவானது என்பது தெரியவருகின்றது.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாதிக்கப்பட்ட பகுதியை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.
அரசின் உதவிகளுக்கு மேலதிக்மாக தனியார் நிறுவனங்களும், அமைப்புகளும், மனிதாபிமான முகவர் நிலையங்களும் தேவையான உதவிகளை வழங்கி வருகின்றன.
பாதிக்கப்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள இரண்டு நிலையங்களிலும் உள்ள மக்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்கள், சமைத்த உணவுகள், குடிதண்ணீர், ஆடைகள், பாத்திரங்கள் மற்றும் அன்றாடப் பாவனைப் பொருள்கள் என்பன தேவையான அளவு வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் அகில இலங்கை இந்து காங்கிரஸ் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு உதவுவதற்கு முன்வந்துள்ளது. ஆனால் இந்தச் சிறுவர்களைப் பொறுப்பேற்பதற்கு அரசு முன்வந்துள்ளதாகவும் தெரியவருகின்றது. ஆனால் இவர்கள் தமது உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவதையே நாம் சிபார்சு செய்கின்றோம். அரசு நிதி மற்றும் தேவையான உதவிகளை இவர்களுக்கு வழங்குவதுடன் வீட்டு வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுத்தல் வேண்டும்.
இறுதியாக தோட்டத் தொழிலாளர்களான தமிழ் மக்களுக்கென சொந்தக் காணிகளை வழங்கவும் அவர்களின் இல்லிடங்களை அபிவிருத்தி செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பேரவை சிபார்சு செய்கின்றது - என்றுள்ளது (த-க)

### அடுத்தவாரம்

கலைக்கழக வேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் எஸ்.பத்மநாதன் பட்டங்களை வழங்கி வைப்பார்.
கலாநிதி - 1, உயிர்வேதியியல் முதுதத்துவமாணி - 3, தாதியியல் முதுதத்துவமாணி - 1, புவியியல் முதுதத்துவமாணி -2, கிறிஸ்தவம் முதுதத்துவமாணி - 1, கல்வி முதுதத்துவமாணி -1, தமிழ் முதுதத்துவமாணி -1, விஞ்ஞானம் முதுதத்துவமாணி -7,
பட்டப்பின் டிப்ளோமா கல்வி வவுனியா - 7, பட்டப்பின் டிப்ளோமாகல்வி:- யாழ்ப்பாணம் - 156, பட்டப்பின் டிப்ளோமாகல்வி:- சூழல் முகாமைத்துவம் - 1, மருத்துவ சத்திர சிகிச்சை மாணி - 84, தாதியியல் விஞ்ஞான மாணி - 9, விஞ்ஞான ஆய்வுகூட மாணி - 5, மருந்தகவியலாளர் -6, சித்த வைத்திய சத்திரசிகிச்சைமாணி - 29, விவசாய விஞ்ஞானமாணி -33, விஞ்ஞானமாணி -82, கணிணி விஞ்ஞானமாணி -5, வியாபார நிர்வாகமாணி - 103, வியாபார நிர்வாகமாணி (3 வருடம்)- 6, வர்த்தகமாணி (3 வருடம்) - 1, சட்டமாணி - 23, கலைமாணி (சிறப்பு) - 357, கலைமாணி (பொது) - 179, நுண் கலைமாணி - 129,
வவுனியா வளாகம் விஞ்ஞான மாணி - 60, வியாபார நிர்வாகமாணி (சிறப்பு) - 63, வியாபார நிர்வாகமாணி (பொது) -17.
இவை தவிர டிப்ளோமா பட்டம் பெறும் 117 மாணவர்களின் பட்டங்களும் வெளிவாரியாகப் பட்டம் பெறும் 111மாணவர்களதும் பட்டங்கள் அவர்கள் சமுகமளிக்காத நிலையில் பட்டமளிப்பு விழாவில் வேந்தரால் உறுதி செய்யப்பட்டுப் பிரகடனப் படுத்தப்படும். உடற் பயிற்சி உயர்டிப்ளோமா ஒருவர் பெற்றுக் கொள்வார் என்று பதிவாளர் மேலும் அறிவித்துள்ளார்.

(த-4)

### மு.காவின்

கொண்ட தனியான நிர்வாக மாவட்டத்தை ஏற்படுத்த நாங்கள் ஒருபோதும் இணங்கப் போவதில்லை. கிழக்கில் மாத்திரமல்ல மத்திய மாகா ணத்திலும் பெரும்பாலான முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். நாட்டைப் பிளவுப்படுத்தச் சென்றால் அது நாட்டுக்குள் பதற்றமான சூழ்நிலைகளை உருவாக்கும்-என்றார்.

(த-10)

### குண்டு

35 ஆம் கிராமத்தில் உள்ள விவசாயி ஒருவர் தனது மேட்டு நிலத்தைப் பண்படுத்திக் கொண்டிருந்த போதே இந்தக் குண்டு மண்ணில் புதையுண்டிருந்த நிலையில் வெளியே வந்துள்ளது. பொதுமக்களால் தகவல் தெரிவிக்கப்பட்டுச் சம்பவ இடத்துக்கு வந்த வெல்லாவெளி பொலிஸார் மட்டக்களப்பு குண்டு செயலிழக்கும் பிரிவை உடன் உரிய இடத்துக்கு அழைத்து அதனைச் செயலிழக்கச் செய்துள்ளனர்.

(த-10)

### ஐ.நா.

பிட்டுள்ளதாவது -
சின்னத்தம்பி கிருஸ்ண ராசா கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவரிடமிருந்து வெற்றுக்கடதாசிகளில் பெறப்பட்ட யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களின் கையெழுத்துகள் அடங்கிய ஆவணம் மீடக்கப்பட்டது. இவரிடம் மேலதிகமாக விசாரணைகளை மேற்கொண்டவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நெருங்கிய ஆதரவாளரான சன்மாஸ்டர் என்பவர் ஐ.நா விடமிருந்து நஷ்டஈட்டை பெறுவதற்காக கையெழுத்து பெறப்படுகின்றது எனத் தெரிவித்து போரினால் பாதிக்கப் பட்டவர்களிடம் வெற்றுக்கட தாசியில் கையெழுத்துகளைப் பெறுமாறு கோரியது தெரிய வந்துள்ளது.
யுத்தத்தின் இறுதி தருணங்களில் கொல்லப்பட்டவர்களின் அடையாள அட்டைவிபரம், மரணச்சான்றிதழ், யுத்தத்தில் விதவையானவர்களின் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் அங்கவீனரானவர்களின் விபரங்கள் போன்றவற்றையும் சேகரிக்குமாறு சன்மாஸ்டர் உத்தரவிட்டது தெரியவந்துள்ளது.
போரில் பாதிக்கப்பட்டவர்களின் கையெழுத்துக்கள் அடங்கிய படிவத்தில் கண்ணால் கண்டவர்களின் சாட்சிகள் என பொய்யான, இட்டுக் கட்டிய விவரங்களை சேர்த்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணையாளர்களிடம் சமர்ப்பிப்பதற்கு திட்டமிட்டிருந்ததாக கைது செய்யப்பட்ட நபர் விசாரணைகளின்போது தெரிவித்துள்ளார்.
காணாமற்போன, காயமடைந்த, கொல்லப்பட்ட 400 பேரின் விவரங்கள் கிருஸ்ணராஜா விடமிருந்துள்ளதை கருத்தில் கொள்ளும்போது வேறு பலரும், இதேபோன்ற தகவல்களை திரட்டி ஐ.நா. விசாரணைக்குழுவிடம் ஒப்படைக்கும்பணியை மேற்கொண்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.
சன் மாஸ்டர் என்பவரிருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர்களுக்குமிடையே தொடர்பிருப்பது கவலையளிக்கின்றது. சன் மாஸ்டர் வெளிநாட்டில் அடைக்கலம் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இது குறித்த விசாரணைகளும் தொடர்கின்றன. சன்மாஸ்டர் என அழைக்கப்படும் விஜயேந்திர குமார் தங்களது கட்சி உறுப்பினரில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளபோதிலும் அக்கட்சியின் செயற்பாடுகளில் அவர் முக்கிய பங்காற்றியமை புகைப்படங்கள் மூலமாக உறுதியாகியுள்ளது.
கடந்த இரண்டு மாத காலப் பகுதியில் கிருஸ்ணராஜாவிற்கும் சன்மாஸ்டரிற்கும் இடையே பல தொலைபேசி உரையாடல்கள் இடம் பெற்றதற்கான ஆதாரங்களுமுள்ளன. இந்த தொலைபேசி உரையாடல்கள் நாளாந்தம் இடம்பெற்றுள்ளன. கிருஸ்ணராஜா கைது செய்யப்பட்டிருந்த வேளை கூட இந்த உரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.
குறிப்பிட்ட சில தரப்பினர் ஐ.நா விசாரணையை பயன்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்குவது என ஏமாற்றுவதையும் அவர்களது துயரங்களை பயன்படுத்தி தகவல்களை சேகரித்து ஐ.நா. விசாரணைகுழுவுக்கு போலியான விவரங்களை சேகரிப்பதையும் கிருஸ்ணராசாவின் கைது புலப்படுத்தியுள்ளது.
இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் ஒகஸ்ட் முதலாம் திகதி, ஆதாரங்கள், சாட்சியங்களை வழங்க விரும்பும் தனிநபர்களும், அமைப்புகளும், அரசுகளும், ஜெனிவா நேரப்படி ஒக்ரோபர் 30 திகதி நள்ளிரவிற்கு முன்னதாக அவற்றை சமர்ப்பிக்க வேண்டுமென - பகிரங்கமாகவும் - தனது வெப் பதளத்திலும் அறிவித்தல் விடுத்திருந்தது. இவ்வாறான் காலக் கெடுவிற்கான தெளிவான காரணங்களையும்அதுமுன்வைத்திருந்தது.
எனினும் ஆச்சரியமளிக்கத்தக்க விதத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகப் பேச்சாளர் இலங்கை பத்திரிகையொன்றிற்கு கருத்துத்தெரிவிக்கையில், தாமதமாக வந்துசேரும் ஆதாரங்களை நிராகரிக்கப் போவதில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.
வடமாகாண சபை உறுப்பினர் அனந்திசசிதரன் ஐ.நா. விசாரணை குழுவின் நிபுணர்களிடம் கால எல்லையை நீடிக்குமாறு கோரிய பிறகே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.
கால எல்லையை வெளிப்படையாக நீடிப்பது வரவேற்கத்தக்கது. அதேவேளை குறிப்பிட்ட கருத்தை வெளியிடும் குறிப்பிட்ட நபர்களுக்கு சாதகமாக இரகசியமாக இதனை நீடிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது - அதிர்ச்சியளிக்கின்றது.
இதேவேளை, விசாரணைகள் இதுவரை எங்கு நடைபெற்றன, எப்போது இடம்பெற்றன போன்ற விவரங்களையும் ஐ.நா. விசாரணை குழு இன்னமும் பகிரங்கப்படுத்தவில்லை.
ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் இந்த விபரம் இரகசியத்தன்மை வாய்ந்தது என குறிப்பிட்டுள்ளது. இந்த நடைமுறைகளில் இரகசியத்தன்மை பின்பற்றப்படுவது கவலையளிக்கின்றது. ஐ.நா. குழு இது குறித்த விபரங்களை பகிர்ந்துகொள்ள மறுப்பது - விசாரணைகள் குறித்து பொதுமக்கள் தகவல்களை பெறமுடியாமலிருப்பதை புலப்படுத்துகின்றது.
ஐ.நா. விசாரணை குழு தாங்கள் பெறவிரும்பும் தகவல்களை தரக்கூடிய நபர்களுடன் மாத்திரம் தொடர்பாடல்களை மேற்கொள்ள விரும்புகின்றது என்ற உணர்வு இதன் மூலமாக ஏற்படுத்தப்படுகின்றது.
குறிப்பிட்ட விசாரணையாளர்கள் தாங்கள் அடையவிரும்பும் முடிவிற்கு அவசியமான தகவல்களை மாத்திரம் பெற முயலும் பக்கச்சார்பான அணுகுமுறையைக் கண்டிக்கின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார்

### இரு

அதனை எவரும் பார்ப்பதில்லை.
மூலப் பிரதிப் பத்திரத்தில் மாற்றங்கள் செய்து கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மாகாண சபை எடுக்கும். அதனுடைய ஒரு குழுவாக மாகாண பொதுக் கணக்குகள் குழு விசாரணை மேற்கொண்டுள்ளது. உடனடியாக அந்த நிதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உத்தியோகத்தர்கள் தொடர்பில் ஆராயப்பட்டுக் குற்றச்சாட்டுப் பத்திரங்கள் தயாரிக்கும் நடவடிக்கைக்காக உரிய ஒழுக்காற்றுநடவடிக்கைக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு அவை அனுப்பி வைக்கப்படும்- என்றார்.

(த-4)

### இடம்பெயர்ந்

விண்ணப்பப் படிவங்களை மாவட்ட தேர்தல் அலுவலகத்திலோ அல்லது கிராமசேவை உத்தியோகத்தர்களின் அலுவலகங்களிலோ பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் கூறியுள்ளார்.
விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் மேன்முறையீடு செய்வதற்கு எதிர்வரும் 14ஆம் திகதி வரை அவர்களுக்கு கால அவகாசம் வழங்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (த-22)

### பதுளை

வும் கூறியுள்ளது. அவர்களை அரசு எதுவித இடையூறும் இல்லாது எம்மிடம் தந்தால் பராமரிக்கத் தயார். இதுவரை 50 வீதமானவர்களின் செலவைப் பொறுப்பேற்பதாகப் பலர் கூறியுள்ளனர். ஏனையவர்களின் செலவுக்கும் ஏற்பாடு செய்வோம்-என்றார்.

(த-4)

### கிழக்கில்

வர் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பனங்காட்டைச் சேர்ந்த 56 வயதுடைய ஆறுமுகம் இராசதுரை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:- வயல் காவலில் ஈடுபடும் குறித்த நபர் அயலில் உள்ள வயல் காவலாளிகளுடன் உணவருந்திவிட்டு யானையின் நடமாட்டத்தை அவதானிப்பதற்காகச் சென்றுள்ளார். யானை வருவதை அவதானித்த அவர் அதனை விரட்டுவதற்கு முயன்றபோது கோபம் கொண்ட யானை அவரைத் தாக்கியுள்ளது. குறித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். தாக்குதலுக்குள்ளானவரை யாரும் மீட்காத வண்ணம் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் யானை அந்த இடத்திலேயே நின்றுள்ளது. பின்னர் இராணுவத்தினர், அயல் வயல் காவலாளிகள் ஆகியோரின் நீண்ட நேர முயற்சியின் பின்னரே சடலம் மீட்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் உயிரிழந்தவரின் உடல் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில் குறித்த பிரதேசத்தின் பல பகுதிகளிலும் வயல் காவலில் ஈடுபட்டவர்கள் அச்சம் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-10)


### இறப்புச்

பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்தது. பதிவு செய்யப்பட்ட சாட்சிகளை அழைத்து விசாரணை மேற்கொண்டது. அத்துடன் புதிய பதிவுகளையும் ஏற்று, அவர்களையும் விசாரணைக்கு அழைத்து வந்தது.
தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டாவது தடவையாகவும் ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. இதன் போதும், புதிய பதிவுகள் மேற்கொள்வதற்கு பெருமளவிலான மக்கள் வருகை தருகின்றனர்.
இந்தநிலையில் புதிய பதிவுகள் மேற்கொள்ள வருபவர்களிடம், இறப்புச் சான்றிதழ் பெற விருப்பமா என்று ஆணைக்குழுவால் கேட்கப்படுகின்றது. இறப்புச்சான்றிதழ் பெற்றுக்கொண்டால் அதனூடாக நட்டஈடு பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர்களுக்கு கூறப்படுகின்றது. இதற்கு சம்மதிப்பவர்களுக்கு உடடியாகவே, ஆணைக்குழுவால் கடிதம் வழங்கப்படுகின்றது.
இறப்புச்சான்றிதழ் பெறுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதால், அதனை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு குறித்த பிரதேச செயலாளரைக் கோரும் கடிதம் மக்களிடம் வழங்கப்படுகின்றது.
இதனால் புதுப் பதிவு மேற்கொள்ள வந்த பலர், இறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு சம்மதித்து, ஆணைக் குழுவின் கடிதத்தைப் பெற்றுக் கொண்டதைக் காண முடிந்தது.
இதேவேளை, காணாமற்போனோர் அமர்வு இடம்பெறும் அதே தினங்களில், பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் இறப்புச் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையை கடந்த காலங்களில் மேற்கொண்டிருந்தனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து தற்போது இதனை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் மேற்கொள்வதில்லை. ஆயினும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட அதே நடவடிக்கையை காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு தற்போது முன்னெடுத்துள்ளது. (ந-5)

### கூட்டமைப்பு

திராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராஜா, ஈ.சரவணபவன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன், எஸ்.வினோநோகராதலிங்கம் மற்றும் கிழக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) ஆகியோர் கலந்துகொண்டனர்,
முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம், பொதுச் செயலாளர் எம்.ரி.ஹசனலி, சட்டத்தரணி ஏ.எம்.பாயிஸ் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.
இரு மணித்தியாலங்கள் நடைபெற்ற இந்தச் சந்திப்பு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் நேற்றிரவு கருத்துத் தெரிவிக்கையில்,
"இந்தச் சந்திப்பு ஆக்கபூர்வமாக - விசுவாசமாக அமைந்தது. சமகால அரசியல் நிலைமைகள், தமிழ் - முஸ்லிம் உறவு உட்பட பல்வேறு விடங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினோம். எதிர்வரும் காலத்திலும் இரு தரப்பினரிடையே சந்திப்புக்களை நடத்துவதற்கு இதன்போது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எனவே, நாம் தொடர்ந்தும் ஆக்கபூர்வமான பேச்சுக்களை நடத்தவுள்ளோம்.
இந்தப் பேச்சின்போது தமிழ் - முஸ்லிம் மக்களிடையே காணப்படும் சிறுசிறு பிணக்குகளைத் தீர்த்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்துவோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையில் கடந்த காலங்களில் பல பேச்சு நடைபெற்று வந்தது. ஆனால், அண்மைக்காலங்களாக அதனைத் தொடரமுடியாத நிலைமை காணப்பட்டது. இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சுகளை ஆரம்பித்துள்ளது"- என்று தெரிவித்தார். (ந-சி)

# அச்சுறுத்தும் 1000 அடி நீள கண்ணாடிப் பாலம்





சீனாவின் யுனான் மாகாணத்தில் கண்ணாடிப் பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது. 1,000 அடி நீளம் கொண்ட இந்தப் பாலமொன்று, மூன்று கால்பந்து மைதானங்களைக் கடக்கும் அளவுக்கு நீளமானது. பாலத்தின் அடிப்பகுதி கண்ணாடியால் அமைக்கப்பட்டு, 600 அடிக்குக் கீழே தென்படும் காட்சிகளைப் பார்த்துக் கொண்டே செல்லும் விதத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது. சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்த்து வருகிறது இந்தக் கண்ணாடிப் பாலம். உயரத்தைக் கண்டு பயப்படுகிறவர்களுக்கு கண்ணாடியில் கால் வைத்தவுடன், பயத்தில் கால்கள் தொடர்ந்து நடக்க மறுக்கவும் செய்கிறதாம்.

## வடமராட்சியில் வெள்ளைப்பூரான் தொல்லை



வடமராட்சி, நவ.6

வடமராட்சி பகுதியில் மீண்டும் வெள்ளைப் பூரான்களின் தொல்லை அதிகரித்துள்ளது. சில தினங்களுக்கு முன்னர் மந்திகைப் பகுதியில் ஈ.பி.டி. அமைப்பின் வடமராட்சி பொறுப்பாளரும் பிரதேச சபைத் தலைவருமான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரனுக்கு வெள்ளைப்பூரான் கடித்து பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

அதனைஅடுத்து தற்போது மழைகாலம் நிலவுவதால் மீண்டும் வெள்ளைப் பூரான்கள் படைஎடுக்கலாம் என்று பொதுமக்கள் மத்தியில் அச்சம் தெவிக்கப்பட்டுளளது. சில வருடங்களுக்கு முன்னர் அந்தப்பகுதியில் பலர் வெள்ளைப்பூரான்களுக்கு இலக்காகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-173)

# நாடற்ற 10 மில்லியன் பேருக்கு 10 வருடங்களில் விமோசனம்

நியூயோர்க், நவ.6

உலகில் தற்போது 10 மில்லியன் நாடற்றவர்கள் இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ள நிலையில்ஐ.நாசபையின்அகதிகளுக்கான பிரிவான - அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் இன்னமும் 10 வருடங்களுக்குள் அவர்களுக்கு விமோசனம் அளிக்கும் விதத்தில் நாடற்றவர்கள் என்று எவரும் இல்லாத நிலையை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது. அத்துடன் இதற்கான பரப்புரையையும் விரைவில் ஆரம்பிக்க வுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

உலகில் தற்போது வளர்ந்து வரும் பிரச்சினையாக நாடற்றவர்களின் அவலம் கணிக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் சுமார் 10 மில்லியன் பேர் தாம் தங்கியுள்ள நாடுகளில் பிரஜாவுரிமையோ அல்லது கடவுச் சீட்டோ அற்றவர்களாக விளங்குகின்றனர்.

அவர்களுக்கு மருத்துவ வசதி, கல்வி மற்றும் வாக்குரிமை போன்ற அரசியல் உரிமைகள் பரவலாக மறுக்கப்பட்டு வரும் நிலை இன்னமும் நீடித்து வருகின்றது. இந்த நிலையில் இந்தப்பிரச்சினை உலக அரசியல் தலைவர்களின் சிறு நடவடிக்கைகள் மற்றும் அரசியல் முடிவுகளால் தீர்க்கப்பட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இந்த 10 மில்லியன் நாடற்ற மக்களும் தாம் அனுபவிக்கும் அவலநிலையைத்தமது வருங்கால சந்ததிகளுக்கும் கடத்தாமல் தடுப்பதும் மிக முக்கியமான தேவை என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதாவது அகதி முகாம்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு அவர்கள் பிறக்கும் நாட்டின் குடியுரிமையோ அல்லது தாயகத்துக்குத் திரும்பிச் செல்வதற்கான வாய்ப்போ கிடைப்பதில்லை. இதை விட மியன்மாரின் ரோஹிங்கியா முஸ்லிம்கள் போன்ற பூர்வீக சிறுபான்மை இனத்தவர்களுக்கும் பல காரணங்களுக்காக குடியுரிமை மறுக்கப்பட்டு வருகின்றது.

மேலும் தமிழர்கள் அதிகமான அளவில் நாடற்ற நிலையில் வாழும் இடமாக மலேசியா விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் உலகம் முழுதும் சுமார் 27 நாடுகளில் பெண்கள் தமது குடியுரிமையைத் தமது குழந்தைகளுக்கு வழங்குவதற்கு அனுமதி மறுக்கப் படுவ தாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை உலகிலுள்ள சில நாடுகள் இந்தப்பிரச்சினையைத் தீர்க்கப் போதுமான நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் குறித்த நிறுவனம் சுட்டிக் காட்டி யுள்ளது.

உதாரணமாக முன்னாள் சோவியத் குடியரசின் அங்கத்துவ நாடாக இருந்த கிர்கிஸ்தான் கடந்த 5 வருடங்களில் 65000 பூர்வீக ரஷ்யர்களுக்கு குடியுரிமை அளித்துள்ளதைக் கூற முடியும். இந்தநிலையில் ஐ.நா. சபை 1954 ஆம் ஆண்டு நாடற்றவர்களை தத்தெடுக்கும் சாசனத்தையும் 1961 இல் நாடற்றவர்கள் எண்ணிக்கையைக் குறைக் கும் சாசனத்தையும் நடைமுறைப்படுத்தியிருந்தது. ஆனால் அதற்குப் பின்னர் இவ்விவகாரத்தில் போதுமான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படவில்லை என்று அந்த நிறுவனம் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

## மணி விழா

யாழ்ப்பாணம், நவ.6

நெல்லியடி மத்தியகல்லூரி அதிபர் செல்லத்துரை சேதுராஜாவின் மணிவிழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வட மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன் தலைமையில் கல்லூரி கலையரங்கில் இடம்பெறவுள்ள.

நிகழ்வில் வாழ்த்துத்துரைகளை பல்வேறு துறை சார்ந்த பிரமுகர்கள் கலந்து கொண்டு வழங்க உள்ளனர். தொடர்ந்து மணி விழா நாய கன் குறித்த மணிவிழாநூல்ஒன்றும்வெளியிடப்பட வுள்ளது. தொடர்ந்து வெளியீட்டுரைகள் கலை நிகழ்வுகள் என்பனவும் இடம் பெற உள்ளதாக ஏற்பாட்டு குழுவினர் அறிவித்துள்ளனர். (வ)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் உடுபுடைவைகள் அன்பளிப்பு

வடமராட்சி, நவ.6

முதியோர், மாற்றுவலுவுடையோர்களுக்கு வழங்குவதற்கென தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலங்களுக்கு உடுபுடைவைகளை வழங்கியுள்ளது.

பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலங்கள் நடத்திய முதியோர் தின விழாக்களில் வைத்து தெரிவு செய்யப்பட்ட முதியோர் களுக்கும் மாற்றுவலுவுள்ளோர்களுக்கும் என தலா 20பேர்களுக்கான உடுபுடைவைகளை ஆச்சிரமம் அன்பளிப்பாகக் கையளித்துள்ளது. (வ-173)



# 1100 பெண்கள் ஒன்றுகூடி எடுத்த செல்ஃபி போட்டோ

### கின்னஸ் சாதனை முயற்சி

ஜெய்ப்பூர், நவ.6

பெண்களுக்கான அதிகா ரத்தை வலியுறுத்தும் வகையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் ஒன்று கூடி செல்ஃபி எனப்படும் சுயப்படம் எடுத்துக்கொள்ளும் நிகழ்ச்சி ராஜஸ்தானில் நடைபெற்றது.

கடந்த 30 ஆண்டுகளில் ஒரு கோடியே 20 ஆயிரம் பெண் குழந்தைகள் கருவிலேயே அழிக்கப்படுவதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. அது மட்டுமல்லாது, பெண் சிசு கொலை, முறையான சிகிச்சையின்றி நோய் காரணமாக உயிரிழத்தல் உள்ளிட்ட காரணங்களால் பெண்களின் விகிதாசாரம் குறைந்து வரு கிறது. 1961 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி ஆயிரம் ஆண்களுக்கு 976 பெண்கள் இருந்தனர்.

ஆனால், 2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்போது, அந்த எண்ணிக்கை 919 ஆகக் குறைந்தது.

இந்தநிலையில், பெண்களின் அதிகாரம், பெண் குழந்தைகளுக்கு கல்வி வழங்குதல் உள்ளிட்டவைகளை மையக் கருத்தாகக் கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் பிரமாண்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய் யப்பட்டது. தொண்டு நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த நிகழ்ச்சியில், சுமார் 1100 பெண்கள் ஒன்று கூடி செல்ஃபி எடுத்துக்கொண்டனர்.

இந்தப் பிரமாண்ட சுய படம் எடுத்துக் கொள்ளும் நிகழ்ச்சி கின்னஸ் சாதனை முயற்சியாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (வ)

# கண்டி- யாழ். இடையே வார இறுதி ரயில் சேவை

### நடத்துவதற்கு திணைக்களம் நடவடிக்கை

கொழும்பு, நவ.6

கண்டியிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான வார இறுதி கடுகதி ரயில் சேவை ஒன்றை நடத்துவதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

சனிக்கிழமை காலையில் கண்டி ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் குறித்த ரயில் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தைச் சென்றடைந்து பின்னர் ஞாயிறு காலை யாழ்ப்பாணத்தில் இருந்து மீளவும் கண்டியைச் சென்ற டைய வுள்ளதாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவிக்கிறது.

கண்டி - யாழ்ப்பாணம் வரையிலான ரயிலை விட மேலதிகமாக கொழும்புக்கும யாழ்ப்பாணத்துக்குமிடையில் இரவு ரயில் சேவை ஒன்றையும் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாகவும் ரயில்வே திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது கொழும்பு- யாழ்ப்பாண்த்துக்கு இடையில் பயணிக்கும் இரவு தபால் ரயிலுக்குப் பின்னர் சேவையில் ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள இந்த இரவு ரயில் கொழும்புக்கோட்டையில் இருந்து திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் புறப்பட வுள்ளதுடன் ஞாயிறு, செவ்வாய் மற்றும் வியாழக் கிழமைகளில்பகல்பொழுதில்யாழ். ரயில் நிலையத்தில் இருந்து புறப்படுமெனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

பயணிகளின் கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு குறித்த இரு ரயில்களையும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு ரயில்வே திணைக்கள பொது முகாமையாளரான விஜய அமரதுங்க பணித்துள்ளதோடு விரைவில் அந்த இரு ரயில் சேவைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கொழும்பு மற்றும் கல்கிஸையில் இருந்து தினமும் 4 ரயில்களும் மற்றும் மாத்தறையில் இருந்து வார இறுதியில் ரயில் ஒன்றும் யாழ்ப்பாணத்துக்குப் பயணிக்கிறது. (வ-22)

CMYK

# கூட்டமைப்பு - சஜின் வாஸ் சபையில் கடும் வாக்குவாதம்

கொழும்பு, நவ. 6

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ்குணவர்த்தனவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் சபையில் நேற்றுக் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் அவரது உரை முடிவடையும்வரை இந்தச் சொற்போர் நீடித்தது.

நாடாளுமன்றம் நேற்றுக் காலை 9.30 மணிக்குச் சபாநாயகர் சமல்ராஜபக்ஷ தலைமையில் கூடியது. ஆரம்பகட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்ததும் குழுநிலை விவாதம் ஆரம்பமானது. முதலில் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு மீதான விவாதம் நடைபெற்றது.

அதன் பின்னர் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மீதான வரவு-செலவுத்திட்டக் குழுநிலை விவாதம் நடைபெற்றது. இதில் உரையாற்றிய சஜின் வாஸ் குணவர்த்தன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது குற்றச்சாட்டுகளை அடுக்கிக்கொண்டே சென்றார். அத்துடன், வடக்கில் அரசு முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளையும் அவர் பட்டியலிட்டார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் விதம், இரு தரப்புப் பேச்சு ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி இதற்கு ஒத்துழைப்பு வழங்காமல் மக்களை கூட்டமைப்பு தவறாக வழிநடத்துகின்றது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டனர். எனினும், ஒலிவாங்கி முடுக்கிவிடப்படாததால் அவர்கள் வெளியிட்ட கருத்துகள் தெளிவாகப் புரியவில்லை. சம்பந்தன், மாவை சேனாதிராசா, அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஈ.சரவணபவன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு ஆட்சேபனை வெளியிட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை இடையிடையே வாக்குவாதத்தில் ஈடுபட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனும் ஆசனத்தில் இருந்து எழும்பி ஆவேசமாகக் கருத்து வெளியிடுவதைக் காணமுடிந்தது. இறுதியில் சஜின் வாஸுக்கு ஆதரவாக அஸ்வர் எழுந்தார். எனினும், சஜின் வாஸுக்கான பேச்சு நேரம் முடிவடைந்து விட் டது. கடைசியாக கூட்டமைப்புக்கு எதிராக மக்கள் அணி திரள்வார்கள் என்று கூறிவிட்டுத் தமது உரையை முடித்தார் சஜின் வாஸ் குணவர்த்தன.

அதேவேளை, சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றிய பிரதியமைச்சர் சரத் வீரசேகர, கூட்டமைப்பு தடைசெய்யப்பட வேண்டும் என வலியுறுத்தி அந்தக் கட்சிக்கு எதிராகக் கருத்து வெளியிட்டார். இதனால் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அதன் பின்னர் உரையாற்றிய பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனும் கூட்டமைப்பை விமர்சித்துக் கருத்து வெளியிட்டார். (த)

# 7ஆயிரம் லஞ்சம் பெற்ற சப் இன்ஸ்பெக்டர் கைது

கொழும்பு, நவ. 6

கந்தானை பொலிஸ் நிலையத்தில் பதில் போக்குவரத்துப் பொறுப்பதிகாரியாகப் பணிபுரிந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் 7 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்ற குற்றச்சாட்டில் இலஞ்ச ஊழல் மற்றும் துஷ்பிரயோக விசாரணை ஆணைக் குழு அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தானை பொலிஸ் வலயத்துக்கு உட்பட்ட பகுதியில் விபத்துக்குள்ளான ஓட்டோ ஒன்றைப் பொலிஸ் நிலையத்திலிருந்து விடுவிப்பதற்கும் அந்த விபத்து சம்பந்தமான வழக்கு விசாரணைகளை அந்த ஓட்டோச் சாரதிக்குச் சாதகமாக முடிப்பதற்கும் இவர் 7 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகக் கேட்டுள்ளார். இதனையடுத்துச் சாரதி ஆணைக்குழுவுக்கு செய்த முறைப்பாட்டையடுத்து லஞ்சப் பணம் கைமாறும் போது சந்தேக நபர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 6.20 மணியளவில் கந்தானை பொலிஸ் நிலையத்தில் வைத்து இந்தப் பணம் கைமாறியபோதே ஆணைக்குழு அதிகாரிகளிடம் அவர் பிடிபட்டுள்ளார்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார். (த-4)

# நகர அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு நிறைவேற்றம்

கொழும்பு, நவ. 6

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு 103 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றில் நேற்று நிறைவேற்றப்பட்டது. ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக 115 வாக்குகளும், எதிராக 12 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினரான அஜித் குமாரவும் ஒதுக்கீட்டுக்கு எதிராக வாக்களித்தனர். ஆளுந்தரப்பினர் ஒதுக்கீட்டுக்கு ஆதர வாக வாக்களித்தனர். இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி என்பன வாக்களிப்பில் பங்கேற்க வில்லை. (த)




பதுளை மீரியபெத்த மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென யாழ். வணிகர் கழகத்தினால் யாழ்ப்பாண வர்த்தகர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஒரு தொகை உடு புடைவைகள் மற்றும் உலர் உணவுப் பொதிகள் என்பன நேற்றுப் புதன்கிழமை வடக்கு மாகாண சபை அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் யாழ். வணிகர் கழகத்தின் சார்பில் தலைவர் இ.ஜெயசேகரன், செயலாளர் இ..ஜனக்குமார் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர் கேசவன் ஆகியோர் பங்குபற்றினர். (த-10)

# 'திருநெல்வேலி ரெட்' வெங்காயம் அறிமுகம்

யாழ்ப்பாணம், நவ.6

திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் விருத்திசெய்யப்பட்ட 'திருநெல்வேலி ரெட்' என்ற புதிய வெங்காய இனம் நாளை வெள்ளிக்கிழமை அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளதாக ஆராய்ச்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி ரி.கருணைநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

'திருநெல்வி ரெட்' என்ற புதிய இனச் சின்ன வெங்காயம் ஆராய்ச்சி நிலையத்தினால் விருத்திசெய்யப்பட்டு பின்னர் பேராதனை விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இந்த புதிய இன விதை வெங்காயத்தை பயிரிட்டால் விவசாயிகள் 50 தொடக்கம் 60 நாள்களில் விளைச்சலைப் பெற முடியும்.

இந்த 'திருநெல்வேலி ரெட்' என்ற புதிய இன வெங்காயத்தை பயிரிட ஆர்வமுள்ள விவசாயிகள் ஆராய்ச்சி நிலையத்துடன் உடன் தொடர்பு கொண்டு அதனைப் பெற்றுக் கொள்ள முடியும் - என்றார். (த-17)

# வவுனியா சிறைக் கைதி வைத்தியசாலையில் சாவு

யாழ்ப்பாணம், நவ. 6

வவுனியா சிறைச்சாலையில் இருந்த விளக்கமறியல் கைதி ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார். அவரது சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காசோலை மோசடி தொடர்பில் கொழும்பு கொட்டாஞ்சேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவர் பிணையில் விடுவிக்கப்பட்டபோதும் உறவினர்கள் எவரும் முன்வராத காரணத்தால் அவர் தொடர்ந்து வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் அவருக்குச் சுகவீனம் ஏற்பட்டதாக வவுனியா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இரவு அனுமதிக்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி இரவு 10 மணியளவில் அவர் உயிரிழந்தார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த செ.ஜோப்கிரி வண்ணன் (வயது - 55) என்பவரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4-402)

# பேரழிவை சந்தித்த மக்களுக்கு உதவிகள் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பானம், நவ 6

கடந்த வாரம் மலையகத்தில் ஏற்பட்ட மண் சரிவினால் பேரழிவைச் சந்தித்துள்ள உறவுகளுக்கு உதவியளிக்க முன்வருவோர் அவற்றைத் தம்மிடம் வழங்கலாம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

இது குறித்து அந்த முன்னணி விடுத்துள்ள அறிக்கையில்,

கடந்த இரு நூற்றாண்டுகளாக தேயிலைத் தோட்டங்களிலும், ஏனைய பெருந்தோட்டங்களிலும் அன்றாடக் கூலிகளாய் துயரம் நிறைந்த வாழ்வையே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் மண்சரிவு என்னும் இயற்கை இடர் அவர்களது வாழ்வை மேலும் அதல பாதாளத்தினுள் தள்ளியுள்ளது.

இந்த இடரினால் 300 இற்கும் அதிகமான எம் தமிழ் உறவுகள் மண்ணில் புதையுண்டு உயிரிழந்துள்ள துடன், நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தும் உள்ளனர். மேலும் பெருமளவான சிறார்கள் தமது தாயை, தந்தையை அல்லது இருவரையும் இழந்து நிர்க்கதியாகியுள்ளனர். அனைத்து மக்களுமே தமது மனைகள், சொத்துடைமைகள், வாழ்வாதார மூலங்கள் அனைத்தையும் இழந்து வீதிக்கு வந்துள்ளனர்.

எனவே தாயக மக்களையும், புலம்பெயர் தமிழ் மக்களையும், தமிழகத் தமிழ் உறவுகளையும் மலையக தமிழ் மக்களுக்காக உதவிகளை வழங்கி அந்த மக்களின் மீள் எழுச்சிக்கு உதவுமாறு உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம். உதவிகளைப் பொருள்களாகவோ அன்றி பணமாகவோ வழங்கலாம் -என்றுள்ளது. (த)

# வடதாரகையால் சிரமம்

யாழ்ப்பாணம், நவ.6

குறிகாட்டுவான் துறைமுகப் பாலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வடதாரகை படகினால் நெடுந்தீவில் இருந்து வரும் பயணிகள் படகைத் துறைமுகப் பாலத்தில் நிறுத்தி பயணிகளை இறக்குவதில் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

படகில் வரும் பல்வேறு தரப்பினரும் தம்முடன் எடுத்துவரும் பொருள்களையும் கொண்டு வடதாரகையில் ஏறி அதில் இருந்து பாலத்துக்கு இறங்க வேண்டியுள்ளதாகவும், கடல் நீர் மட்டம் தற்போது கூடியுள்ளதால் துறைமுகப் பாலத்துக் குச் சமாந்தரமாக இல்லாது பாலத்தில் இருந்து வடதாரகை படகு உயர்ந்து நிற்பதால் நோயாளர்கள், முதியவர்கள் பாலத்தில் இறங்கும் போது கஷ்டங்களுக்கு உள்ளாவதாகவும் கூறப்படுகின்றது. கடந்த ஒரு வாரமாக இந்தப் படகுதுறைமுகப் பாலத்தில் தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-7)


## அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு

பருத்தித்துறை பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினால் 04.11.2014 நடாத்தப்பட்ட அதிஸ்டலாபச் சீட்டிழுப்பில் பின்வரும் இலக்கங்கள் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மேற்படி இலக்கங்களுக்குரிய வெற்றியாளர்கள் 30 நாள்களுக்குள் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

முதலாம் பரிசு : 05021 இரண்டாம் பரிசு : 13567

மூன்றாம் பரிசு : 29712

ஆறுதல் பரிசில்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. 03298 | 2. 22907 | 3. 07087 | 4. 22936 |
| 5. 07293 | 6. 28453 | 7. 04740 | 8. 07942 |
| 9. 10436 | 10. 10456 | | |

தலைவர்
ஊழியர் நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(C-17563)(10)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## பராமரிப்பாளர் (பெண்) தேவை

வயோதிபத் தாய் ஒருவரை நன்கு பராமரிக்கக் கூடிய 40 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் உடனடியாகத் தேவை. இரவு பகல் நேரம் தங்கி நிற்பவரும் விரும்பத்தக்கது.

சம்பளம் நேரில் பேசித்தீர்க்கலாம்.

(53790)
(45.6)

தொடர்பு: 077 845 2932


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.